கல்கி

KALKI 24.10.1976 75 காசு



சத்துமிகுந்த, சுவையான
பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்



வளரும் குழந்தைகளுக்கு
சுவையான துணை

பிரிட்டானியா

பிஸ்கட்டுகள் மிகச் சிறந்தவை

பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள் அருமையான தனிச் சுவையோடு மேம்பட்டு விளங்குவது ஏன்? சத்துச் செறிந்த ஆரோக்கியமான குணச்சிறப்பே காரணம். ஆசையோடு குழந்தைகள் அவற்றை விரும்பிச் சுவைத்து வளருகின்றனர்! பிரிட்டானியா க்ளாக்ஸோ பிஸ்கட்டுகள்— வளரும் குழந்தைகளுக்குச் சுவையான துணை.

லின்டாஸ்-BBC.GLX 6-140 TM




பெடல் மிதிக்காமல் ஓடும்...
பயணத்தில்
உற்சாகம் கூடும்!

புதிய ராலீ என்ஜின்
RT 35
இணைத்திடவே—
உங்கள் சைக்கிள்
தானே
இயங்கிடுமே!

சைக்கிளுக்கென்றே, தனிப்பட்ட முறையில் டிஸைன் செய்யப்பட்ட
ராலீ என்ஜின் RT 35 அதிக மைலோட்டம் அளிக்கிறது.

சீரிய சிறப்பியல்புகள்:

- எளிதான, எடை குறைந்த, கையடக்கமான என்ஜின்— இந்த வகையில் இந்தியாவில் கிடைப்பது இது ஒன்றுதான்.
- சைக்கிளில் எவ்வித மாற்றமும் இன்றி பொருத்தலாம்.
- எரிபொருள் செலவு கிலோமீட்டருக்கு 4 காசுகள் மட்டுமே.
- பராமரிப்புக்கு, பெரும்பாலும் இடம் வைக்காதது.
- நீங்கள் விரும்பும்போது, பெடல் செய்யவும் வசதி கொண்டது.



ராலீ என்ஜின் RT35

தயாரித்து விற்பனைக்கு விடுப்போர்:
ராலிஸ் இந்தியா லிமிடெட்
என்ஜினியரிங் பிரிவு
21, ரேவலின் ஸ்ட்ரீட்,
பம்பாய் 400 001

U-RE-6 TAM (R)

ராலி இஞ்சின் RT - 36 டீலர்கள் Bicycle Application

தமிழ்நாடு:

1. அக்ரோ இஞ்சினியர்ஸ் & டிரேடர்ஸ், 11/87, வெங்கடசுவாமி ரோடு ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர் - 641 002
2. லக்ஷ்மி இஞ்சினியரிங் கார்ப்பொரேஷன் 13, பிஷப் ஹீபர் பில்டிங்ஸ் மேல புலிவார் ரோடு, திருச்சி - 2
3. யூனியன் டிரேடர்ஸ் காங்கிரஸ் பில்டிங்ஸ், 111, மவுண்ட் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை-6
4. நவ்ராஜ் டையிங்ஸ் & கெமிகல்ஸ் 10, எம்.பி.எஸ். ரோடு, வேலூர் - 632 004



CHAITRA-SP-01 TAM

டிஸ்ட்ரிபியூட்டர்கள்: M/s. இண்டோகெம் லிமிடெட், ஈமானி பில்டிங்
52-54, ரத்தன் பஜார், சென்னை - 600 003. போன்: 37602



இலவசம்
85 கிம்.
Turkish Bath
Luxury Soap
டர்கிஷ் பாத் லக்ஸரி சோப்
அதிக சிக்கனமான பிஜ்
வழங்கும் மிகச் சிறந்த வாய்ப்பு.
FREE Turkish Bath
BIZ
CLEANING POWDER
WITH SUPER DETERGENT
Net Wt. 3 Kg.
Made in India
GODREJ SOAPS PVT. LTD.
A Godrej PRODUCT
ஒவ்வொரு
3 கிலோ
பிஜ் வாங்கும்
போது.
பிஜ்
கோத்ரெஜ்
தயாரிப்பு
பல-பயன் கொண்ட துலக்கும் பவுடர்—அனைத்தையும் துப்புரவாக்கும். பளிச்சிடும் வெண்மை, பளபளக்கும் ஒளி!
முந்துங்கள்!
சரக்குகள் இருக்கும் வரையே சலுகை!
CMGS-78-303 TM


எல்.ஐ.ஸி.யின்

'கிரம முன்னேற்றப் பாதுகாப்பு'

(ப்ரோக்ரெஸிவ் ப்ரொடெக்ஷன்)

பாலிஸி

வருடங்கள் செல்லச்செல்ல அதிக மதிப்பைத் தருகிறது.



எல்ஐஸி ஒரு புரட்சிகரமான புதிய பாலிஸியை அளிக்கிறது. காலத்திற்கேற்ப இப்பாலிஸியும் அதிகப்பலனளிக்கிறது. 'கிரம முன்னேற்றப் பாதுகாப்பு' பாலிஸியில் வருடங்கள் செல்லச் செல்ல அதிகப் பாதுகாப்புக்கான ஏற்பாடு உள்ளடங்கியிருக்கிறது.

நீங்கள் ரூ. 10000 க்கு ஒரு பாலிஸி எடுக்கிறீர்களென்று வைத்துக் கொள்ளுங்கள். 5 வருடங்களுக்குப் பின் இந்தப் பாலிஸித் தொகை தானாகவே ரூ. 15000/- ஆகிவிடுகிறது. கூடுதலான ப்ரீமியமோ வழக்கமான விகிதப்படிதான். ஆனால் மருத்துவப் பரிசோதனை எதுவும் கிடையாது. அதே போன்று 10 வருட இறுதியில் உறுதி செய்யப்பட்ட தொகை ரூ. 20000/- ஆகிவிடுகிறது. அதாவது அதன்பிறகான ஆயுள் பாதுகாப்பு மற்றும் பாலிஸி காலம் முடிந்தபின் முதிர்ச்சியடைந்த தொகையைப் பெற. பாலிஸிகாலத்தை நீங்கள் வேண்டியபடி 20, 25, 30 அல்லது 35 வருடங்களுக்கு என்று தேர்ந்தெடுக்கலாம். முன்னேற்றத்தில் அக்கறையுள்ள இளவயதினருக்கு இது ஓர் உத்தமமான பாலிஸியாகும். வருவாய் அதிகரிப்பதுடன் இவர்களது குடும்பத் தேவைகளும் பொறுப்புகளும் அதிகரிக்கின்றன. குடும்பப் பாதுகாப்புக்கு இவர்களுக்கு மேலும் மேலும் அதிகமான இன்ஷ்யூரன்ஸ் தேவைப்படுகிறது.

'கிரம முன்னேற்றப் பாதுகாப்பு' பாலிஸி நீங்கள் இதுகாறும் எதிர் நோக்கி இருந்த பாலிஸியாகும். விபரங்களுக்கு உங்கள் எல்ஐஸி ஏஜெண்டை அணுகவும்—இன்றே.

வளமான எதிர்காலத்திற்கு வழி வகுக்கிறது


லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்போரேஷன் ஆப் இந்தியா

டெலிராட் வழங்கும் விழாக்கால வாழ்த்துக்கள்!

இந்தியாவின் மிகச் சிறந்த ரேடியோக்களைத் தயாரிப்போர்.


ஆர்பி 102

மீடியம் வேவ், பாக்கெட் டிரான்ஸிஸ்டர். நிலையங்களைக் கச்சிதமாகக் கவர்ந்திழுக்கும். 2 பென்லைட் செல்களில் இயங்குகிறது—ரூ. 85




ஆர்பி 213

சிறிய, ஆனால் சக்திவாய்ந்த 2-பாண்டு போர்ட்டபிள். எழிலான உலோக கிரில் கொண்டது. மீடியம் வேவ் மற்றும் 16 மீ. முதல் 60 மீ. வரையிலுள்ள எல்லா சிற்றலை நிலையங்களைக் கேட்கலாம். 3 பெரிய செல்களில் இயங்குகிறது—ரூ. 185




ஆர்பி 216

இணையற்ற 2-பாண்டு போர்ட்டபிள். 4 கடுத்தர சைஸ் செல்களில் இயங்குகிறது—ரூ. 165



ஆர்பி 223

கெட்டக் குத்தலான டயல் கொண்ட, எழில் கொஞ்சும் 2 பாண்டு போர்ட்டபிள். உள்ளே தள்ளக்கூடிய கைப்பிடி கொண்ட மோல்டெட் கேபினெட். 16 மீ. முதல் 60 மீ. வரையுள்ள சிற்றலை நிலையங்களை ஈர்க்கும். 3 பெரிய செல்களில் இயங்குகிறது—ரூ. 165



ஆர்டி 302 டீலக்ஸ்


3 பாண்டு ஏஸி மெயின்ஸ் ரேடியோ. தொடர்ச்சியான டோன் கண்ட்ரோல். பாலியெஸ்டர் ஃபினிஷ் கொண்ட எழிலான கேபினெட். எக்ஸ்டென்ஷன் ஸ்பீக்கர் மற்றும் ஃபோனோ பிக்-அப்புக்காக ஸாக்கெட்டுகள்—ரூ. 410



ஆர்டி 423 எஸ்

4 பாண்டு மெயின்ஸ் ரேடியோ. பிக்-அப் மற்றும் டேப் ரெகார்டருக்காக ஸாக்கெட்டுகள். பியானோ கீ ஸ்விட்சுகள் கொண்ட விண்வெளி யுக மாடல்—ரூ. 675





டிடி 3171



டிஸி 5037



ஏபி 02



ஏஆர் 30

எல்லா விலைகளிலும் எக்ஸைஸ் மற்றும் உள்ளூர் வரிகள் சேர்க்கப்படவில்லை.

TELERAD

ஸாராபாய் எலெக்ட்ரானிக் ரிஸர்ச் சென்டரின் தொழில்நுண்ணறிவின் ஆதரவு பெற்றது

Shilpi TR-17A/76 Tam.

போர்ட்லாண்ட் போஸ்ஸோலானா சிமெண்டு

மிகச் சிறந்ததற்கு நிகர்

ஏஸிஸியின் போர்ட்லாண்ட் பொஸ்ஸோலானா சிமெண்டு சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்டின் எல்லா இயல்புகளும் கொண்டிருப்பதோடு சில சிறப்புத் தகுதிகளும் உடைய அசல் உயர் ரக சிமெண்டாகும். ஆகவே, அதை சாதாரண போர்ட்லாண்ட் சிமெண்டை உபயோகிக்கும் எல்லா வேலைகளுக்கும் உபயோகிக்கலாம்.

இதன் காவிவண்ணச்சாயல், உற்பத்தியில் இதனோடு சேருகின்ற பொஸ்ஸோலானாவினால் உண்டாகும் அவ்வண்ணம் திண்ணமாகக் குறையாகாது. பொஸ்ஸோலானா சிமெண்டு குடியிருப்புக கட்டடங்கள், தொழிற்சாலைகள், ரீ-இன்ஃபோர்ஸ்டு காங்க்ரீட் கட்டுமானங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படும் மிகச்சிறந்த பொதுநோக்கு சிமெண்டாகும். அணைகள், பாலம் தாங்கிகள், நீர்தடுப்புச் சுவர்கள் போன்ற பெரிய கான்க்ரீட் வேலைகளுக்கு தனிப் பொருத்தமுள்ள சிமெண்ட் இது.

போர்ட்லாண்ட் பொஸ்ஸோலானா சிமெண்டுக்கான இந்தியத்தர நிர்ணய விதிமுறைகளின் குறைந்தபட்சத் தேவைகளை மிஞ்சியுள்ளது ஏஸிஸி போர்ட்லாண்டு பொஸ்ஸோலானா சிமெண்டு; சாதாரண சிமெண்டைவிட நீர்புகாத்தன்மை அதிகம், அதோடு பயன்படுதிறனிலே மேம்பட்டது. எனவே பிளாஸ்டர் வேலைகள் மற்றும் மேற்பரப்பிடுதல் ஆகியவற்றை விரைவாகவும் எளிதாகவும் செய்ய உதவுகிறது.

தட்டாமல் நாடுவீர் பொஸ்ஸோலானா சிமெண்டு. தயாரிப்போர் ஏஸிஸி என்றால் தரத்திற்கு அதுவே உறுதி

தி அஸோஸியேடெட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

ஏஸிஸி

உயர்தர சிமெண்டுக்காக உங்களுக்கு உத்தரவாதம்

ACC.1297


ஆழ்ந்து குணமாக்கும்
அமிர்தாஞ்சன் டெர்மல்
ஆயின்ட்மென்ட், படை, சொரி
நமைச்சல் போன்ற பல
சாதாரண சருமத்தொல்லை
களைத் தீர்க்கும் சக்தி மிக்க
நிவாரணி. இன்றே
ஒன்று வாங்குங்கள்!
Amrutanjan Ltd's
dermal Ointment
for
RINGWORM · ECZEMA ETC.
அமிர்தாஞ்சன்
டெர்மல் ஆயின்ட்மென்ட்
அமிர்தாஞ்சன் லிமிடெட்
14/15 லஸ் சர்ச் ரோடு
சென்னை 600 004
உங்கள்
சருமத்தை
பாதுகாத்துக்
கொள்ளுங்கள்

SAA/AM/1905



கல்கி

1976

அக்டோபர் 24

நள ஆண்டு ஐப்பசி 8

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

போடு புதிர்!

இரண்டு ரயில்கள் ஒரே நேரத்தில் புறப்படுகின்றன. ஒன்று மதுரையிலிருந்து சென்னைக்கு மணிக்கு 60 கி. மீ. வேகத்திலும் மற்றொன்று சென்னையிலிருந்து மதுரைக்கு மணிக்கு 50 கி. மீ. வேகத்திலும் மாலை எட்டு மணிக்குப் புறப்படுகின்றன. சில மணி நேரங்களில் இரண்டும் ஓரிடத்தில் சந்திக்கின்றன. எந்த ரயில் சென்னைக்கு அருகில் இருக்கும்?

—க. மதலைக்கனி

விடை: இரண்டும் சென்னையிலிருந்து ஒரே தூரத்தில்தான் இருக்கும்.

ஒரு குளத்தில் பூக்கள் பூக்கின்றன. முதல் நிமிடத்தில் பூக்கும் பூக்கள் அடுத்த நிமிடத்தில் இரண்டு மடங்கு ஆகின்றன. இரண்டு மணி நேரத்தில் குளம் முழுவதும் பூக்கள் மலர்ந்து விடுகின்றன. எந்த நேரத்தில் குளத்தில் பாதி அளவு பூக்கள் நிறைந்திருக்கும்?

—பி. எஸ். லக்ஷ்மி

பதில்: ஒரு மணி 59 நிமிடம்.


ஆடையில்
பெண்மையின்
இழையோடும் போது
பெண்மைப் பேரழகு
புன்னகை புரியும்!
நிச்சயமாக, மபத்லால் க்ரூப்
அளிப்பவை நேர்த்தியான
துணிமணிகள்தான்!
MAFATLAL GROUP
TM

சொல்ல வேண்டிய சில!

சராசரியில் ஓர் ஆண்டில் விமான விபத்துக்களில் மடிபவர்களைக் காட்டிலும் சாலை விபத்துக்களில் இறப்பவர்களின் எண்ணிக்கை பல மடங்கு அதிகம்.

உலகில் அன்றாடம் பறக்கின்ற எத்தனையோ பல விமானங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் மூன்று லட்சத்தில் ஒரு விமானப் பயணத்தின்போதோ அல்லது அதற்கும் குறைவாகவோ தான் விபத்து ஏற்படுகிறது.

இத்தகைய சமாதானங்கள் இருப்பினும் ஒரு விமான விபத்து என்னும்போது நாம் விசனப்படுவது போல் அந்த அளவுக்கு வேறு எந்த விபத்தும் நம்மைப் பாதிப்பதில்லை. காரணம் விமானங்களில் பறப்பவர்கள் தேசத்தின் சமூக வாழ்வில் பல துறைகளிலும் முன்னணியில் இருப்பவர்கள். அவர்கள் மரணத்தால் தேசத்துக்கு ஏற்படும் இழப்பு மிக அதிகம். மற்றொரு காரணம் விமான விபத்துக்களின் பயங்கரத் தன்மை. மலையில் மோதி நொறுங்கினாலும் சரி, எரிந்து சாம்பரானாலும் சரி, விமானம் உருக் குலைவதோடு பயணிகளின் உடல்களும் ஒரு சில விநாடிகளுக்குள் சொல்லி முடியாத துன்பத்துக்கு உள்ளாகின்றன. அடையாளம் கண்டு பிடிப்பதுகூடச் சிரமம் என்னுமளவில் கருகித் தீய்ந்து....அப்பப்பா ! நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் துடிக்கிறது.

சமீபத்திய இந்தியன் ஏர்லைன்ஸ் விமான விபத்து எப்படி நேர்ந்தது என்பதை ஆய்ந்தறிய விசாரணைக் கமிஷன் நியமித்துள்ளது அரசு. அதன் முடிவுகள் வெளியானதும் இந்தியன் ஏர்லைன்ஸ் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

வேறு ஒரு விபத்து குறித்தும் விசாரணைக் கமிஷன் தேவை. அந்த விபத்து பொதுவாகவே நம்மிடம் உள்ள ஒரு குறைபாடு. அதற்கு விசாரணைக் கமிஷன் நமது மனச்சாட்சியாகவேதான் அமைய முடியும். அந்தக் குறைபாடு என்ன? 'திறப்பு விழா பிரமாதம்; பராமரிப்பு பரிதாபம்' என்பதுதான். கார் ஆகட்டும், பஸ்ஸாகட்டும், ஒரு தொழிலாகட்டும், ஹோட்டலாகட்டும் ஆரம்ப விழாவின்போது இருக்கும் உற்சாகம் போகப் போக இருப்பதில்லை. ஒரு மெத்தனம் குடிகொண்டு பராமரிப்பைப் பாதிக்கிறது.

'புதிதாகக் கட்டிய ஹோட்டலில் சென்ற ஆண்டு தங்கியிருந்தேன். ரொம்ப வசதியாக இருந்தது; அதே ஹோட்டலில் இந்த ஆண்டு தங்கினேன்; ஏமாற்றம் அடைந்தேன்' என்று கூறும் அயல்நாட்டுப் பயணிகள் பலர் உண்டு.

இந்த மெத்தனத்தை நம்மிடமிருந்து நீக்கி எதையும் புதிது போலவே பராமரிக்கும் பண்பு பெற வேண்டும்.

□ □ □

ஆங்கிலத்தின் அவசியத்தை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திப் பேசியுள்ளார் பிரதமர்: 'ஆங்கிலத்தைப் புறக்கணித்தோமானால் புதியதொரு ஏற்றத் தாழ்வை உண்டாக்கியவர்களாவோம். ஆங்கிலம் அறிந்தவர் என்ற முற்பட்ட வகுப்பினரையும் ஆங்கிலம் அறியாதவர் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினரையும் சிருஷ்டி செய்தவர்களாவோம். அகில உலக அரசியல், வர்த்தகத் தொடர்புகளுக்கும் புதிய விஞ்ஞான முன்னேற்றங்களை அறிவதற்கும் ஆங்கிலம் இன்றியமையாதது.'

யதார்த்த நோக்கில் இப்படிப் பிரதமர் பனிச்சென்று பேசியிருந்தும்கூட பூசாரி வரம் கொடுக்காத கதையாக ஹிந்தி ஆதரவாளர்கள் அபத்த யோசனைகளையும் அர்த்தமற்ற கருத்துக்களையும் தெரிவித்து வருகிறார்கள். நாட்டுக்கு நேரக்கூடிய தீங்குகளை எண்ணிப் பாராமல் பேசுகிறார்கள்.

பள்ளி மாணவர் ஆங்கிலப் பரீட்சையில் தேறாவிட்டாலும் பாதகமில்லை, மேல் வகுப்புக்குப் போகலாம் என்பது ஒரு யோசனை. மத்திய கல்வி அமைச்சரவையே இந்த அழகான கருத்தைத் தெரிவித்திருக்கிறது. தேசிய ஒருமைப்பாடு மகாநாடு என்றும் தென் மாநில ஆட்சி மொழி கருத்தரங்கு என்றும் சிலர் கூடி முறையே எல்லாப் பல்கலைக் கழகங்களிலிருந்தும் காரியாலயங்களி

கல்கி மலர் 36 இதழ் 13

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

குந்தும் ஆங்கிலத்தை அறவே நீக்கிவிட வேண்டும் என்று அசட்டுத் தீர்மானங்கள் போட்டுள்ளனர்.

தமிழகம் தவிர மற்ற மாநிலங்களுக்கெல்லாம் மத்திய அரசின் உத்தரவுகளை இனி ஹிந்தியிலேயே அனுப்புவது என்று ஏற்கனவே முடிவாகியுள்ளது. மத்திய அரசின் இத்தீர்மானம் தமிழகத்தை நேரடியாகப் பாதிக்கா விட்டாலும் சுற்றி வளைத்துப் பாதிக்கவே செய்யும்.

ஆங்கிலம் அந்நிய மொழி என்ற எண்ணத்தை நீக்கி உலக மொழி என உணர்ந்து அதனைத் தீவிரமாகப் பயில ஆரம்பப் பள்ளி முதலே ஊக்கம் அளிக்க வேண்டும். அதன் மதிப்பைக் குறைப்பது உலக உறவுப்பாட்டுக்கும் சரி, தேசிய ஒருமைப்பாட்டுக்கும் சரி ஊறு விளைவிக்கும்.

பிரதேச மொழிகள் எல்லாமே வளர்ச்சி பெற உதவுவது போல் அதே அளவுக்கு ஹிந்தி வளர்ச்சியிலும் ஈடுபாடு காட்டுவதை யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை.

□ □ □

ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தில் இனி பிரார்த்தனைகள் இராதாம்! 1976ம் ஆண்டின் மிகப் பிரமாதமான ஜோக் இது தான். மதச் சார்பின்மை நமது அரசின் கொள்கையாம்! வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தில் பல மதங்களைச் சேர்ந்தவர்கள் படிக்கிறார்களாம். அதனால் இனி பிரார்த்தனையே வேண்டாமாம்! மதச் சார்பின்மை என்பது எல்லா மதங்களையும் சமமாக மதிப்பது என்றுதான் அர்த்தமாகுமேயொழிய, இறை உணர்வே கூடாது என்பதல்ல. குறிப்பிட்ட ஒரு மதக் கடவுளைப் பிரார்த்திப்பது பிடிக்கவில்லையென்றால் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற கருத்தில் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துவிட்டுப் போகலாம். அதைவிடுத்து எந்த ஆண்டவன் அந்தப் பல்கலைக் கழகத்துக்குப் படியளக்கிறானோ அவனையே புறக்கணிக்கத் தீர்மானித்து விட்டார்கள்! ஸ்ரீ வெங்கடேசுவரா பல்கலைக் கழகத்தின் இந்த முடிவைவிடப் பெரிய ஜோக் ஒன்று உண்டென்றால் அது, அதே பல்கலைக் கழகம் இனி எந்த விழாவிலும் தேசிய கீதம் பாடுவதில்லை என்று முடிவெடுத்திருப்பதுதான்!

ஏழுமலையான் தான் இவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்க வேண்டும்.

□ □ □

மாசேதுங்கின் மரணத்துக்குப் பிறகு செஞ்சீனத்தில் பதவிப் போராட்டம் ஆரம்பமாகிவிட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பதவியை மாவுக்குப் பிறகு ஹூவா அடைந்துள்ள போதிலும் போராட்டம் முடிந்து விட்டதாகக் கருதுவதற்கில்லை. ஹூவா, தம்மை எதிர்த்த நாற்பது பேர்களைச் சிறைப்படுத்தியுள்ளார். இவர்களுள் மா சே துங்கின் மனைவியாரும் ஒருவர்!

கம்யூனிஸ சர்வாதிகார ஆட்சியில், ஒரு தலைவர் காலமான பிறகு இப்படிப் பதவிப் போராட்டம் நடப்பதில் அதிசயம் ஒன்றும் இல்லை. நடக்காமலிருந்தால்தான் ஆச்சர்யம்.

சர்வாதிகாரியாக விளங்கும் ஒருவர் தம்மிடமே எல்லா அதிகாரங்களையும் குவித்துக் கொண்டு ஆட்சி நடத்தும் போது அவருக்குப் பின் யார் என்ற கேள்விக்கு இறுதி வரை பதில் கிடைப்பதில்லை. எனவே, அவர் காலமான பிறகு ஆட்சி அமைதியாகத் தொடருவதில்லை. பலப் பரீட்சை, அடக்குமுறை எல்லாம் நடக்கக் காண்கிறோம்.

ஜனநாயகம் ஒன்றிலேதான் ஒரு கட்சி மக்களின் நம்பிக்கையை இழந்தால் அமைதியான ஆட்சி மாற்றத்துக்கும் ஒரு தலைவர் எக்காரணத்தாலாவது பதவி இழந்தால் அமைதியான முறையில் ஆட்சி தொடர்வதற்கும் வகையும் வாய்ப்பும் உண்டு. இதையெல்லாம் யோசித்துப் பார்த்து ஜனநாயக அமைப்பைப் பெற்றுள்ள நாம் எவ்வளவு பாக்கியசாலிகள் என்பதை உணர வேண்டும். அதனைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்க உறுதி பூணவும் வேண்டும்.

□ □ □

அரசியல் சாசன 44வது மாறுதல் மசோதாவின் 59வது ஷரத்து அரசியல் சாசனத்தைத் தேவையானபடி மாற்றக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் வழங்குகிறது. இது அளவு கடந்த அதிகாரத்தைக் குடியரசுத் தலைவருக்கு வழங்குவதாகும்.

'குடியரசுத் தலைவர் அப்படியொன்றும் அதிகார துஷ்பிரயோகம் செய்துவிடமாட்டார்' என்று சட்ட அமைச்சர் கூறுகிறார். ஆனால் பிரச்னை, சட்ட அமைச்சர் மனத்தில் என்ன இருக்கிறதுஎன்பதல்ல. சாசனமாறுதல் மசோதா என்ன கூறுகிறது என்பதுதான்.

'அரசியல் சாசனத்தை மாற்றப் பாராளுமன்றத்துக்கு முழு உரிமை வேண்டும்; பாராளுமன்றம் செய்யும் மாறுதலை நீதிமன்றங்கள் மதிக்க வேண்டும்' என்று இதுகாறும் வாதாடி வந்தார்கள். ஆனால் இப்போதோ அதே பாராளுமன்ற அங்கத்தினர்கள் தங்களுக்குள்ள இந்த அதிகாரத்தைத் தங்கத் தட்டில் வைத்துக் குடியரசுத் தலைவரிடம் சமர்ப்பித்துவிடப் போகிறார்கள். குடியரசுத் தலைவரோ பிரதமரைத் தலைவராகக் கொண்ட மத்திய அமைச்சரவைக் குழுவின் ஆலோசனைப்படி நடக்கவேண்டியவராகிறார்.

அரசியல் சாசனத்தை மாற்றும் அதிகாரத்தைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் சாசனத்திடமிருந்தேதான் பெறுகிறார்கள். அந்த அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்தலாமேயன்றி அந்த அதிகாரத்தை வேறு ஒருவரிடம் வழங்க அவர்களுக்கு உரிமை சட்டபூர்வமாக இல்லை. எனவே 59வது ஷரத்து, அரசியல் சாசன 44வது மாறுதல் மசோதாவிலிருந்து நீக்கப்பட வேண்டும்.

ராஜாஜி சிந்தனை

அதிகார போதை

கரும்பு அல்லது திராட்சையில் இருக்கும் சர்க்கரை மதுவாகிறது எல்லாருக்கும் தெரியும். அதுபோலத்தான் காந்திஜி காலத்திய தேச பக்தி, பதவி மோகமாகவும் அதிகார ஆசையாகவும் மாறிவிட்டது. மது உடலுக்கு ஊட்டம் அளிப்பதாகச் சிலர் தவறாகக் கருதுகிறார்கள். அது போலவே அரசியல் அதிகாரம் என்பது தேச பக்தி, தேச சேவை என்கிற வேஷங்களைப் போட்டுக் கொள்கிறது.


— ராஜாஜி நினைவு மலர்


சீனா
அதிகாரத்திற்கான உட்பூசல்
சுகாடியா
தமிழ்நாட்டில் மாவட்டங்களுக்கிடையே இருந்த நெல் நடமாட்டத் தடை நீக்கப்பட்டுள்ளது!
'க.வெ.க' ஆரம்பிப்போம்! கட்சிகளிலிருந்து வெளியேற்றப்பட்டோர் கழகம்!
மதி
எஸ்.எஸ்.ஆர்.

ஜீவகாருண்யம்

(26)

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



திவசம், தர்ப்பணம் முதலான பித்ரு காரியங்களும் பரோபகாரத்தைச் சேர்ந்தவை தான் என்று நிறையச் சொல்லியாயிற்று. சிராத்தம் முதலானவை பித்ருக்கள் எங்கே, எப்படிப்பட்ட ஜன்மா எடுத்திருந்தாலும் அங்கே அவர்களுக்குத் திருப்தி உண்டாக்கும் என்று சொன்னேன்.

ஒருத்தர் செத்துப் போனவுடனே பித்ரு லோகம் போய் விடுவதில்லை; இன்னொரு ஜன்மா எடுத்துவிடுவதில்லை. இறந்துபோனவனின் ஜீவன் ஒரு வருஷம் பிரயாணம் பண்ணித்தான் பித்ரு ஸ்தானத்தை அடைகிறது. இதை நம் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற மாதிரியே கிரீக் மைதாலஜி முதலான மதாந்தரங்களிலும் சொல்லியிருக்கிறது. ஜீவன் வைதரணி நதியைக் கடந்து யம பட்டணம் போக வேண்டும் என்று நாம் சொல்கிற மாதிரியே அவர்களும் ஒரு நதியை (Styx) சொல்லி அதைத் தாண்டி மறு லோகத்துக்குப் (Hades) போக வேண்டும் என்கிறார்கள். நாம் சொல்கிற மாதிரியே யம பட்டணத்தில் இருக்கிற காவல் நாய் போல அவர்களும் ஒன்றைச் (Cerberus) சொல்கிறார்கள். ஒரு ஜீவன் பரலோகம் செல்வதற்குப் பிடிக்கிற இந்த ஒரு வருஷத்தில்தான் அதன் திருப்திக்காக மாஸா மாஸம் சில சடங்குகளைச் செய்வது. இம்மாதிரி பரலோக யாத்திரையில் வழிக்குணவு தருவதைக்கூட இதர மதங்களிலும் சொல்லியிருப்பதாகக் கேட்டிருக்கிறேன். பிள்ளை குட்டி இல்லாதவர்களுக்கும் நாம் கயை, பதரி போன்ற இடங்களில் பிண்டம் போடுவது போலவே, கிறிஸ்தவர்களும் (All Souls Day) என்று ஒரு நாளில் எல்லா ஆத்மாக்களின் திருப்திக்காகவும் வழிபாடு நடத்துகிறார்கள். லோகம் பூராவும் இப்படி ஒரு நம்பிக்கை, அபிப்பிராயம் இருக்கிறது என்றால் அது சத்தியமாகத்தான் இருக்க வேண்டும்.

பித்ரு காரியங்கள், 'உத்தரகிரியை' என்ற பேரில் எல்லா ஜாதிக்காரர்களும் செய்யும் அபரகாரியங்கள் ஆகியன யதோக்தமாக நடக்கச் சௌகரியம் செய்து தர வேண்டும். இதிலே முதலில் வருவது பிரேத ஸம்ஸ்காரம் – அதாவது இறந்து போனவரின் உடலை அவரவர் குலாசாரப்படி தகனமோ, அடக்கமோ செய்வது. இது ரொம்பவும் அவசியமான கர்மா.

ஒரு கேள்வி தோன்றும். உடம்பைவிட்டுப் போன ஜீவனின் திருப்திக்காக சிராத்தம் முதலானவை செய்வது பரோபகாரம் என்றால் சரிதான். ஆனால் ஜீவன் (உயிர்) போன இந்த வெறும் உடம்புக்கு எதற்கு ஸம்ஸ்காரம் என்று தோன்றலாம். சாஸ்திரங்களிலோ தகனம் பண்ணுவதை 'அந்த்யேஷ்டி' — அந்திய இஷ்டி — அதாவது 'இறுதியான வேள்வி' என்றே ரொம்பவும் உயர்த்திச் சொல்லியிருக்கிறது. கருத்தரிப்பதிலிருந்து ஒரு ஜீவனை ஒவ்வொரு பருவத்திலும் எப்படி சுத்தி பண்ண வேண்டும் என்பதற்காக சாஸ்திரங்களில் நாற்பது சம்ஸ்காரங்களைச் சொல்லியிருக்கிறது. 'ஸம்ஸ்—காரம்' என்றால் 'நன்றாக ஆக்குவது' என்று அர்த்தம். ('நன்றாக ஆக்கப்பட்ட' பாஷைதான் 'ஸம்ஸ்கிருதம்'.) உபநயனம், விவாகம் ஆகிய எல்லாமே ஜீவனை அந்தந்த நிலையில் பக்குவப்படுத்துவதற்காக ஏற்பட்ட ஸம்ஸ்காரங்கள்தான். வாழ்நாள் முழுவதையும் வேள்வியாக ஈச்வரனிடம் ஆஹுதி செய்து கொண்டே இருக்கிற ரீதியில் இந்த நாற்பது ஸம்ஸ்காரங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. வேள்விதான் 'இஷ்டி'. இஷ்டம் — பூர்த்தம் என்று பல தடவை சொன்னேனே, அதிலே வருகிற 'இஷ்டம்' இதுதான். இப்படி வாழ்க்கையையே யாகமாகச் செய்கிற போது கடைசியில் நாற்பதாவதாக வருகிற யாகம்தான் — அந்திய இஷ்டி — பிரேத ஸம்ஸ்காரம். எந்த உடம்பை வைத்துக் கொண்டு பாக்கி யக்ஞங்களை ஒருத்தன் பண்ணினானோ, அந்த உடம்பையே சிதாக்னி (சிதைத் தீ)யில் ஹோமம் பண்ணிவிடுவதுதான் இது. பிரேத ஸம்ஸ்கார மந்திரங்களில் அப்படித்தான் சொல்லியிருக்கிறது. ஹவிஸ், பலி முதலான மற்ற ஹோமத்துக்குரிய வஸ்துக்களை நெய்யினால் சுத்தி செய்து அக்னியில் போடுகிற மாதிரித்தான் பிரேதத்தையும் சுத்தம் பண்ணி, தகனம் செய்யச் சொல்லியிருக்கிறது. உடம்பு ஈச்வரனுக்கு அர்ப்பணம் பண்ணப்படுகிறது.


இதைப் பற்றி இன்னும் கொஞ்சம் விரிவாகச் சொல்கிறேன். (தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

ஆசைக்கோர் அளவில்லை!

சி. சுப்பிரமணியம்

—பாரத நிதி அமைச்சர்—



நிலவுலகம் மிகப் பெரியது. அதனினும் பெரியது அதைச் சூழ்ந்துள்ள கடல். அக் கடலில் எப்போதும் அலைகள் எழுந்தவண்ணம் இருக்கும். அதனால்தான் அதனை அலைகடல் என்று கூறுகிறோம்.

கடலில் எழுகின்ற அலைகள் எண்ணற்றவை. இரவு பகல் என்றில்லாது கடலில் அலைகள் மோதிக் கொண்டேயிருக்கும். அவை தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக எழும். அதற்கு ஓய்வும் உறக்கமும் கிடையாது. இதை ஒத்ததுதான் மனிதன் மனத்திலே எழுகின்ற ஆசைகள்.

மனிதன் மற்ற உயிர்களைவிட உயர்ந்தவன். ஆறறிவு படைத்தவன். இன்ப வாழ்க்கை வாழ விரும்புகிறான். ஆனால் அவன் மனத்தில் எழுகின்ற ஆசை என்னும் அலையால் வாழ்வில் அலைப்புண்டு துன்பப்பட்டு உழல்கிறான்.

ஆசை வலையில் சிக்கிய உள்ளத்துக்கு அமைதி கிடையாது. எதனைப் பெறினும் திருப்தி ஏற்படுவதில்லை. ஒன்றைப் பெற்றதும் மற்றொன்றின் மேல் ஆசை எழும். அதையும் பெற்றதும் அதற்கு மேல் ஒன்றின் மேல் ஆசை வரும். இப்படிக் கடல் அலைகள்போல் ஒன்று மாறி ஒன்றாக ஆசை வர மன நிம்மதி இன்றி மனிதன் அல்லலுற்றுத் துன்பப்படுகிறான்.

இதனைத்தான் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நம் திருமூலர் பெருமான், "ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பம்" என்று ஓதினார்.

ஆசைச் சுழலில் துன்பப்படுகிறவர்களில் ஏழை பணக்காரர் என்ற வேறுபாடு இல்லை. பொதுவாக ஏழைகளைவிடப் பணக்காரர்களே அதிகமாக அதிருப்தி உடையவர்களாயிருக்கிறார்கள். ஏழை லட்சாதிபதியாக மாற வேண்டும் என்று ஆசைப்படுகிறான். லட்சாதிபதியோ கோடீசுவரனாக வேண்டும் என்று ஆசைப்படுகிறான். அவன் விரும்பியது போலவே கோடீஸ்வரனாக ஆகிவிட்டாலும் அவனது ஆசை அந்த அளவில் நின்று விடுகிறதா? ஆசைக்குத்தான் அளவேது? எல்லை ஏது? அவன் மேலும் மேலும் ஆசையைப் பெருக்கிக் கொண்டு துன்பப்படுகிறானே தவிர குன்றாத நிதியைப் பெறினும் திருப்திப் படுவது கிடையாது.



கோடீசுவரன் தன்னுடைய வருமானத்தை அடுத்தவனுடைய வருமானத்தோடு ஒப்பிடுகிறான். தன் வருமானம் 50 சத விகிதம் உயர்ந்த போது அடுத்தவனுடைய வருமானம் 60 சத விகிதம் உயர்ந்திருந்தால் இவனுக்கு இயல்பாக வரவேண்டிய திருப்தி மறைந்து போகிறது. இதனால் மனிதனுடைய திருப்தி தான் பெற்றவற்றைப் பொறுத்து அமையவில்லை என்றாகிறது. தன் உடைமையையும் தன் அந்தஸ்தையும் மனிதன் மற்றவன் உடைமையோடும் அந்தஸ்தோடும் வைத்து அளந்து பார்க்கிறான். அதனால் விளைவது அவனுக்குப் பொறாமையும், அதிருப்தியும், மகிழ்ச்சி இன்மையும்தான்.

ஆசை பெருகப் பெருக மகிழ்ச்சி குறைந்து போகும். அதனால்தான் நம் பெரியோர்கள் ஆசையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கூறினார்கள். ஆசையை விட்டால் உலகில் மகிழ்ச்சியாகவும் மனக் குறைவின்றியும் வாழலாம் என்றும் போதித்தார்கள்.

"ஆசை விடவிட ஆனந்தமாமே"

என்றார் திருமூலர்.

"இன்பம் இடையறாது ஈண்டும் அவா என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்"

என்றார் திருவள்ளுவர் பெருமான்.

இன்றைய நிலை என்ன?

இன்று மனிதன் விஞ்ஞான அறிவிலும் தொழில் நுட்பத் துறைகளிலும் உயர்ந்து நிற்கிறான். விஞ்ஞானம் தொழில் நுட்ப அறிவுகளை நன்கு பயன்படுத்திப் பல மேற்கத்திய நாடுகள் செல்வத்தாலும் பொருள் வளத்தாலும் மிகவும் செழித்து வாழ்கின்றன. அந்நாடுகள் தொழில்களை யந்திர மயமாக்கி, உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கிக் குவித்து வருகின்றன. உற்பத்தி பெருகப் பெருக அப்பொருள்களை விற்பதற்கு வழி தேட வேண்டும் அல்லவா? எனவே பொருளை உற்பத்தி செய்து குவிப்பவர்கள் தங்கள் பொருள்களை மக்கள் வாங்க வைப்பதற்காக அவர்களது ஆசையைத் தூண்டுவதற்கான எல்லா வழிகளையும் கையாள்கிறார்கள். போக வாழ்வின் மீது ஆசையைத் தூண்டி விட்டால்தான் மக்களிடையே தங்கள் பொருள்களை விற்க முடியும். ''போதும் என்ற மனமே உயர்ந்தது'' என்ற நிலையை மக்களிடம் போதித்தால் பொருள்கள் எப்படி விற்பனையாகும்?

ஆசையைத் தூண்டும் விளம்பரங்கள்

பொருள்களை உற்பத்தி செய்பவர்கள் தங்கள் பொருள்களைப் பற்றிப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்கிறார்கள். அந்த விளம்பரங்களைக் கவர்ச்சியாக அமைக்கிறார்கள். பொருள்களைப் பற்றிய விளம்பரங்களைப் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் கடைகளின் முன்னாலும் மக்கள் மனத்தைக் கவரும் வகையில் காட்சிக்கு வைக்கிறார்கள். ஆசையைத் தூண்டும் வகையில் வசனங்களும் சித்திரங்களும் எழுதி வைக்கப்படுகின்றன. சுவரொட்டி முதலான இதர விளம்பர சாதனங்களிலும் சுகபோக ஆசைகளைத் தூண்டும் அத்தனை வாசகங்களையும் காணலாம். அப்பொருளில்லா விட்டால் வாழ்க்கையேஇல்லை என்ற உணர்ச்சியை ஊட்ட முயற்சி செய்கிறார்கள்.

உடை போன்ற சில பொருள்களுக்கு விளம்பரம் தரக் கவர்ச்சிக் கன்னிகளை வாடகைக்கு அமர்த்தி, அவர்களை விதவிதமான உடைகளை அணிந்து நடை போடச் செய்து ஆசையைத் தூண்டும் ஒரு காட்சியை இன்று அநேகமாக எல்லா இடங்களிலும் நடத்துகிறார்கள்.

இப்படி மனத்தைக் கவரக் கூடிய விளம்பரங்களையெல்லாம் கண்டு மக்கள் தேவையில்லாத பொருள்களிலும் கூட ஆசையை வளர்த்துக் கொள்கிறார்கள். மக்கள் அவற்றை வாங்க முடியாதபோது மனம் உடைந்து கவலைப்பட்டு ஏங்குகிறார்கள். குன்றனைய செல்வம் உடையோரும் கூடத் தாயுமானார் கூறியது போல் ஆசைக்கோர் அளவில்லாமல் தேவைகளைப் பெருக்கிக் கொண்டுஒன்று போக ஒன்றின் மேல் ஆசைப்பட்டு அவ்வாசைகள் பூர்த்தியடையாமல் நெஞ்சு புண்ணாகி நொந்து போகிறார்கள்.





ஆசையை வளர்ப்பதே ஒரு கலை

பொருள்கள் விற்றுக்கொண்டே இருக்க வேண்டுமானால் மக்களுக்குத் தங்களிடம் உள்ளது போதாதென்ற ஓர் அதிருப்தி நிலை எப்போதும் இருந்து கொண்டே இருக்கவேண்டும். ஆகவே பொருள் உற்பத்தி செய்வோர்கள் தேவையில்லாத பொருள்களையும் தேவை உள்ளது போலத் தோன்றச் செய்து மக்களுடைய ஆவலைத் தூண்டி விடுவதை இப்போது ஒரு கலையாகவே ஆக்கி வளர்த்து வருகிறார்கள்.

போதாக் குறைக்கு இன்று திரைப்படம் மனிதனின் புலன் உணர்ச்சிகளைத் தூண்டி விடும் கருவியாக விளங்குகிறது. காம இச்சையைத் தூண்டும் காட்சிகள் அதில் அதிகமாகக் காட்டப்படுகின்றன. இன்றைய இலக்கியங்கள், சிறுகதைகள், நாடகங்களிலும் ஆசையைத் தூண்டும் முறையில் பச்சை பச்சையாக விஷயங்கள் எழுதப்பட்டு வருகின்றன. கவர்ச்சியான முறையில் எழுதப்படும் புலன் நுகர்ச்சி விஷயங்கள் அடங்கிய புத்தகங்கள் மேற்கு நாடுகளில் ஏராளமாக வெளியாகின்றன. மொத்தத்தில் போக வாழ்வின் அடிப்படையில் எழுந்த ஒரு நாகரிகம் மேலை நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது.

மேல் நாகரிகத்தின் பின் விளைவுகள்

இந்த நிலையில் போனால் இதன் பின் விளைவுகள் யாதாகும் என்பதை அறிய நாம் மேற்கு நாட்டவரின் வாழ்க்கையிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

இன்று மேற்கு நாட்டவர்களில் பலர் மன நிறைவு ஏற்படாமல் தவித்து அது எங்கே எப்படிக் கிடைக்கும் என்று தேடி அலைகின்றனர். எதைச் செய்தால் மன நிறைவு ஏற்படும் என்ற வேட்கையில் பலர் பரதேசிகளாக (ஹிப்பீஸ்) வெளிக் கிளம்பிக் கட்டுப்பாடில்லாதபடி சுற்றித் திரிகிறார்கள். 'ஹரே ராமா ஹரே கிருஷ்ணா' இயக்கத்தில் சேர்ந்து வாழ்வில் அமைதி கிடைக்குமா என்று தேடுகிறார்கள். பலர் யோக முறைகளைக் கையாண்டு அமைதியைத் தேட முயற்சி செய்கிறார்கள்.

குற்றங்கள் மேலை நாடுகளில் இப்போது அதிகரித்து வருகின்றன. குடும்பத்தில் பாச உணர்வு நாளுக்கு நாள் தேய்ந்து வருகிறது. மனிதனை மனிதன் சார்ந்து வாழும் நிலை மாறி மனிதன் எந்திரத்தைச் சார்ந்து வாழ்கின்ற தன்மை அதிகமாகி விட்டதால், மனிதாபிமானம், நட்புத் தொடர்பு முதலியவைகளும் குறைந்து வருகின்றன. இளம் தலைமுறையினர் பலர் மன அமைதிக்காக என்று கூறிப் போதை மருந்துகளின் பழக்கத்துக்கு அடிமையாகி வருகிறார்கள். 'எதையும் அனுபவிக்கிற வாழ்க்கை', 'திறந்த மனப்பான்மை' என்ற கொள்கைகளால் ஆண் பெண்கள் நிலைதடுமாறிய ஒழுக்கக் கேடுகளை வளர்த்து வருகிறார்கள்.

இப்படி ஒழுக்க நலனுக்குத் தீமை விளைவிக்கும் தன்மையுடைய பொருளாதார உயர்வோ, வளர்ச்சியோ நமக்கும் வேண்டுமா?

மகாத்மா என்ன சொன்னார்?

இந்தப் பின் விளைவுகளையெல்லாம் மனத்தில் கொண்டுதான் மகாத்மா காந்தியடிகள் தீர்க்கதரிசனமாக உற்பத்திப் பெருக்கம் என்ற மனப் போக்குத்தான் உலகில் பல நெருக்கடிகளுக்கும் காரணம் என்றும், எந்த நாட்டுக்கும் பெரும் அளவில் எந்திரங்களை அமைத்துத் தொழில்மயமாக்கிவிடுவது அவசியமானதென்று தாம் நம்பவில்லை என்றும், இந்தியாவுக்கு அது அவசியமேயில்லை என்றும் கூறினார்.

இதைக் கேட்ட பலர் அன்று மகாத்மா காந்தியடிகளை விஞ்ஞானத்தின் எதிரி என்றும், அறிவியல் வளர்ச்சியை எதிர்க்கும் பழைமைவாதி என்றும் பலவாறாகத் தூற்றினார்கள்.

உண்மையிலேயே மகாத்மா அறிவியலுக்கு எதிரியல்ல. அவர் ஆட்சேபித்தது எந்திர மோகத்தை; எந்திரத்தை அல்ல. அவரே அதைப் பல தருணங்களில் விளக்கியிருக்கிறார். செல்வம் ஒருசிலரிடம் மட்டும் குவிவதற்குக் காரணமாயும், கோடிக் கணக்கானவர்கள் முதுகில் ஒருசிலர் மட்டும் ஏறிச் சவாரி செய்வதற்கு வழி வகுப்பதாகவும் இருக்கும் எந்திர மயத்தைத்தான் அவர் எதிர்த்தார். ஒழுக்க மதிப்புக்களை உதாசீனம் செய்யும் பொருளாதாரம் பொய்யானது என்றும் அப்படிப்பட்ட பொருளாதார உயர்வு பாபமானது என்றும் அவர் கருதினார்.

மகாத்மா காந்தியடிகளின் தத்துவமே சரியானது என்று இன்று மேலும் மேலும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ஆதலால் அவரை 'விஞ்ஞான யுகத்தின் ஞானி' என்று உலகம் மதித்துப் போற்றத் தொடங்கியுள்ளது.

மேல்நாடுகள் தரும் படிப்பினை

மேற்கத்திய நாடுகளின் போக்கால் ஏற்பட்ட விளைவுகளையும் பணத்தைத் தேடி அலையும் உலகாயதக் கொள்கையின் பைத்தியக்காரத் தனத்தையும் நாம் உணர வேண்டும். நாமே ஒன்றை அனுபவித்து அதன் நன்மை தீமைகளை அறிந்து கொள்வதை விடப் பிறருடைய அனுபவத்திலிருந்து நாம் செல்ல வேண்டிய வழியைத் தீர்மானிப்பதுதான் அறிவுடைமையாகும்.

பொருளாதார வளர்ச்சியை உண்டாக்கும் ஆரம்பக் கட்டத்தில் நாம் இப்போது இருந்து வருகிறோம். அந்தப் பொருளாதார வளர்ச்சி எந்த அடிப்படையில் அமைய வேண்டுமென்பதைப் பிற நாட்டினர்கள் படிப்பினையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

மேற்கிலிருந்து வருவதெல்லாம் மேன்மையானது என்று பின்பற்றிப் பின்பு அதன் தீய விளைவுகளிலிருந்து தப்ப முடியாமல் தவிப்பதைவிட முன்கூட்டியே அந்த மோகத்தைத் தடுத்துக் கொள்வது நல்லது.

இன்றைய யுகத்தின் நரகாசுரன்

ஒவ்வொரு யுகத்திலும் ஒரு நரகாசுரன் தோன்றுகிறான். மனித முன்னேற்றத்துக்கு எதிரியான எந்தத் தீமைகளையும் அறிவு கொண்டு அடக்கி ஒழிப்பதுதான் நரகாசுரனை அழிப்பது என்ற தீபாவளியின் தத்துவம்.

இன்றைய நரகாசுரன் 'போக வாழ்வின்மீது மோகம்' என்னும் கொடிய அரக்கனுவான். போக வாழ்வில் மனிதனுக்கு ஏற்படுகின்ற ஆசைகளுக்கு அளவேயில்லை. அதனால் வரும் துன்பங்களுக்கும் அளவில்லை. ஓர் ஆசை பூர்த்தியானால் நரகாசுரனின் மாயத் தலைகள் வளர்வது போல் மற்றும் பல ஆசைகள் வளரும். அந்த ஆசைகளைக் கட்டுப்படுத்தி அகற்றுவதென்ற விரதத்தை இந்தத் தீபாவளி நன்னாளன்று நாம் எல்லோரும் எடுத்துக்கொள்வோமாக! அதுவே புதிய நற்சமுதாயத்தை அமைப்பதற்கு வழி.

டின் ஆனாலும் சரி;
டன் ஆனாலும் சரி



ட்ராக்டர் — இந்தியாவின் அதிகமாக விற்பனையாகும் ஸிந்தெடிக் வாஷபிள் டிஸ்டெம்பர்

- ஒவ்வொரு முறையும் அதன் தரம் 50 முறைகள் ஆராய்ச்சிக் கூடத்தில் கடுமையாகப் பரிசோதிக்கப்படுகிறது.
- எளிதில் துடைத்துச் சுத்தம் செய்யலாம்.
- நிறம் அழகு குன்றாமல் தங்கி நிற்பதுடன் நீடிக்கக் கூடிய ப்ளாட் ஃபினிஷ் கொண்டது.
- வண்ணங்களில் எண்ணிலா ரகங்கள்.



கண்கூடான நன்மைகளைப் பெற, ட்ராக்டர் டிஸ்டெம்பர் பிரயோகிக்கு முன் டெகோப்ரைம் சிமெண்ட் ப்ரைமரை உபயோகியுங்கள்.

ஏஷியன் பெயின்ட்ஸ்

CMAP-2-183 tam







ஒளிரும் தீபமும்


தீபாவளியைக் கொண்டாடுகிற புனித மான சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்கு எனது நல்லெண்ணங்களையும் இதயபூர்வ மான வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

தமிழக மக்களுடன் இப்போது நான் தொடர்பு கொண்டிருப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன். இதற்கு முன்பு சுமார் நாலரை ஆண்டுகள் கர்நாடக, ஆந்திரப் பிரதேச மக்களுக்குத் தொண்டாற்ற எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. தமிழக மக்கள் உயர்ந்த பண்பாடுள்ளவர்கள், அமைதி விரும்புகிறவர்கள் என்பதைச் சென்ற சில மாதங்களில் அறிந்து கொண்டிருக்கிறேன்.

தீபாவளி, தீபத் திருநாள். இந்தச் சந் தர்ப்பத்தில் நாம் நமது உள்ளங்களில் தெய் வீக விளக்கைத் தூண்டிவிட்டு நமது தேசத் துக்கு மட்டற்ற பக்தியுடனும் விசுவாசத்துட னும் பணியாற்றுவோம். தொழில்வளர்ச்சி, பண்பாடு இவற்றில் பற்ற மாநிலங்களுக்கிடை யில் நமது உயர்ந்த ஸ்தானத்தைத் திரும்பவும் நிலைநிறுத்த முயல்வோம். அவநம்பிக்கையை நீக்கித் தன்னம்பிக்கை பெறுவோம். சோர்வை ஒழித்துச் சுறுசுறுப்படைவோம். அப்போது நாம் எந்தக் கஷ்டத்தையும் – ஏழ்மையோ வறட்சியோ எதுவானாலும் – அபாரமான தீரத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள முடியும்.

நமது தொன்மையான பாரம்பரியத்தில் வந்த பண்பாடு வேற்றுமையில் ஒற்றுமை காண்பதன் அடிப்படையில் அமைந்தது என் பதை நினைவில் கொள்வோம். இந்தியாவின் ஓங்கி நிற்கும் உயரிய குணம் யாதெனில், வாழ், வாழவிடு என்ற கோட்பாட்டினை ஏற்று அந்த ஆதாரத்தின் மீது சகிப்புத் தன்மையுடன் பரவலாக அனைத்துச் செல்கின்ற பான்மைதான்.

இந்தியாவின் பாரம்பரியம், பண்பாடு ஆகியவற்றின் உன்னத அம்சங்களுக்கு எடுத் துக் காட்டாகவே தமிழகம் விளங்குகிறது என்பது உண்மை. நமது வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் – உணவு, உடை, சமூக நடவடிக்கைகள் எல்லாம் – பகுதிக்குப் பகுதி வித்தியாசப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரே மாநிலத்தில்கூடப் பல கிளை மொழிகள் பேசப்படுவதைக் காண்கிறோம். என்னுடைய மாநிலமான ராஜஸ்தானை எடுத்துக் கொண் டாலும் இந்த உண்மையைப் பார்க்கிறோம். ராஜஸ்தானி மொழி என்பது இந்தோ ஆரிய கிளை மொழிகள் பலவற்றின் கூட்டாகும். அது, மேற்குப்புறம் ஸிந்தியும் மறுபுறம் குஜராத்தியும் ஹிந்தியும் எல்லைகளாக அமைந் திருக்க, இடையில் உருவாகி வளர்ந்த ஒன்று. இதே போல் வங்கம், உத்தரப்பிரதேசம், டெல்லி, பீஹார், குஜராத், மகாராஷ்டிரம் முதலிய பகுதிகளின் வாழ்க்கை முறைகள்




வெகுவாக வித்தியாசப்படுகின்றன. இருப்பினும் பௌதிக ரீதியிலும் இனப் பாகுபாட்டு அளவிலும் உள்ள இந்த மேலெழுந்தவாரியான வித்தியாசங்கள் முக்கியமல்ல; இவற்றைக் கடந்து ஏற்பட்டுள்ள ஒற்றுமையும் ஐக்கிய பாவமுமே அர்த்தமுள்ளதாகிறது. இந்த ஐக்கிய உணர்வு எப்படி ஏற்பட்டது?

பார்வைக்கு வித்தியாசப் பட்டிருக்கும் இந்திய மக்கள் சூழ்நிலைகள் காரணமாகப் பல தலைமுறைகளில் அற்புதமான ரசாயனக் கலவை என்று வர்ணிக்கத்தக்க ஒரு கூட்டுக் கலாச்சாரத்தை உருவாக்கிக் கொண்டனர்.

தென் இந்தியா அமரப் புகழ் பெற்ற மூன்று பெரிய ஆசாரியர்களை உருவாக்கியது. சங்கரர், ராமானுஜர், மத்வர். அவர்கள் இன்றைய கேரளம், தமிழ் நாடு, கர்நாடகம் ஆகிய தென் மாநிலங்களில் பிறந்திருப்பினும் அவர்களது உபதேசங்களில் கோயில் கொண்டிருக்கும் பெரும் செல்வமான தத்துவ உண்மைகளை நமது தேசத்தின் எல்லாத் திக்குகளிலும் தோன்றிய அவர்களது சீடர்கள் கரைத்துக் குடித்தார்கள். நிம்பார்க்கர் வைஷ்ணவத்தைப் பின்பற்றிய ஒரு தெலுங்கு பிராமணர் என்று கருதப்படுகிறார். அவர் பெல்லாரி மாவட்டத்தில் நிம்பபுராவில் வாழ்ந்ததாக எண்ணுகிறார்கள். அவரது துவைதாத்துவைத தத்துவத்தைப் பின்பற்றுவோர் தேசம் முழுவதிலும் இருக்கிறார்கள். அதே போல் தென் இந்திய தெலுங்கு பிராமணர் வல்லபர் வடக்கே குடிபுகுந்து வேதாந்தத்துக்குச் சுத்த அத்வைதம் என்பதாகக் கடவுள் நம்பிக்கையுடன் கூடிய ஒரு புது விளக்கம் கண்டார்.

துறவிகள், ஞானிகள், மற்றும் பல முனிவர்களிடம் பக்தியும் மரியாதையும் செலுத்துவதும் பல்வேறுபட்ட மத நம்பிக்கைகளிடம் சகிப்புத் தன்மை காட்டுவதும் ஹிந்துவுக்கு இயல்பாகவே அமைகிறது. அவனது சொந்த மதாபிமானங்கள் இதில் குறுக்கிடுவதில்லை. காரணம், கடவுள் ஒருவனே, அவனை மக்கள் பல பெயரிட்டு அழைக்கின்றனர் என்பது அவனுக்கு ஆதி நாளிலிருந்தே கற்றுத் தரப்பட்டதுதான். இப்படியாக வேற்றுமைக்குப் பின்னே ஒற்றுமை என்ற கருத்து இந்திய கலாச்சாரத்தின் அடிப்படை உண்மையாக ஆரம்பநாளிலிருந்தே இருந்து வந்துள்ளது.

தமிழ் நாடு மகோந்நதமான ஆன்மீக அறிஞர்களையும் ஞானிகளையும் உருவாக்கியுள்ளது என்பது மிகையான பேச்சல்ல. வள்ளுவரையும் வள்ளலாரையும் போன்று முடிவில்லாக் கீர்த்தி பெற்ற எத்தனையோ மகான்களைக் குறிப்பிடலாம். தென் இந்திய துறவிகளும் ஞானிகளும் ஆன்மீக அறிவுக்கு ஒளிகாட்டியவர்கள். இன்றைக்கு ஆதியும் அந்தமுமில்லாதவனை அடைய வழிகாட்டுவோருள், — 'பெரியவாள்' என்று தேசம் முழுவதும் உள்ள பக்தர்கள் அன்பும் மரியாதையும் கொண்டு அழைக்கும் புனிதர் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி—காஞ்சி முனிவர்



ஒருமைப்பாடும்

மேதகு ஆளுநர்: **சுகாதியா**



ஒரு பெரிய ஆசாரியர் மட்டுமல்ல, ஒரு புனித ஆன்மாவுமாவார். தெற்கே பிறந்தவர் என்றுலும் ஜகத்குருவின் உலக அமைதிக்கான அருளுரை சர்வதேச முக்கியத்துவம் பெற்றுள்ளது. திருவண்ணுமலையிலிருந்த பகவான் ரமண மகரிஷி மற்றுமோர் உன்னத ஆத்மா. இன்றையத் தலைமுறையினரான நமது வாழ்க்கையை ஒழுக்கம் நிறைந்ததாகவும் ஆன்மிகம் ஒளிர்வதாகவும் உயர்த்திச் செம்மைப்படுத்த முயன்றவர்.

புனிதத் துறவிகளைப் போலவே புராதனக் கோயில்களுக்காகவும் தமிழ் நாடு பிரசித்தி பெற்றுள்ளது குறித்து நான் உண்மையில் பெருமைப்படுகிறேன். உதாரணமாக ராமேசுவரம், ஸ்ரீரங்கம், சிதம்பரம், மதுரை, திருவண்ணுமலை, காஞ்சி, திருத்தணி, ஸ்ரீபெரும்புதூர் ஆகியவை புனிதக் கோயில்களும் சரித்திர முக்கியத்துவமும் கொண்ட இடங்களாகும். ஆந்திரப் பிரதேசத்தில் பாலாஜியாம் ஏழுமலையான் எழுந்தருளியுள்ள திருப்பதி, காளஹஸ்தி, ஸ்ரீ சைலம்; கர்நாடகத்தில் ஸ்ரீ சாமுண்டேசுவரி கோயில் ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தென் நாட்டில் எத்தனையோ பல புனிதத் திருத்தலங்கள் உள்ளன. இந்தத் தென்னிந்தியக் கோயில்கள் எல்லாம் சமூக அமைப்பிலும் மதாச்சார அமைப்பிலும் இந்தியர்களின் வாழ்வில் பெரிய மையக் கேந்திரங்களாக விளங்குகின்றன. உண்மையைச் சொல்வதெனில் இவை நமது ஒருமைப்பாட்டின் புறச் சின்னங்கள்.

தீபாவளித் திருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சிகரமான சந்தர்ப்பத்தில் நான் எனது பாராட்டுக்களைத் தமிழக மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். நமது தேசம் அமைதியும் ஆனந்தமும் பெற அருள் மழை பொழியுமாறு எங்கும் நிறைந்த இறைவனை நாம் பிரார்த்திப்போம். ஜெய் ஹிந்த்!

(ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்)



"எனக்கு எதற்கு மெமோ கொடுத்திருக்கா மாமா?"

"26 வடைகளைக் காணேம். சமையல்காரரைக் காணேம். இந்தக் குற்றச் சாட்டுக்குத் தகுந்த பதில் காரணம் எழுத்து மூலம் தெரிவிக்கவும். தவறினுல் உமக்குக் கட்டாய ஓய்வு அளிக்க வேண்டிய கட்டாயம் எனக்கு ஏற்படும் என்பதை அறிவீர்..."

• • •

"உங்கப்பா எந்த மனசோடு ஸ்கூட்டர் வாங்கித் தந்தாரோ...?"

"ஏன்? என்ன ஆச்சு? எதுக்கு அவரைச் சபிக்கிறேன்?"


"ஸ்கூட்டரைக் காணேம்!"



• • •

"தம்பி, லட்சமணு! இந்தப் பட்டாசை எங்கே செலுத்த?"





"தீபாவளி என்றுலே என் மனம் பட் பட் பட் என்று அடித்துக் கொள்கிறது."

"அது ஏன் சார் அப்படி?"

"'பட்'டாக செலவு. 'பட்' சனம் செய்யச் செலவு, போதாக் குறைக்கும் 'பட்'டுப் புடவைச் செலவு வேறு. அதனுல்தான்!"

— எஸ். என். ராஜாராம்

• • •

"ஜீரணத்துக்காக ஒரு மாத்திரை தருங்களேன் அந்த மாத்திரை ஜீரணமாகலே!"

"சரி! அது கரைய ஒரு மாத்திரை தருகிறேன்."



பார்த்திபன் கனவு

அமரர் கல்கி

அத்தியாயம் 7

திருப்பணி ஆரம்பம்

சக்கரவர்த்தியும் குந்தவியும் முதலில் கோயிலுக்குள்ளே சென்று அம்பிகையைத் தரிசித்துவிட்டு வந்தார்கள். பந்தலின் நடுவில் அமைந்திருந்த சிம்மாசனங்களில் சக்கரவர்த்தியும் குந்தவி தேவியும் வந்து அமர்ந்ததும், மந்திரி மண்டலத்தாரும் மற்றவர்களும் தத்தம் ஆசனத்தில் அமர்ந்தனர். கோயில் குருக்கள்மார் தொடர்ந்து வந்து சக்கரவர்த்திக்கும் மற்றவர்களுக்கும் விபூதி குங்குமப் பிரசாதங்களை அளித்து, மலர் மாலைகள் சூட்டி மரியாதைகள் செய்த பிறகு, மங்கள வாத்தியங்களின் முழக்கங்களுக்கிடையே சக்கரவர்த்தி தம் திருக் கரத்தினால் ஆசாரிய ஸ்தபதியின் தலையில் பட்டுப் பரிவட்டம் சட்டினார். பிறகு, உயர்ந்த பட்டு வஸ்திரங்களும் நூறு பொன் 'கழஞ்சு'களும் வைத்திருந்த தாம்பூலத் தட்டையும் அவரிடம் கொடுத்தார். அவற்றை ஆசாரிய ஸ்தபதி வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டார். அவ்விதமே அங்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான சிற்பிகளுக்கு மந்திரி மண்டலத்தார்களும் மற்ற அதிகாரிகளும் தலையில் பரிவட்டம் கட்டிப் பட்டு வஸ்திரங்களையும் பொன் 'கழஞ்சு'களையும் பரிசளித்தார்கள்.

பின்னர் மந்திரி மண்டலத்தின் தலைவரான விஷ்ணுசர்மர் எழுந்து சபையோரைப் பார்த்துப் பேசினார். பல்லவ ராஜ வம்சத்தில் தோன்றிய பெயர் பெற்ற மன்னர்களின் வீர தீர பராக்கிரமங்களை அவர் வர்ணித்தார். அவர்களில் கடைசி மன்னரான மகேந்திரவர்மரின் அற்புத குணாதிசயங்களைப் புகழ்ந்தார். அவருடைய அருந்தவப் புதல்வரான மாமல்ல சக்கரவர்த்தி பட்டத்துக்கு வந்த பிறகு பல்லவ சாம்ராஜ்யத்தின் புகழ் கடல்களுக்கு அப்பாலும் பரவியிருக்கிறது என்றும், அதற்கு உதாரணமாக இந்தச் சபையிலேயே ஒரு சம்பவம் நடக்கப் போகிறதென்றும், செண்பகத் தீவிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகள் தங்களுடைய தீவைப் பல்லவ சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டு பரிபாலிக்கும்படி, சக்கரவர்த்தியை வேண்டிக் கொள்ளப் போகிறார்கள் என்றும் விஷ்ணுசர்மர் தெரிவித்தபோது, சபையோர் தங்களுடைய குதூகலத்தைப் பலவித ஜயகோஷங்களினால் வெளியிட்டனர்.

மீண்டும், அமைச்சர் தலைவர் கூறியதாவது: ''மகாஜனங்களே! காஞ்சியும் மாமல்லபுரமும் பல்லவ சாம்ராஜ்யத்தின் இரு கண்களாகும். சாம்ராஜ்யத்துக்குத் தலைநகரமான காஞ்சி எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு, துறைமுகப் பட்டினமான மாமல்லபுரம் நெடுநாட்களாக முக்கியமாயிருந்து வந்தது. ஆனால், காலஞ்சென்ற மகேந்திர சக்கரவர்த்தி இங்கே சிற்பத் திருப்பணியை ஆரம்பித்த பிறகு, காஞ்சியின் பெருமை சிறிது தாழ்ந்து மாமல்லபுரத்தின் புகழ் ஓங்கி விட்டது. எட்டு வருஷங்களுக்கு முன்பு நமது சக்கரவர்த்திப் பெருமான் வடதேசத்துக்குப் படையெடுத்துச் சென்ற போது, இங்கு நடந்து வந்த சிற்பத் திருப்பணியை நிறுத்த வேண்டியிருந்தது. பாதகனான புலிகேசியைக் கொன்று வாதாபியைத் தீக்கிரையாக்கி விட்டுத் திரும்பிய பிறகு சில காலம் தேசத்திலிருந்து பஞ்சம் பிணிகளை நீக்கும் முக்கியமான பிரயத்தனங்களிலும், உள் நாட்டுச் சிறு பகைகளை அழிக்கும் முயற்சியிலும் சக்கரவர்த்தி ஈடுபட்டிருந்தார் என்பதை நீங்கள் அறிவீர்கள். பராசக்தியின்

அருளினாலும், பல்லவ குலத்தின் பரம்பரையான தர்ம பலத்தினாலும், சக்கரவர்த்தி ஈடுபட்டிருந்த அந்தக் காரியங்கள் எல்லாம் இனிது நிறைவேறிவிட்டன. சக்கரவர்த்தியின் திருப் பெயரைப் பூண்ட இந்தப் பட்டணத்திலே சிற்பத் திருப்பணிகள் இன்று மறுபடியும் ஆரம்பமாகின்றன. இனிமேல் சக்கரவர்த்தியும் இந்நகருக்கு அடிக்கடி விஜயம் செய்து திருப்பணி வேலைகளை மேற்பார்வை செய்வதாகக் கிருபை கூர்ந்து வாக்களித்திருக்கிறார்.''

இவ்விதம் அமைச்சர் தலைவர் கூறிச் சபையோரை ஆனந்தக் கடலில் ஆழ்த்திய பிறகு, செண்பகத் தீவின் தூதர்கள் சக்கரவர்த்தியின் சமூகத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களுடைய தலைவன் பேசியது தமிழ் மொழியேயானாலும் சற்று விசித்திரமான தமிழாயிருந்தபடியால், சபையோர்களுக்குப் புன்னகை உண்டு பண்ணிற்று.



அத்தூதர் தலைவர் கூறியதன் சாராம்சம் பின்வருமாறு:

செண்பகத் தீவின் வாசிகள், சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் கரிகால் சோழரின் காலத்தில் சோழ நாட்டிலிருந்து அங்கே போய்க் குடியேறிய தமிழர்களின் சந்ததிகள். அந்தத் தீவை ஆண்டு வந்த ராஜ வம்சம் சந்ததியில்லாமல் சில ஆண்டுகளுக்கு முன்பு நசித்துப் போய்விட்டது. ஆகவே, செண்பகத் தீவு தற்சமயம் ராஜா இல்லாத ராஜ்யமாயிருந்து வருகிறது. இதை அறிந்ததும், பக்கத்துத் தேசங்களில் உள்ள மக்கள் — முக்கியமாகத் தட்டை மூக்குச் சாதியினர் — அடிக்கடி செண்பகத் தீவில் வந்திறங்கிக் கொள்ளையிட்டும், இன்னும் பல உபத்திரவங்களை விளைவித்தும் செல்லுகிறார்கள். இதையெல்லாம் உத்தேசித்துச் செண்பகத் தீவின் ஜனங்கள் மகாசபை கூட்டி ஏகமனதாக ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது, தற்சமயம் தாய்நாட்டிலே பிரசித்த சக்கரவர்த்தியாய் விளங்கும் நரசிம்ம பல்லவேந்திரருக்குத் தூது அனுப்பிச் செண்பகத் தீவைப் பல்லவ சாம்ராஜ்யத்தில் சேர்த்துக் கொண்டு சக்கரவர்த்தியின் சார்பாகத் தீவை ஆட்சி புரிவதற்கு இராஜ வம்சத்தைச் சேர்ந்த வீர புருஷர் ஒருவரை அனுப்பும்படி பிரார்த்திக்க வேண்டியது.

சக்கரவர்த்தி, தூதர்களின் பிரார்த்தனைக்கு உடனே மறுமொழி சொல்லவில்லை. சில நாள் யோசித்தே முடிவு செய்ய வேண்டுமென்றும், அது வரை அந்தத் தூதர்கள் பல்லவ சாம்ராஜ்யத்தில் உள்ள காஞ்சி முதலிய நகரங்களைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்றும், ஒரு வாரத்துக்குள் அவர்களுக்கு மறுமொழி சொல்லக்கூடும் என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் .நரசிம்ம வர்மரும் குந்தவி தேவியும், — மந்திரிகளும் ஸ்தபதிகளும, பின்தொடர்ந்து வர— துர்க்காதேவியின் கோயிலுக்கு மறுபடியும் வந்தனர். அந்தக் கோயிலின் வெளி மண்டபத்தில் இருபுறத்துச் சுவர்களும் வெறுமையாக இருந்தன. சக்கரவர்த்தி ஒரு பக்கத்துச் சுவரின் அருகில் வந்து, குந்தவி தேவியின் கையில் இருந்த காவிக் கட்டியை வாங்கி, அந்தச் சுவரில் சித்திரம் வரையத் தொடங்கினார். அருகில் இருந்தவர்கள் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு நிற்கும்போதே வெகுசீக்கிரத்தில் சிம்ம வாகனத்தின் மீது போர்க் கோலத்துடன் வீற்றிருக்கும் துர்க்காதேவியின் திரு உருவம் அந்தச் சுவரில் சாக்ஷாத்காரமாய்த் தோன்றியது. குந்தவி தேவி பயம் தொனித்த குரலில், ''அப்பா! தேவியின் உக்கிரம் தாங்க முடியவில்லை. யாருடன் அம்பிகை சண்டையிடுகிறாளோ, அந்த அசுரனுடைய உருவத்தையும் எழுதி விடுங்கள்!'' என்றாள். உடனே சக்கரவர்த்தி, தேவிக்கு எதிரே கையில் கதாயுதம் தரித்த மகிஷாசுரனுடைய உருவத்தையும் எழுதினார். ''இப்போது தான் பயமின்றிப் பார்க்க முடிகிறது!'' என்றாள் குந்தவி. பிறகு, சக்கரவர்த்தி அங்கே அருகில் நின்ற ஆசாரிய ஸ்தபதியைப் பார்த்து, ''ஸ்தபதியாரே! இந்த விஜயதசமி தினத்தில்தான் அம்பிகை மகிஷாசுரனை வதம் செய்தாள். நமது திருப்பணியை அந்தக் காட்சியுடனேயே ஆரம்பித்து வைக்கலாம் அல்லவா?''



என்றார். ஆசாரிய ஸ்தபதியும் வியக்கத்துடன் ஆமோதித்துத் தம் கையிலிருந்த கல்லுளியைச் சக்கரவர்த்தியின்பால் நீட்ட, சக்கரவர்த்தி அதை வாங்கிக் கொண்டு, தாம் எழுதிய சித்திரத்தின் மேல் கல்லுளியினால் சில முறை பொளிந்தார். பிறகு கல்லுளியை ஸ்தபதியிடம் கொடுத்தார். ஸ்தபதியார் அதைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு, அம்பிகைக்கும் சக்கரவர்த்திக்கும் வணக்கம் செலுத்திவிட்டுச் சிற்ப வேலையை ஆரம்பித்தார்.

அன்று முதற்கொண்டு பல வருஷ காலம் மாமல்லபுரத்தில் ஆயிரக்கணக்கான கல்லுளிகளின் சத்தம் இடைவிடாமல் கேட்டுக் கொண்டிருந்தது.

அத்தியாயம் 8

குந்தவியின் கலக்கம்

புஷ்பேஷு ஜாதி புருஷேஷு விஷ்ணு
நாரீஷு ரம்பா நகரேஷு காஞ்சி

என்று வடமொழிப் புலவர்களால் போற்றப்பட்ட காஞ்சிமா நகரின் மாட வீதியிலே குந்தவி தேவி பல்லக்கில் சென்று கொண்டிருந்தாள். திருக்கோயில்களுக்குச் சென்று உச்சி கால பூஜை நடக்கும்போது சுவாமி தரிசனம் செய்து விட்டு வரும் நோக்கத்துடன் அவள் சென்றாள். ஆனால், அவளுடைய உள்ளம் மட்டும் ஒரு வாரத்துக்கு முன்பு மாமல்லபுரத்தில் விஜயதசமியன்று கண்ட கோலாகலக் காட்சிகளிலேயே ஈடுபட்டிருந்தது.

அன்று ஆரம்பித்த திருப்பணிகளில் உலகம் உள்ளவரையில் தன் தந்தையின் புகழ் குன்றாதிருக்கும் அல்லவா?— என்று அவள் எண்ணமிட்டாள். இப்படிப்பட்ட தந்தைக்குப் புதல்வியாய்ப் பிறக்கத் தான் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று நினைத்தாள். இத்தகைய சக்கரவர்த்தியின் ஆட்சியில் வாழும் பிரஜைகள்தான் எவ்வளவு பாக்கியம் பண்ணியவர்கள் என்ற எண்ணமும் தோன்றியது. இப்படிப்பட்ட சிந்தனைகளில் ஆழ்ந்தவளாய்ப் பல்லக்கிலே போய்க் கொண்டிருக்கையில், திடீரென்று வீதியில் ஒரு மதில் சுவரின் திருப்பத்தில் அபூர்வமான காட்சி ஒன்றைக் கண்டாள். சகல இராஜ லட்சணங்களும் பொருந்திக் களை ததும்பும் முகத்தினனான ஓர் இளங் குமரன் ஒரு குதிரை மீது வந்து கொண்டிருந்தான். அவனுடைய உடம்பையும் கைகளையும் குறுக்கும் நெடுக்குமாய் இரும்புச் சங்கிலியினால் பிணைத்திருந்தார்கள். குதிரையின் இரு பக்கத்திலும் முன்னும் பின்னும் அந்தச் சங்கிலிகளைப் பிடித்துக் கொண்டு போர் வீரர்கள் சிலர் விரைந்து நடந்து வந்தார்கள்.

அந்த இளங் குமரன் மிகவும் களைத்துப்போன தோற்றமுடையவனாக இருந்தாலும், அவனுடைய முகத்தில் கொஞ்சமாவது அதைரியத்தின் அறிகுறி காணப்படவில்லை, அஞ்சா நெஞ்சம் கொண்ட தீர புருஷனாகவே தோன்றினான். ''என் உடம்பைத்தானே சங்கிலிகளால் பிணிக்க முடியும்? என் உள்ளத்தை யாராலும் சிறைப்படுத்த முடியாதல்லவா?'' என்று அலட்சியத்துடன் கேட்பதுபோல் இருந்தது அவனுடைய திருமுகத்தின் தோற்றம்.

இந்தக் காட்சியைக் கண்டதும், குந்தவி தேவியின் விசாலமான நயனங்கள் ஆச்சரியத்தினால் இன்னும் அதிகமாக விரிந்தன. அதே சமயத்தில் அந்த இளைஞனும் சக்கரவர்த்தியின் குமாரியைப் பார்த்தான். சொல்லுக்கடங்காத அவளுடைய திவ்விய சௌந்தர்யம் ஒரு கண நேரம் அவனைத் திகைப்படைந்து நிற்கும்படி செய்திருக்க வேண்டும். அடுத்த நிமிஷத்தில் பல்லக்கும் குதிரையும் ஒன்றையொன்று தாண்டிச் சென்று விட்டன. குந்தவி பல்லக்கில் இருந்த வண்ணம் இரண்டொரு தடவை திரும்பித் திரும்பிப் பார்த்தாள். குதிரை மீது சங்கிலியால் கட்டுண்டிருந்த அந்த இளங் குமாரனும் தன்னைப் போலவே ஆவல் கொண்டவனாய்த் திரும்பிப் பார்ப்பான் என்று அவள் எதிர்பார்த்தாளோ என்னவோ, தெரியாது. ஆனால் அந்தக் குமரன் மட்டும் தலையை ஓர் அணுவளவுகூடப் பின்புறமாகத் திருப்பவில்லை. திருப்ப முடியாதபடி அவனைப் பிணைத்திருந்த சங்கிலிகள்தான் தடுத்தனவோ, அல்லது அவனுடைய மனத்தின் திட சங்கற்பம்தான் அவ்விதம் திரும்பிப் பார்க்காத வண்ணம் தடை செய்ததோ, அதுவும் நமக்குத் தெரியாது.

குந்தவி தேவியின் திவ்ய சௌந்தரியத்தைப் போலவே அந்தச் சக்கரவர்த்தித் திருமகளின் தெய்வ பக்தியும் அந்த நாளில் தேசப் பிரசித்தமாயிருந்தது. சாதாரணமாய் அவள் சிவன் கோயிலுக்குப் போனாலும், பெருமாள் கோயிலுக்குப் போனாலும், பராசக்தியின் சந்


ஒரே பரிபூரண ஆரோக்கிய பானம்...
சுவைமிகு
சாக்கலேட் மணத்துடன்!
நீங்கள்
ஆரோக்கியமுடனும்
சக்தியுடனும் விளங்கத்
தேவையான
இந்த 23 அத்தியாவசிய
"ஊட்டச் சத்துக்கள்"
அனைத்தும் நிறைந்த ஒரே பானம்
காம்ப்ளான்®
மட்டுமே.
புரதம்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
(cl வடிவில்)
பொட்டாஷியம்
இரும்புச் சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி1
ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கோலின்
கால்ஷியம்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி6)
வைட்டமின் பி12
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் ஸி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே
"ரவி சாப்பிட மிகவும் படுத்துவான். நல்ல வேளை, சாக்கலேட் சுவை நிறைந்த காம்ப்ளான் அவனுக்கு மிகவும் பிடிக்கிறது. அவனுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் அது தருகிறது" என்கிறார் ரவியின் அன்னை.
காம்ப்ளானில் உள்ள 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் தரும் 'பரிபூரண' போஷாக்கை வேறு எந்த ஆரோக்கிய பானமும் தருவதில்லை. எனவே அவனுக்கு எத்தகைய போஷாக்குப் பற்றாக்குறை யிருந்தாலும், காம்ப்ளான் அவனை ஆரோக்கியமுடன் வைத்திருக்கும்.
ஏலக்காய்-கேசரி, மற்றும் சாதாரண காம்ப்ளான் கூடக் கிடைக்கிறது.
Glaxo
Complan®
THE COMPLETE PLANNED FOOD
CARDAMOM-SAFFRON FLAVOUR
காம்ப்ளான்®
வேறு எந்த ஆரோக்கிய பானமும் பரிபூரணமானதல்ல.
உலகெங்கும் உபயோகிக்கப்படுவது. க்ளாக்ஸோ ஆராய்ச்சியால் உருவானது.
CMGC 20-203 TM

நிதிக்குச் சென்றாலும், அந்தந்தத் தெய்வங்களின் தியானத்திலே ஈடுபட்டுத் தன்னை மறந்து விடுவது வழக்கம். ஆனால் இன்றைய தினம் குந்தவியின் மனம் அவ்விதம் சலனமற்ற தியானத்தில் ஈடுபடவில்லை. தெய்வ சந்நிதானத்தில் நின்றபோதுகூட, அவளுடைய மனக் கண்ணின் முன்னால், சங்கிலியால் கட்டுண்டு குதிரைமேல் வீற்றிருந்த இளங் குமரனுடைய முகம் வந்து நின்றது. அவள் எவ்வளவோ முயன்றும் அந்த முகத்தை மறக்க முடியவில்லை. இதுவரையில் அவள் அனுபவித்தறியாத இந்தப் புதிய அனுபவமானது அவளுக்கு ஒருவித அபூர்வ இன்பக் கிளர்ச்சியையும் அதே சமயத்தில் பயத்தையும் உண்டு பண்ணிற்று.

ஒருவாறு சுவாமி தரிசனத்தை முடித்துக்கொண்டு குந்தவி தேவி அரண்மனைக்குத் திரும்பினாள். திரும்பும் காலையில் மனத்தை அந்த இளங் குமரன் மேல் செல்லாமல், வேறு நினைவில் செலுத்தும் முயற்சியையே அவள் விட்டு விட்டாள். ''அவ்வளவு இராஜ லட்சணங்கள் பொருந்திய இளங்குமரன் யாராயிருக்கலாம்? அவனை எதற்காகச் சங்கிலியால் பிணைத்திருக்கிறார்கள்? எங்கே அழைத்துச் செல்லுகிறார்கள்? அவன் அத்தகைய குற்றம் என்னதான் செய்திருப்பான்?'' என்றெல்லாம் சிந்திக்கத் தொடங்கினாள். திடீரென்று ஒரு ஞாபகம் வந்தது. உறையூர் இராஜகுமாரன் ஏதோ சக்கரவர்த்திக்கு விரோதமாகக் கலகம் செய்யப் போகிறான் என்று மாமல்லபுரத்துக்கு ஓலை வந்ததல்லவா? அது விஷயமாக முன்னமே ஏற்பாடு செய்தாகி விட்டது என்று சக்கரவர்த்தி மறுமொழி தந்தாரல்லவா? அந்தச் சோழ இராஜ குமாரன்தானோ என்னவோ, இவன்? — இந்த எண்ணம் தோன்றியதும் குந்தவிக்கு அக்குமரன்மேல் கோபம் உண்டாயிற்று. என்ன அகந்தை, என்ன இறுமாப்பு அவனுக்கு? எவ்வளவு பெரிய துரோகமான காரியத்தைச் செய்துவிட்டு, எவ்வளவு அலட்சியமாகக் கொஞ்சம்கூடப் பயப்படாமலும், வெட்கப்படாமலும், இறுமாந்து உட்கார்ந்திருக்கிறான்! நரசிம்ம பல்லவேந்திரருக்கு எதிராகக் கலகம் செய்யும்படி அவ்வளவு வந்து விட்டதா இவனுக்கு? எத்தனையோ தூர தூர தேசங்களில் உள்ள ஜனங்கள் எல்லாரும், நரசிம்ம சக்கரவர்த்தியின் வெண் கொற்றக் குடையின் நிழலில் வாழ்வதற்குத் தவம் செய்கிறார்களே! செண்பகத் தீவின் வாசிகள் இதற்காகத் தூது அனுப்பியிருக்கிறார்களே! இந்த அற்பச் சோழ நாட்டு இளவரசனுக்கு

கல்கி தீபாவளி மலர் – 76

சற்றும் எதிர்பாராத, தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த ஆண்டு தீபாவளி மலரைத் தீபாவளித் திருநாளன்று நேயர்களுக்குக் கிடைக்கும்படி வெளிக் கொண்டு வர இயலவில்லை. நேயர்கள் பொறுத்தருளக் கோருகிறோம்.

தீபாவளி மலருக்கெனத் தமிழக ஆளுநர் திரு சுகாதியாவும் மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியமும் எழுதிய கட்டுரைகள் தீபாவளித் திருநாளையொட்டி வெளியாகும் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

ஆசிரியர், கல்கி

என்ன வந்து விட்டது? — ஆமாம்; இவன் மட்டும் கலகம் செய்த இளவரசனாயிருந்தால் தந்தையிடம் சொல்லிக் கடுமையான தண்டனை விதிக்கச் செய்ய வேண்டும்; அப்போதுதான் புத்தி வரும்.

இவ்வாறு எண்ணிய குந்தவியின் மனம் மறுபடியும் சஞ்சலம் அடைந்தது. ஐயோ பாவம்! முகத்தைப் பார்த்தால் அப்படி ஒன்றும் கெட்டவனாகத் தோன்றவில்லையே! அவன் தானாக ஒன்றும் செய்திருக்கமாட்டான். ஒருவேளை யாராவது கெட்ட மனிதர்கள் பக்கத்தில் இருந்து தூண்டிவிட்டிருப்பார்கள். அவர்களைப் பிடித்துத் தண்டிக்க வேண்டுமேயன்றி, இந்தச் சுகுமாரனைக் கடுமையாகத் தண்டிப்பதில் என்ன பயன்? அவனுடைய மார்பையும், தோள்களையும், கைகளையும் பிணித்திருக்கும் இரும்புச் சங்கிலிகள் அந்த மிருதுவான தேகத்தை எப்படித் துன்புறுத்துகின்றனவோ? நல்ல புத்தி சொல்லி, எச்சரிக்கை செய்து, அவனை விட்டு விட்டால் என்ன? — அப்பாவிடம் இராத்திரி சொல்ல வேண்டும். ஆனால் அவருக்குத் தெரியாத விஷயமா? 'தர்மராஜாதி ராஜன்' என்று புகழ் பெற்றவராயிற்றே? நியாயமும் தர்மமும் தவறி அவர் ஒன்றும் செய்ய மாட்டார். இந்த இளங்குமரனை மன்னித்துத்தான் விடுவார்... இப்படியெல்லாம் கொந்தளித்துக்கொண்டிருந்த உள்ளத்துடன் குந்தவி தேவி அரண்மனையை அடைந்தாள். சூரியன் எப்போது அஸ்தமிக்கும், தகப்பனார் எப்போது ராஜ சபையிலிருந்து அரண்மனைக்குத் திரும்பி வருவார் என்று எதிர்பார்த்த வண்ணம் ஒவ்வொரு விநாடியையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகள் மடம்

காஞ்சீபுரம்

ஸ்ரீமுகம்

பம்பாய் நகரில் செம்பூர் பகுதியில் கண்கண்ட தெய்வமான ஸ்ரீ முருகப் பெருமானுக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்ற ஆஸ்திகப் பெருமக்களின் நீண்டநாள் அவாவைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் செம்பூர் ஸ்ரீ சுப்பிரமணிய சமாஜத்தினர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு தேவையான நிலம் வாங்கி பாலாலயம் நிறுவித்து, மூலாலயத் திருப்பணியையும் துவக்கி சுமார் நாற்பது லக்ஷம் ரூபாய் செலவில் ஸ்ரீ விநாயகர், முருகன், தர்மசாஸ்தா, குருவாயூரப்பன், துர்க்கை, நவக்கிரஹங்கள் முதலிய சன்னதிகள் கொண்ட ஆலயங்கள் நிர்மாணிக்கத் திட்டமிட்டு கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அறிந்து ஸ்ரீ மஹா ஸந்நிதானம் மிகவும் சந்தோஷமடைகிறார்கள்.

இந்தப் பெரிய திருப்பணியில் ஆஸ்திக மக்கள் அனைவரும் பெரும் பங்கு கொண்டு கூடிய சீக்கிரம் ஆலயம் பூர்த்தியாக உதவி புரிந்து ஸ்ரீ முருகப்பெருமானின் அருளுக்குப் பாத்திரராகும்படி ஆசீர்வதிக்கிறார்கள்.

(ஒப்பம்) **நாராயண ஸ்மிருதி**

திருப்பணிக்கு நன்கொடை அனுப்ப வேண்டிய விலாசம்:

ஸ்ரீ சுப்பிரமணிய சமாஜம், பாலாலயம், செட்டா நகர், பம்பாய்-89

திருச்செம்பூர் திருமுருகன் திருக்கோயில் திருப்பணி நிதிக்காக

நாடக - நாட்டிய விழா

''நாடகக் காவலர்''
R. S. மனோகர் அளிக்கும்
டிராமாஸ்கோப் நாடகங்கள்

இடம்:
ஷண்முகானந்தா கலை அரங்கு

1-11-76 சுக்கிராச்சாரியார் (முதல் பாகம்)

2-11-76 சுக்கிராச்சாரியார் (இரண்டாம் பாகம்)

இடம்:
காந்தி மைதானம், செம்பூர்

4-11-76 சாணக்கிய சபதம்
5-11-76 துரோணர்
6-11-76 சுக்கிராச்சாரியார் (முதல் பாகம்)

7-11-76 சுக்கிராச்சாரியார் (இரண்டாம் பாகம்)

இடம்:
காந்தி மைதானம், செம்பூர்

''கலை மாமணி''
S. V. ஸஹஸ்ரநாமம் அளிக்கும்
புதிய சமூக நாடகங்கள்

8-11-76 யுத்தகாண்டம்

9-11-76 ராஜ பரம்பரை

10-11-76 அஞ்சா புலி ஒரு பெண்

பரதநாட்டியம்:

11-11-76 குமாரி அனிதா பிள்ளை
(இராஜ ராஜேஸ்வரி பரதநாட்டிய கலாமந்திர்)

ஷண்முகானந்தா கலை அரங்கில் நடைபெறும் நாடகங்களுக்கு தனி டிக்கெட்டுகளும், காந்தி மைதானத்தில் நடைபெறும் நாடக-நாட்டிய விழாவிற்கு சீஸன் டிக்கெட்டுகளும் கீழ்க்கண்ட இடங்களில் கிடைக்கும்.

பாலாலயம், செட்டா நகர் ○ ரவி கபே, செம்பூர் ○ ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ், மாதுங்கா ○ பாலமுருகன் ஸ்டோர்ஸ், கரோடியா நகர் ○ ஷண்முகானந்தா அரங்கு

மற்ற விபரங்களுக்குத் தொலை பேசி எண்: 524903 – 521523



அத்தியாயம் 54

"பவானியின் காதலன்"

இரண்டு நாட்கள் கழித்துக் கல்யாணசுந்தரம் மறுபடியும் கமலாவின் வீட்டுக்குப் போனான். கமலாவும் விசுவும் மட்டும் இருந்தார்கள். 'நல்ல வேளையாகப் போயிற்று. கமலாவுடன் சற்று மனம் விட்டுப் பேசலாம்' என்று அவன் சந்தோஷப்பட்டது தப்பாகப் போயிற்று. கமலா அவனிடம் முகம் கொடுத்துப் பேசவில்லை. முகம் காட்டாமல் தலை குனிந்து கொண்டோ அல்லது வெட்கப்பட்டுக் கதவுக்குப் பின் மறைந்திருந்தோ பேசினாளா என்றால் அதுவும் கிடையாது.

''அப்பாவும் அம்மாவும் கோவிலுக்குப் போயிருக்காங்களாக்கும்?'' என்றான் கல்யாணம். பதில் இல்லை. ''திரும்புவதற்கு நேரமாகுமோ?'' என்றான். அதற்கும் பதில் இல்லை. ''இப்பத்தான் போனார்களா? அல்லது கிளம்பி ரொம்ப நேரமாச்சா?'' என்று மீண்டும் ஒரு கேள்வியைப் போட்டுப் பார்த்தான்.

''என்னவோ கேட்கிறாரே, பதில் சொல்லேண்டா'' என்றாள் கமலா விசுவைப் பார்த்து.

''ஓ! பேச வருகிறதே! திடீரென்று ஊமையாகி விட்டாளாக்கும் உன் அக்கா என்று நினைத்தேன்!''

''ஊமையாவது, ஒண்ணாவது! கல்யாணம் மாமா! இன்னைக்குக் காலையிலே அக்கா மறுபடியும் கத்தியைக் கையில் போட்டுக் கொண்டபோது கொடுத்த சாபங்களையும் வசவுகளையும் கேட்காமல் போயிட்டேளே! மிஷின்கன்லேருந்து குண்டுகள் பறக்கிற மாதிரி சடசடவென்று பொழிந்து தள்ளினா! அம்மாவே அசந்து போயிட்டான்னா பார்த்துக்கொள்ளுங்களேன்!''

கல்யாணம், விசு பேசி முடிக்கும் வரை காத்திராமல், பதறி, பாய்ந்து, கமலாவின் அருகே சென்று அவள் கையைப் பிடித்துப் பார்த்து. ''எங்கே காயம்? எங்கே? எங்கே?'' என்று கேட்டான்.

''போதும் உங்கள் கரிசனம்'' என்று கமலா கையை உதறினாள். ''காயம் கையில் ஒன்றுமில்லை. நெஞ்சில்!''

'' ஐயய்யோ ! நெஞ்சில் எப்படி அடி பட்டது?''

''உங்களாலேதான். மனத்திலிருப்பதை முன்னாலேயே சொல்லியிருந்தால் இப்படி ஊர் சிரிக்கும்படியாகியிருக்குமா?''

''ஊராரெல்லாம் எதற்குச் சிரிக்கிறார்கள்?''

''விசுவைக் கேளுங்கள்!''

''என்னடா பயலே அக்காவிடம் என்னடா உளறிக் கொட்டினாய்?''

''நான் ஒன்றும் உளறவில்லை; உண்மையைத்தான் சொன்னேன், மாமா! பள்ளிக்கூடப் பசங்கள் உங்களைத் தூரத்தில் பார்க்கிறபோதே, 'கமலாவின் கல்யாணம்' என்று கூறிச் சிரிக்கிறாங்க. அதைச் சொன்னேன். இவளுக்கு அது அவமானமாய் இருக்காம்!''

''இதிலே என்ன அவமானம்? பசங்கள் பேசறதிலேதான் என்ன தப்பு ? நான் கமலாவின் கல்யாணம்தான் !''

''நீங்கள் முதலிலேயே உங்கள் மனத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு பேசியிருந்தால் இவ்வளவும் நடந்திருக்காதல்லவா ? ஒன்றிலிருந்து ஒன்றாக எவ்வளவு தப்பபிப்பிராயங்கள், எவ்வளவு வேண்டாத நிகழ்ச்சிகள் எத்தனை ஏச்சுப்பேச்சுக்கள் கோபதாபங்கள்?''

'' நீயும்தான் அவசரப்பட்டு அசட்டுக் காரியம் செய்தாய்! அந்தக் கிழவரைக் கல்யாணம் செய்து கொள்ள ஏன் சம்மதித்தாய் ?''

''நீங்கள் அந்தப் பவானியின் மோக வலையிலே சிக்கித் தவித்துக் கொண்டிருந்தீர்கள். என்னைத் திரும்பிக்கூடப் பார்க்கமாட்டீர்கள் என்று நினைத்தேன்.''

''இதோ பார், கமலா ! நீ என்ன வேணுமானாலும் சொல்லு. ஆனால் மிஸ் பவானியைப் பற்றி மட்டும் தப்பாக எதுவும் பேசாதே !''

''அடேயப்பா ! பவானி என்கிற பெயரைச் சொல்வதற்குள்ளே இத்தனை கோபம் பொத்துக் கொண்டு வருகிறதே ! நான் அப்படி என்ன தகாத வார்த்தை சொல்லிட்டேன் ?''

''இன்னும் என்ன கூற வேண்டும்? மோக வலை வீசினான், மயக்கு மொழி பேசினான் என்றெல்லாம் ஊரிலே இருக்கிற காலிப் பசங்கள் தான் ஏதோ உளறுகிறார்கள் என்றால் அந்த வசைச் சொற்களை நீயும் பயன்படுத்தலாமா? என் மனத்தையே நான் சரியாகப் புரிந்து கொள்ளாதது என் தவறு. அதற்காகப் பவானியின் நடத்தைக்குக் களங்கம் கற்பிப்பது போல் எதுவும் சொல்லக் கூடாது! அது மகாபாவம்! அவளைப் போல் ஒண்டர்ஃபுல் லேடியை நான் பார்த்ததே இல்லை! என்ன படிப்பு, என்ன அறிவு! அவ்வளவு ஞானம் இருந்தும் எத்தனை அடக்கம்! எவ்வளவு இனிய சுபாவம்!''

'' ஒரேயடியாக வர்ணிக்கிறீர்களே!''

'' உண்மையைத்தான் கூறுகிறேன். உன்னைப் பற்றிப் பவானி எவ்வளவு உயர்வாகப் பேசுகிறாள் தெரியுமா? நீ இப்படிச் சொன்னாய் என்று தெரிந்தால் எவ்வளவு வருத்தப் படுவாள்!''

''அடடா! நான் அக்காவைப் பற்றி என்ன தகாத விஷயமாகக் கூறிவிட்டேன் என்று இப்படிப் பதறுகிறீர்கள்? உங்களைப் பற்றித்தானே நான் சொன்னேன்? நீங்கள் பவானியிடம் மோகம் கொண்டிருக்கலாம்; பவானி அக்கா வேறு ஒருவரிடம் மோகம் கொண்டிருக்கலாம்....''

வாக்கியத்தை முடிப்பதற்கு முன்பே, 'ஐயோ! தவறு செய்து விட்டோமே; பவானி அக்காவுக்குக் கொடுத்த வாக்கை மீறிவிட்டோமே!' என்று கமலாவுக்குத் தோன்றியது. அதே கணத்தில் சுளீரென்று அவள் கன்னத்தில் வலி தெரிந்தது!

வலியை உணர்ந்து கண்களில் கண்ணீரும் பிறிட்ட பிறகுதான் வலியின் காரணத்தை உணர்ந்தாள் கமலா. 'கல்யாணம் தன்னைக் கைநீட்டி அடித்திருக்கிறான்!' விண் விண் என்று இன்னமும் வேதனை தரும் அளவுக்குப் பலமாக விழுந்த அறை!

'தம்பி விசுவுக்கு எதிரே இப்படி அவமானப்படுத்துமளவுக்கு நாம் என்ன அப்படிப் பெரிய தவறு செய்துவிட்டோம்? உண்மை பேசியதற்கு இவ்வளவு பெரிய தண்டனையா?' கமலா பிரமித்து நின்றாள்.

கல்யாணத்துக்கும் கஷ்டமாகப் போய்விட்டது. என்னதான் தனக்குப் பவானி மீது மதிப்பிருந்தாலும் கமலாவைக் கைநீட்டி அடிக்கத் தனக்கு உரிமை இல்லை என்பதை உணர்ந்தான். ''மன்னிச்சுடு, கமலா! உன்னை அடித்த இந்தக் கையை வெட்டிவிடலாம் என்று ஆத்திரமாக வருகிறது எனக்கு. இருந்தாலும் நீ மற்றவர்களைப் பற்றி, அதுவும் பவானியைப் பற்றி அவதூறாகப் பேசுவதை என்னால் பொறுத்துக் கொள்ளவே முடியவில்லை'' என்றான்.

'' நான் ஒன்றும் கற்பனை செய்து கதை அளக்கவில்லை; நிஜத்தைத்தான் கூறினேன். வேண்டுமானால் பவானியின் வீட்டுக்கே நேரில் போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள் கமலா. பவானியிடம் கொடுத்த வாக்கைக் காப்பதைவிடக் காதலனிடம் தான் பொய் பேசாதவள் என்பதை நிரூபித்துக் கொள்வது அவசரமாகவும் முக்கியமாகவும் பட்டது அவளுக்கு.

'' என்னத்தைப் பார்க்கிறது?'' என்றான் கல்யாணம், ஆத்திரத்துடன்.

''பவானியின் காதலனை'' என்றாள் கமலா ரோஷத்துடன்.

'' சீச்சீ! பைத்தியம் முற்றிப் பிதற்றுகிறாய்! நான் வருகிறேன். உன்னை மதித்து உன் வீட்டு வாசலை மிதித்ததே தவறு!'' கல்யாணம் கோபத்துடன் திரும்பி வாசல் பக்கம் போனான். கமலா ஓடிப் போய் வழி மறித்து நின்று, அவன் கரங்களைப் பற்றிக் கொண்டாள். கண்களில் நீர் பெருகித் தாரை தாரையாகக் கன்னங்களில் வழிந்தோட, '' நான் பெரிய தவறு செய்து விட்டேன்; கோபத்தில் ஏதோ பேசிவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். பவானி அக்கா எனக்குத் தெய்வம் மாதிரி பல சந்தர்ப்பங்களில் உதவியிருக்கிறாள். அக்காவிடம் போய் எதையும் கேட்டு விடாதீர்கள்! உங்கள் காலில் விழுந்து கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றாள்.

'' கண்டிப்பாக இதைப் பற்றிக் கேட்டு விட்டுத்தான் மறு காரியம் பார்க்கப் போகிறேன்! இப்போதே நேரே பவானி வீட்டுக்குத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்!'' என்றான் கல்யாணம்.



'' ஐயோ! நான் அக்காவுக்குச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேனே; ஆத்திரத்தில் ஏதோ உளறி விட்டேன். அதை மறந்து விடுங்களேன்; ப்ளீஸ்!'' என்றாள் கமலா.

'' ஒரு நாளும் மறக்க முடியாது! எப்படி மறக்கும்? சாமானிய விஷயமா இது?''

'' இதோ பாருங்கள், ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு ரகசியம் இருக்கும். அதற்காக அவர்களைத் தவறாக எண்ணக் கூடாது. இப்போ என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என் வாழ்க்கையிலும் கூட ஒரு ரகசியம் இருக்கத்தான் செய்கிறது.''

கல்யாணம் தூக்கிவாரிப் போட்டதுபோல் அவளைத் திரும்பிக் கூர்மையாகப் பார்த்தான். '' ஆ! என் அம்மா கூறியது நிஜந்தானா ? 'வாயைக் கழுவிக் கொண்டு வா' என்று அவளிடம் சீறினேனே நான்; அதுதான் தப்பா?''

'' ஐயோ ! நான் அதைச் சொல்லவில்லை. அது முழுப் பொய் !'' என்று அலறினாள் கமலா. ''ஊரிலே வேலையற்ற விடலைகள் நாலு பேர் கட்டிவிட்ட கதை. என்னைப் பார்த்தால் அவ்வளவு கேவலமானவளாகவா தோன்றுகிறது, உங்களுக்கு ?'' நெஞ்சு வெடித்துவிடும் போல் அவன் கால்களைக் கட்டிக் கொண்டு அழுதாள் கமலா.

கல்யாணத்தின் உள்ளத்தில் கருணை பொங்கியது. ''இல்லை, கமலா ! நான் அதை நம்பவேயில்லை. 'பணத்துக்கு ஆசைப் பட்டு ஊர் ஊராகப் போய்க் கிழவர்களாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்வதே உனக்குக் காரியம்' என்று கடவுளே என் எதிரில் வந்து சொன்னாலும் நான் நம்பமாட்டேன்.'' அவன் குனிந்து அவள் தோள்களைப் பற்றி எழுப்பிக் கைக் குட்டையால் அவள் கண்ணீரைத் துடைத்தான். ''கபடமில்லாத இந்தக் கண்கள், மாசு மறுவற்ற இந்த முகம், அவமானம் தாங்காமல் துவளும் இந்த உடல் எல்லாம் எனக்கு உண்மையையுணர்த்து கின்றன கமலா.... ஆனால்.... வேறு என்ன ரகசியம் இருக்கமுடியும் உன் வாழ்க்கையில்?''


''வந்து... வந்து...'' விசும்பலுக்கிடையில் வார்த்தைகள் வெளிப்பட மறுத்தன.

''சொல்லு, கமலா !'' அவன் ஆதரவாக அவள் முதுகைத் தடவினான்.

''நான்... நான்.... எனக்கு...''

கல்யாணத்துக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

''நான்.... நீ.... எனக்கு.... உனக்கு ! என்ன ரகசியம் பொதிந்து கிடக்கிறது இதற்குள்ளே ?''



''அப்பாவும் அம்மாவும் என்... சொந்தப் பெற்றோர்கள் இல்லை.... அநாதையான என்னை எடுத்து வளர்த்தார்கள். எனக்கே இந்த விவரம் சமீபத்தில்தான் தெரியும்.''

''ஓ! இவ்வளவுதானே!'' என்றான் கல்யாணம். ''இதை நானும் பவானியும் என்றைக்கோ ஊகித்துவிட்டோம். அவர்கள் உன்னை நடத்தும் விதத்திலிருந்து இதைத் தெரிந்து கொண்டு பல தடவை எங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கிறோம்.''

''இதை அறிந்தால் நீங்கள் என்னை வெறுத்துவிடுவீர்களோ என்றுதான் பயந்தேன். 'யாருக்குப் பிறந்தவளோ, என்ன ஜாதியோ ?' என்று அருவருப்படைவீர்களோ என்று ஒரே கவலை.''

''சேச்சே ! அப்படியெல்லாம் எண்ணுகிறவனாயிருந்தால் சமூக சேவா சங்கம் என்று எதற்காக நடத்துகிறேன்? சீர்திருத்த நாடகம் ஏன் போடப் போகிறேன்? அசடே ! அதையெல்லாம் நினைத்து நீ இனியும் கவலைப் பட்டுக் கொண்டிராதே ! எங்கே, சிரி பார்க்கலாம் ?'' கல்யாணம் கமலாவின் முகவாயைப் பற்றினான். அவள் நாணிக் கோணித் தன் முகத்தை எங்கே புதைத்துக் கொள்வது என்று புரியாமல் 'களுக்'கென்று சிரித்தபடி அவன் நெஞ்சிலேயே சாய்ந்தாள்.

''ஆல் இஸ் வெல், தட் எண்ட்ஸ் வெல்!'' என்று விசு தன் ஆங்கிலப் பாடம் ஒன்றின் கடைசி வரியைக் கூறிய போதுதான் அவன் அங்கிருப்பது அவர்கள் நினைவுக்கு வந்தது.

திடுக்கிட்டு விலகிக் கொண்டார்கள் !

அத்தியாயம் 55

யாரை நம்புவது ?

நிண்மதி விரித்த வெள்ளி நிலவு. இரவுக் கன்னிக்கு இதமளிக்கவென்று வீசிய தென்றல் காற்று. மொட்டை மாடியில் உமாகாந்தனும் பவானியும் அவள் மாமா குணசேகரனும் விச்ராந்தியாக அமர்ந்திருந்தார்கள். பவானி ரொம்ப உற்சாகமாக இருந்தாள். உமாகாந்த் இவ்வளவு சீக்கிரம் எழுந்து நடமாட ஆரம்பிப்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. டாக்டர் கொடுத்த நல்ல மருந்து, உமாகாந்தின் இயற்கையான திடகாத்திரமான தேக வாகு, பவானியின் பணிவிடை எல்லாம் சேர்ந்து அவனைத் துரிதமாக உடல் தேற வைத்தன. முகம் மட்டும் சற்றே வெளிறியிருந்தாலும் அவன் வதனத்தில் அவள் முன்பு பார்த்துத் தன் மனத்தைப் பறிகொடுத்திருந்த ஜீவ களை திரும்பியிருந்தது.

''பவானி! ஏதாவது பாடேன்'' என்றார் மாமா குணசேகரன். அப்படி ஓர் அழைப்புக்காகவே காத்திருந்தவள் போல் உடனே மகிழ்ச்சியோடு பாட ஆரம்பித்தாள் பவானி.

அந்தத் தோட்டத்தில் ஒரு மாமரத்தில் வாசம் புரிந்த குயில் ஏற்கனவே பகலெனக் காய்ந்த வெண்மதியால் குழப்பம் அடைந்திருந்தது. இப்போது பவானியின் இனிய சாரீரம் ஒலிக்கவே, தன் இனத்தைச் சேர்ந்த சகாக்கள் விடிந்து கூவுவதாக எண்ணி அதுவும் பதிலுக்குக் குரலெடுத்துப் பாட ஆரம்பித்தது.

பாட்டு முடிந்ததும் உமாகாந்தன் நெடுமூச் செறிந்தான்.

'' களைப்பாக இருக்கிறதா ? பால் கொண்டு வருகிறேன். சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொள்ளலாமே '' என்றாள் பவானி.

''இருந்த கொஞ்சநஞ்ச சோர்வையும் உன் பாட்டு போக்கிவிட்டது பவானி. ஆனால் இன்னும் எத்தனை நாட்கள் இந்த ஆனந்த வாழ்க்கை எனக்குக் கிட்டப் போகிறது என்று எண்ணியபோதுதான் ஏக்கத்தில் பெருமூச்சு பிறந்தது. என் உடம்பு குணமாகிவிட்டது, பவானி. உன்னிடமும் உன் மாமாவிடமும் நான் விடைபெற வேண்டிய தருணம் வந்துவிட்டது !''

''இது என்ன அசட்டுத்தனம் ?'' என்று சற்றுக் கோபமாகக் கேட்டாள் பவானி.

'' நான் இங்கே தொடர்ந்து இருப்பதுதான் அசட்டுத்தனம் '' என்றான் உமாகாந்த். '' உங்களை ஆபத்துக்குள்ளாக்க நான் விரும்பவில்லை. என்னை ஸி. ஐ.டி.கள் பின் தொடர்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் ஒரு குற்றவாளிக்கு அடைக்கலம் அளிப்பது தவறு என்பது எனக்குத் தெரியும்.''

'' சட்டத்தின் உடும்புப் பிடியிலிருந்து ஒருவனை எப்படி மீட்பது என்று பவானிக்குத் தெரியும்'' என்றார் குணசேகரன். உமாகாந்த் இதைக் கேட்டுச் சிரித்துவிட்டான். பவானி அந்தச் சிரிப்பில் மகிழ்ந்து புன்னகை புரிந்தாள். பால் நிலவில் வெண் முத்துக்கள் பிரகாசித்தன.

''குணசேகரன் ஸார் ! உங்கள் மருமகளின் ஆற்றலை நான் குறைத்து மதிப்பிடுவதாக எண்ணுகிறீர்கள். ஆனால் என்னைக் காப்பாற்றப் பவானியின் சட்ட ஞானம்கூடப் போதாது. அவளை ஓர் இக்கட்டான நிலையில் வைக்க நான் விரும்பவில்லை. எனக்கு நீங்கள் உதவியதற்கெல்லாம் நன்றி கூறிவிட்டு என் வழியே போக வேண்டியவன்தான் நான். ஆனால் அதற்கு முன்பாக என்னைப் பற்றிப் பவானி மனத்தில் ஏதும் தப்பபிப்பிராயங்கள் ஏற்பட்டிருந்தால் அவற்றை நீக்கிவிட மட்டும் விரும்புகிறேன்.''

''ஆமாம், தப்பபிப்பிராயம் ஏற்பட்டுத்தான் இருக்கிறது '' என்றாள் பவானி. ''தண்டனைக் காலம் முடியும் முன்னர் உங்களை யார் தப்பித்துக் கொண்டு வரச் சொன்னது? இன்னும் இரண்டு வருஷங்கள் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடாதா ? ஆக்கப் பொறுத்தவருக்கு ஆறப் பொறுக்கவில்லையே ? சிறை புகத் தயங்காத தேச பக்தத் தியாகிக்கு முழுத் தண்டனைக் காலத்தையும் அனுபவிக்கும் நெஞ்சுரம் வேண்டாமா ?''

'' தேச பக்தனுகச் சிறை சென்றிருந்தால் அந்த நெஞ்சுரம் எனக்கு நிச்சயம் இருந்திருக்கும், பவானி !''



சுகம், சொகுசு,
சௌகரியம்
இவற்றுக்குக்
காலத்தின்
தடை இல்லை...



காலி—க்ளாத் வேட்டிகள்

சுகபோக சௌகரியத்தின்
ஜீவனுள்ள பாரம்பரியம்

காலி—சிந்த்

100% செயற்கையிழைத் துணிகள்
(காலி-ஸெர்)

காலி—ப்ளெண்ட்

செயற்கையிழை/இயற்கையிழைக்
கலப்புத் துணிகள்
(பாலி-கிங்)

காலி—காட்

100% பருத்தித் துணிகள்
(காலி-கோல்ட், பாக்யவான்,
சாம்பியன், நீலம்)

காலி-க்ளாத் வேட்டிகளில் மிகச்
சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்க,
உங்களுக்கு அருகாமையிலுள்ள
காலி-ஷாப்புக்கு அல்லது
மற்றெந்த புகழ்பெற்ற துணிக்
கடைக்கு வருகை தாரீர்.

''அப்படியானால் உங்கள் தகப்பனார் என்னிடம் கூறியதெல்லாம் பொய்தானா?'' திகைப்பும் வியப்புமாகக் கேட்டாள் பவானி.

'' பவானி! நான் பாங்கில் கொள்ளை அடித்ததாகக் குற்றம் சாட்டப்பெற்றுச் சிறை சென்றேன். ஆனால் சந்தர்ப்பக் கோளாறினால் சில சமயம் குற்றமற்றவரும் சிறைபுக நேர்வதுண்டு என்பது வக்கீலாகிய உனக்குத் தெரியுமே !''

'' எனக்கு ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிகிறது. நீங்கள் சிறை புகக் காரணம் எதுவானாலும் சரி. அதனால் என் காதல் மாறப் போவதில்லை என்பதுதான் அது.''

உமாகாந்தனின் மேனி சிலிர்த்தது. ''குணசேகரன் ஸார் ! என்னைப் போன்ற பாக்கியசாலி இந்த உலகில் வேறு யார் உண்டு ?'' என்றான்.

''எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது'' என்றார் குணசேகரன். '' உன் அப்பா இவளிடம் ஒன்றைச் சொல்ல; இப்போது நீ வேறு ஒரு கதை கூறப் போகிறாயா ?''

''ஆமாம், ஸார் ! கதை சொல்லத்தான் போகிறேன். கேட்டுவிட்டு எதை நம்புவது என்று நீங்களே தீர்மானிக்கவேண்டியதுதான். என்னிடம் நான் குற்றமற்றவன் என்று நிரூபிக்க எந்தச் சாட்சியமும் இல்லை'' என்றான் உமாகாந்தன்.

(தொடரும்)

பயம் அறியாத பீனா

உத்தரப்பிரதேசத்தில் 71 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அகரா என்ற கிராமத்தில் தயான் சிங் வசிக்கிறார். அவரோடு அவர் மனைவியும், மகள் பீனாவும் (வயது 14) வசிக்கிறார்கள்.

சென்ற ஜூலை மாதக் கடைசியில் ஒரு நாள் இரவு வீட்டில் எல்லோரும் தூங்கிக்கொண்டிருந்தபோது மூன்று கொள்ளைக்காரர்கள் துப்பாக்கியோடு வீட்டில் புகுந்து விட்டனர். விழித்துக்கொண்ட தயான் சிங் ஒரு திருடனைப் பிடிக்க முயற்சி செய்கையில் அவரைச் சுட்டு விட்டு கூரை வழியே தப்பிக்க முயன்றனர். தயான் சிங் குண்டு அடிபட்டதும் சத்தம் போட்டு விட்டு சுருண்டு கீழே விழுந்து விட்டார். தந்தையின் குரலைக் கேட்டு விழித்துக் கொண்ட பீனா தந்தையைச் சுட்ட திருடனை, அவன் கையில் துப்பாக்கி இருக்கிறது என்பதையும் லட்சியம் செய்யாமல், அவன் பின்புறமாக ஓடிவந்து கட்டிப் பிடித்துவிட்டாள். திருடனால் திமிற முடியவில்லை. கையிலிருந்த துப்பாக்கியாலும் சுட முடியவில்லை. வெளியே போன ஒரு திருடன் தன் சகா படும் அவதியைக் கண்டு கூரை மேலிருந்தபடியே ''அவனை விட்டுவிடு. இல்லாவிட்டால் உன்னைச் சுட்டுவிடுவேன்'' என்று கத்தினான்.

பீனா கீழே இருந்தபடியே ''நீ என்ன வேண்டுமானாலும் செய். ஆனால் நான் இவனை விடப் போவதில்லை'' என்று பதிலுக்குக் கூறி விட்டுத் திருடன் கையைப் பிடித்து இழுத்தும்



எனவாக முறுக்கினாள். இவன் வலி தாங்க முடியாமல் துடிதுடிக்கக் கதறினான்.

கீழே கிடந்த தயான் சிங்குக்குத் தாயார் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தாள்.

இப்போது கூரைமேலிருந்த திருடன் சொன்னபடி சுட ஆரம்பித்து விட்டான். சினிமாவில் நடப்பது போல் பீனா அந்தக் குண்டுகள் தன்மீது படாமல் குண்டு வரும் திசையில் திருடனைத் திருப்பிப் பிடித்துக் கொண்டாள். குண்டுகள் திருடன் உடலில் பாய்ந்து அவன் பிணமானான்.

பீனா போட்ட கூச்சலைக் கேட்டு அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கூடிவிட்டார்கள். கூரை மேலிருந்த திருடன் கூட்டத்தின் மீது சுட முயன்றபோது துப்பாக்கி வேலை செய்யவில்லை. தோட்டா தீர்ந்து விட்டது. மக்கள் கூரை மீது ஏறி அவனைப் பிடித்து அடித்துப் போலீஸில் ஒப்படைத்தனர்.

தயான் சிங் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டார்.

பீனாவுக்குப் போலீஸ் பதக்கமும் பரிசும் கிடைக்கப் போகின்றன.

அவை போதாவென்று இவள் தந்தை இவளுக்கு அடுத்த ஆண்டு திருமணமும் செய்து வைத்துவிடப் போகிறாராம்!

ஆதாரம்: இந்துஸ்தான் டைம்ஸ்.
தகவல்: கே. ஆர்.


ஓடோமாஸ் மட்டுமே உங்களுக்குக் கொசுக் கடியிலிருந்து 2-விதங்களில் பாதுகாப்பை அளிக்கிறது.

நீங்கள் இரவில் நிம்மதியாக உறங்க உதவுகிறது.

இதர கொசு விரட்டியைப் போலல்லாது ஓடோமாஸ் உங்களைப் பாதுகாக்கிறது.

1 

அதன் வாசனை கொசுக்களை விரட்டி அடிக்கிறது.

2 

அதன் ஒப்பற்ற கலவைப்பொருள் உங்கள் சருமத்தை இரவு முழுவதும் கொசுக்களிலிருந்து கவசம்போல் காக்கிறது.

இன்று இந்தியாவில் அதிகமாக விற்பனையாகும் கொசு விரட்டி ஓடோமாஸ் என்பதில் விந்தை எதுவுமில்லை.

உடனே
ஓடோமாஸ்
உபயோகியுங்கள்.

இல்லையேல்
கொசுக்கள் உங்களுக்கு சொல்ல முடியாத தொல்லையைத் தரும்.



மச்சர்
கா
துஷ்மன்

சிறு குழந்தைகளின் மென்மையான மேனிக்கு முற்றிலும் பத்திரமானது.

பல்சாரா
BALSARA

CHAITRA-BLS-86 TAM



விண்ணிலே விபத்து!

கடந்த பத்து ஆண்டுகளில் இந்தியன் ஏர் லைன்ஸ் விமானங்களுக்கு நேர்ந்த விபத்துக்களில் இதுதான் மிகப் பெரியது. விமானம் கிளம்பியவுடன் என்ன நடந்தது என்று சொல்ல ஓர் உயிரைக்கூட விட்டு வைக்காத பெருமையைச் சம்பாதித்த விபத்து தேடிக் கொண்டது.

சகுனம் சரியில்லை என்று கூறுவதுண்டு. அதை நம்பாதவர்களைக் கூட நம்ப வைத்து விடும்போலிருக்கிறது இந்த விபத்து. எண்பத்தி ஒன்பது பிரயாணிகளும், விமானக் குழுவினரும் மாலை ஆறுமணிக்குப் புறப்பட்டிருக்க வேண்டும். ஆனால் போயிங் வான வெளியில் ஒரு கழுகை உள்ளிழுத்து உறிஞ்சிவிட்டதால், அது மேற்கொண்டு பறக்காமல் திரும்பி விட்டது.

அடுத்தாற்போல வேறு ஒரு போயிங்கையே தயார் செய்ய முனைந்தார்கள். அதிலும் ஏதோ சிறு கோளாறு. கிளம்ப முடியவில்லை.


சில பிரயாணிகள் வீடு திரும்பும் வேகத்திலும், ஆர்வத்திலும் விமான நிலையச் சிப்பந்திகளை மாற்று ஏற்பாட்டுக்கு வற்புறுத்தினார்கள். சில மணி நேரங்களுக்கு முன்னால் தான் கல்லபடியாகவே டில்லியிலிருந்து பம்பாய்க்குப் பறந்து வந்திருந்த காரவெல் விமானத்தைச் சென்னைக்குப் புறப்படத் தயார் செய்தார்கள் அதிகாரிகள். அந்த விமானம் தொடர்ந்து பிரயாணம் செய்யத் தகுதியுள்ளது என்று சான்றிதழ் வழங்கினார்கள்.

காரவெல் விமானத்தில் இட வசதி குறைவானதால் சில பிரயாணிகள் பின்தங்க வேண்டியிருந்தது. ஆகவே அவர்கள் உயிர்களும் அவர்களுடன் தங்கிவிட்டன.

தோல் ஏற்றுமதி வியாபாரத் துறையில் ஈடுபட்டிருக்கும் திரு பார்த்தசாரதியும், அவர் மனைவியும் வெளிநாட்டுக் கண்காட்சிகளுக்கு வியாபார சம்பந்தமாகப் போய்விட்டு மிலானிலிருந்து பம்பாய் திரும்பினார்கள். உடனடியாகச் சென்னைக்குத் திரும்பிக் குழந்தைகளைப் பார்க்க ஒரே ஆவல். ஆனால் அவர்களுடைய பம்பாய் உறவினர்கள் அவர்களை நடு இரவில் சென்னைக்குப் புறப்படுவதற்குப் பதிலாக மறுநாள் காலை விமானத்தில் புறப்படும்படி வற்புறுத்தினார்கள். அவர்கள் கேட்காமல் விடாப்பிடியாக இந்தக் காரெவல் விமானத்தில்தான் கிளம்பினார்கள்!

சென்னை ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர் திரு ஜெயராமன், தம்முடைய சகாக்கள் பத்துப் பதினைந்து பேருடன் அவுரங்காபாத்தில் ஐந்து நாட்கள் தொடர்ந்து

படங்கள் நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்





நடந்த ஹோட்டல் தொழில் சம்பந்தமான மகாநாட்டுக்குப் போயிருந்தார். பம்பாயிலிருந்து எல்லோரும் சேர்ந்து சென்னைக்குத் திரும்ப ஏற்பாடு. விமானம் புறப்படுவதில் சிக்கலும் தாமதமும் இருப்பதை ஜெயராமன் உணர்ந்தார். இந்த நேரத்தில் கூட வந்த உறவுக்காரர் "ராத்திரி வேட்டா மெட்ராஸுக்குப் போய் என்ன செய்யப் போகிறீர்கள் ! காலை விமானத்தில் போய்க் கொள்ளலாம், வாருங்கள்!" என்று சொல்லி வைத்தார்.

ஜெயராமன் அவர்களுக்குச் சகுனங்களில் நம்பிக்கை உண்டு! நண்பர்களுக்குக் கையை ஆட்டிவிட்டு மீண்டும் தாஜ் ஹோட்டலுக்குத் திரும்பினார். மறுநாட் காலைப் பேப்பரைப் பார்த்தபோது பதறிப் போனார். ஹோட்டல் துறையில் பல காலம் பழகிய ஆப்த நண்பர்கள் பலரையும் மொத்தமாகப் பறிகொடுத்திருந்தார். உறவினர் உருவத்தில் சகுனத் தடை தோன்றி அவரைத் தப்ப வைத்தது.

ஜனாப் குலாம் மொகைதீன் மத்திய கிழக்கு நாடுகளில் சில வருஷங்களாகப் பணியாற்றுபவர். ஈஸ்ட் கோஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தில் ஸீனியர் கணக்குப் பரிசோதகர். கடைசிப் பெண் நசீமாவுக்குப் பதினைந்து வயது. அவளுக்குத் திருமணம் நிச்சயிக்க, அவளையும் அழைத்துக் கொண்டு துபாயிலிருந்து கிளம்பி பம்பாய்க்குத் திங்கட் கிழமை பகலில் வந்திருக்கிறார்.

பம்பாயிலிருந்து சென்னையிலுள்ள குடும்பத்தினருக்கு டெலிபோன் செய்திருக்கிறார். அன்று மாலை விமானத்தில் பம்பாயிலிருந்து கிளம்பி வருவதாகவும், குடும்பத்தினர் அனைவரையும் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சந்திக்க விரும்புவதாகவும் போன் செய்திருக்கிறார்.

இப்படி அவர் எல்லோரையும் விமான நிலையத்துக்கு அழைக்கும் வழக்கம் இல்லை. இந்தத் தடவை இது புதிதாக இருந்தது. ஒருவேளை ஒன்றரை வருடம் கழித்துத் தாயகம் திரும்புவதால் இந்த ஆசையோ என்று குடும்பத்தினர் எண்ணினார்கள். விமான நிலையத்தில் இரவு இரண்டு மணி வரை காத்திருந்தார்கள். அவர் வரவில்லை. அவலச் செய்திதான் வந்தது!

டி. டி. கே. நிறுவனத்தின் அதிபர் ஸ்ரீ டி. டி. வாசு இந்த விமானத்தில் பிரயாணம் செய்திருக்க வேண்டியவர். அவரை அதிருஷ்டம் 'தாமதம்' என்ற போர்வையில் காப்பாற்றியது. அவர் ஃபிராங்பர்ட்டிலிருந்து கிளம்பிய விமானம் தாமதமாக வந்ததால், இந்தக் காரெவல்லில் அவர் ஏற முடியவில்லை.

வயோதிகத் தாயாரைப் பார்க்க அமெரிக்காவிலிருந்து விடுமுறையில் வந்த டாக்டர் ராமமூர்த்தி, அமெரிக்காவிலிருக்கும் மகனைப் பார்த்துவிட்டுத் திரும்பிய திருச்சி சாமுவேல் தம்பதிகள், தலை தீபாவளிக்கு ஆவலாகத் துபாயிலிருந்து வந்த இளைஞன் ராமதாஸ், பதவி உயர்வை ஏற்றுக்கொள்ளக் கிளம்பிய வினோத் சர்மா, வெற்றிப் படம் தயாரித்து, அதன் விழாவாகத் திருப்பதி தரிசனத்துக்குக் கிளம்பிய ஆத்ம பிரகாஷ், மறுநாள் அமெரிக்காவுக்குக் கிளம்ப வேண்டும் என்ற அவசரத்தில் துபாயிலிருந்து திரும்பி வரும் நடிகை ராணி சந்திரா, அலுப்பினால், முந்திய விமானத்தில் ஏறாமல், இந்த விமானத்தைத் தேர்ந்தெடுத்த குண்டூர் புகையிலை வியாபாரி ஆதி நாராயணா, முன்னாள் காங்கிரஸ் எம். எல். ஏ. பொன்னப்ப நாடார், மிருதங்க வித்வான் கோதண்டராமன், மனைவி, தாயாருடன் உற்சாகமாக உலகப் பயணம் மேற்கொண்டு அந்த அனுபவங்களை உறவினர்களிடம் சொல்லி மகிழத் துடித்த அருணாசலம், முன்னாள் டென்னிஸ் ஆட்ட வீரர் ஜிம்மி மேத்தா— இப்படி வாழ்க்கையைப் பல கோணங்களிலிருந்து பார்த்து மகிழும் பலரையும் ஒரே நேரத்தில் ஒன்றாகத் தன் பாசக் கயிற்றால் பிணைத்து இழுக்கக் காலதேவனுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ ?

இந்தச் சோகத்துக்கிடையிலும் நமக்கு மெய் சிலிர்ப்பை ஏற்படுத்துகிற விஷயமும் ஒன்றுண்டு. விமானப் பைலட் குப்தா மரணம் நிச்சயம் என்பது தெரிந்தும் கடைசி வினாடி வரை கடமையுணர்ச்சியுடன் செயலாற்றியுள்ளார். சுற்றுப்புறத்தில் இருக்கும் விமானங்களுக்கோ, எண்ணெய்க் கிடங்குகளுக்கோ, கட்டடங்களுக்கோ எதற்கும் சேதமில்லாதபடி பற்றி எரிந்து கொண்டிருக்கும் விமானத்தை வெட்ட வெளியில் தரை தட்டச் செய்திருக்கிறார். தேசபக்தத் தியாகியின் மகன் அல்லவா!

—கோமதி ஸ்வாமிநாதன்



கோவி. மணிசேகரன்

பெரிய பாளையக்காரரை ஒரு கணம் எண்ணிப் பார்த்தார். புலிக்குப் பிறந்தது பூனையாகிப் போகாது என்பது எத்துணை உண்மை!

''தேவராஜா சொல்வதில் தவறில்லை. எதற்கும் சமாதானத் தூது அனுப்பிப் பார்ப்போம்! மெலிந்தவர்கள் வணங்கிப் போவதில் தவறில்லை. சமாதான உடன்படிக்கைக்கு வராவிட்டால் உங்கள் விருப்பப்படி போர்க்களத்திலேயே வீர சொர்க்கம் புகுவோம்! உங்கள் தந்தையின் ஆவி நமக்குத் துணை நின்று ஆசிஅளிக்குமாக!''

தந்தையாரான பெரிய பாளையக்காரரின் பேச்சை எடுத்ததும் பாலராஜனும் தேவராஜனும் தங்களை மறந்து சரவண ராஜாவைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு வேதனையைத் தெரிவித்தனர். கோட்டையுள் அடைபட்ட மக்களே சரவணராஜாவை நம்பியிருந்தார்கள் என்றால், இந்த இரு பிஞ்சு உள்ளங்கள் வேறு என்ன செய்ய முடியும்?

துண்டு நிலா வானிலே தொத்திக் கொண்டிருந்தது. தூது செல்லும் மேகங்கள் அவ்வப்போது மறைத்தும், வெளிப்படுத்தியும் மாய வித்தை காட்டின.

கடல் போன்ற படைகளுக்கிடையே வண்ணக் கூடாரம் அமைத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார், முகம்மதிய வரலாற்றிலேயே புகழ் ஏணியை நிறுத்திய மாவீரர் ஹைதர் அலி. அவருடைய கண்கள் மூடிக் கொண்டிருந்தாலும், தூக்கம் அரைத் தூக்கம்தான். சிந்தனையும் அதனால் அவ்வப்போது தொத்தித் தொடர்ந்த மின்னல் கனவுகளும் தண்ட நாயகன் கோட்டையை வலம் வந்து கொண்டிருந்தன.

இந்தச் சரவண ராஜா பணிந்தால் என்ன மூழ்கிவிடப் போகிறது? பெரிய பாளையக்காரரும் போரில் மாண்டு விட்டார். புகழ் பெற்ற கோட்டையும் தரை மட்டமாக வேண்டுமா?

முற்றுகையிட்ட போர் வீரர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் நிம்மதியாக நித்திரை செய்து கொண்டிருந்தனர். பகல் முழுதும் கோட்டையைத் தகர்க்கக் குண்டு மாரி பொழிந்தவர்கள் ஆயிற்றே! ஆனால் ஒரே ஒருவன் மட்டும் உலவிக் கொண்டிருந்தான்! அவன்தான் யாசின்கான். குதிரைப் படை செலுத்துவதில் தனக்கு நிகரில்லாதவன். இரண்டு கண்கள் இருக்கும்போதே தூக்கம் சிந்தனைக்கு விரோதி என்று நினைப்பவன். இப்போது ஒற்றைக் கண்ணன்! அதுவும் ஒரு கண் யாரால் பழுதானதோ, அவர்களைப் பாழாக்க வேண்டிப் படையெடுத்து வந்திருக்கிறான்! தூக்கம் பக்கத்தில் நிற்குமா?

பாளையக் கோட்டைகள் அனைத்தையும் பணிய வைத்துவிட்ட ஹைதர் அலியால், தண்ட நாயகன் கோட்டையைப் பணிய வைக்க முடியாமல் போய்விட்டது. எனவே, யாசின் கான் தலைமையில் பெரும் படையை அனுப்பி வைத்தார். பவானி நதி அப்போது இரத்தப் பிரவாகம் எடுத்து ஓடியது. ஹைதர் அலியின் படைகள் அழிவுற்றுச் சின்னா பின்னமாயின!

மருண்ட யாசின்கான் தப்பியோட வழி தேடினான். அப்படித் தப்பும்போது அவனுடைய கொடூரக் கண்களுள் ஒன்று குத்தப்பட்டுக் குழியாயிற்று. பெரிய பாளையக்காரர் தம்முடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார். ஆனால் யாசின்கானுடைய வஞ்சம் மட்டும் தீர்ந்தபாடில்லை. அது தீராத வஞ்சமாகவே கடைசி வரையில் நிலைத்தது.

தீபாவளிக் காட்சி!

படரும் வண்ணங்கள் ;
புனித எண்ணங்கள்
இனிப்புப் பண்டங்கள் ;
இன்சொல் கண்டங்கள்.

நேயர்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்கள்!

மேலட்டை வண்ணப்படம் :
சரஸ்வதி சத்தியமூர்த்தி



கண்ணிழந்து தப்பி வந்த யாசின் கானைக் கண்டதும் ஹைதர் கடுங் கோபங் கொண்டார். "தண்டநாயகன் பாளையத்துக்கு இத்தனை செருக்கா? தக்க தண்டனையை அளித்தே தீர வேண்டும்" என்ற மனப் பாங்கில் மீண்டும் படைகளைத் தயாராக்கினார். வஞ்சம் தீர்க்கும் வாய்ப்பை எதிர் நோக்கிக் கொண்டிருந்த யாசின் கானும் படைக்குத் தலைமை தாங்கிப் பவானி ஆற்றங் கரை நோக்கி மீண்டும் வந்தான்.

யாசின் கான் மாவீரன்தான். ஆனால், கொடிய வீரன். அப்போதை ஹைதர் அலியின் 'சாட்டை' ஆட்சிக்குத் தலைவனும் அவனே! அந்தப் போரில்தான் பாளையக்காரர் வீர சொர்க்கம் அடைந்தார்.

பாளைப் படைகள் கலகலத்தன. கோட்டைக் கதவங்கள் மூடப்பட்டன. பணிவை எதிர்பார்த்த யாசின்கான், அது கிடைக்காமல் போய் விடவே பயங்கர உருவெடுத்து முற்றுகையை நீடிக்கவிட்டான். இப்படி ஒரு மாத காலம் கழிந்தது.

முற்றுகை நீடிப்பைக் கேள்விப்பட்ட ஹைதர்அலி, பெரும் படையுடன் சண்டமாருதம் போல் சீறி வந்தார்! அவருடைய வருகைதான், கோட்டையுள் வேதனையே உருவாகியிருந்த அதிகாரி – கில்லேதாரர் சரவண ராஜாவைக் கலங்கச் செய்தது! அதன்பிறகுதான் அவருடைய இதயத்தே சமாதான உடன்படிக்கை அரும்பி, இளவரசர்களான பாலராஜனிடமும் தேவராஜனிடமும் வாதாடி அமைதி காண முனைந்தது.

சூரியன் கீழ்வானில் உதயமானான். உதயத்துக்குப் பிறகு ஒன்பது நாழிகைகள் ஓடி மறைந்தன. தூது அறிக்கையை ஏந்திய கண்ணப்பராஜாவும் அவனைத் தொடர்ந்து இரு போர்வீரர்களும் பகைவரின் படை முகாமுள் நுழைந்தனர்.

சமாதானக் கொடி ஏந்தி வரும் வீரர்களைக் கண்ட முகம்மதிய வீரர்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர். அந்த ஆரவாரத்தினூடே கேலிக் குரல்களும் எழத்தான் செய்தன.

இதற்குள் செய்தி ஹைதர் அலிக்கு எட்டி விட்டது. யாசின்கான் பற்களை நறநற என்று கடித்துக் கொண்டான். சில நாழிகைகளுக்குப் பிறகு பாளையக்காரர்களிடமிருந்து தூது வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்துவிட்டுச் சென்றான் வாயிற் காவலன் ஒருவன்.

கண்ணப்பராஜா உள்ளே வரவழைக்கப்பட்டான். வீரார்ந்த கோலத்துடன் வீற்றிருந்த ஹைதர் அலியைக் கண்டதும் கண்ணப்பராஜா ஒரு கணம் மரத்துவிட்டான். அவன் ஸ்ரீரங்கப்பட்டினத்துச் சிங்கத்தைப் பற்றிய செய்திகளைப் பல கோணங்களில் கேள்விப்பட்டிருந்தான். அமைதியே உருவானவராய் அமர்ந்திருந்த ஹைதர்அலி வியப்பான உருவம் போன்றே தோன்றினார்!

சமாதானச் செய்திச் சுருள் மன்னர் ஹைதர் அலியின் முன் படைக்கப்பட்டது. செய்தியை அறிந்த ஹைதர் அலி, அதை யாசின்கானிடம் நீட்டினார். அவருடைய முகத்திலிருந்த அமைதி, படித்து முடித்த யாசின்கானுடைய முகத்தில் படர மறுத்தது. அதனைக் கண்ணப்பன் குறிப்பால் உணர்ந்து கொண்டான்.

அடுத்த கணம் யாரும் எதிர்பாராதவண்ணம் யாசின்கான் கெக்கலி கொட்டிச் சிரித்தான். மாமன்னர் ஹைதர் அலிக்குக்கூட அது என்னவோ போல் இருந்தது. யாசின் கானுக்கு அவர் கொடுத்திருந்த செல்வாக்கு– இடம் அவ்வாறனவை.

"யாசின்கான்! உன் சிரிப்பை நோக்கும் போது முடிவில் சீற்றம் இருப்பதாக நினைக்கிறேன்!"

"சந்தேகமில்லை, சர்க்கார்! இந்த உடன்படிக்கையை நம்மால் ஏற்க முடிகிறதா?"

"ஏன்?"

"கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் பாளையக்காரர்கள்! என் கண் கெட்டது அதற்காகவல்ல! பாளையக்காரர்கள் வம்சத்தையே பழி வாங்க!"

"யாசின்! சமாதானம் என்று வரும் போது நாம் ஏற்கத்தான் வேண்டும்! அது தான் அரசியல் முறை – மனிதாபிமானம்!"

"உண்மை! ஆனால் இந்த நச்சரவங்கள் போன்ற பாளையக்காரர்கள் விஷயத்தில் மனிதாபிமானம் பார்க்கக் கூடாது, சர்க்கார்! இன்று சமாதாவ என்பார்கள்; நாளைக்கு நாம் எதிர்பாராதபோது நம்மையே தாக்குவார்கள்! மனிதாபிமானம் அற்ற



கோவி. மணிசேகரன்

பெரிய பாளையக்காரரை ஒரு கணம் எண்ணிப் பார்த்தார். புலிக்குப் பிறந்தது பூனையாகிப் போகாது என்பது எத்துணை உண்மை!

''தேவராஜா சொல்வதில் தவறில்லை. எதற்கும் சமாதானத் தூது அனுப்பிப் பார்ப்போம்! மெலிந்தவர்கள் வணங்கிப் போவதில் தவறில்லை. சமாதான உடன்படிக்கைக்கு வராவிட்டால் உங்கள் விருப்பப்படி போர்க்களத்திலேயே வீர சொர்க்கம் புகுவோம்! உங்கள் தந்தையின் ஆவி நமக்குத் துணை நின்று ஆசி அளிக்குமாக!''

தந்தையாரான பெரிய பாளையக்காரரின் பேச்சை எடுத்ததும் பாலராஜனும் தேவராஜனும் தங்களை மறந்து சரவண ராஜாவைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு வேதனையைத் தெரிவித்தனர். கோட்டையுள் அடைபட்ட மக்களோ சரவணராஜாவை நம்பியிருந்தார்கள் என்றால், இந்த இரு பிஞ்சு உள்ளங்கள் வேறு என்ன செய்ய முடியும்?

தேண்டு நிலா வானிலே தொத்திக் கொண்டிருந்தது. தூது செல்லும் மேகங்கள் அவ்வப்போது மறைத்தும், வெளிப்படுத்தியும் மாய வித்தை காட்டின.

கடல் போன்ற படைகளுக்கிடையே வண்ணக் கூடாரம் அமைத்து ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார், முகம்மதிய வரலாற்றிலேயே புகழ் ஏணியை நிறுத்திய மாவீரர் ஹைதர் அலி. அவருடைய கண்கள் மூடிக் கொண்டிருந்தாலும், தூக்கம் அரைத் தூக்கம்தான். சிந்தனையும் அதனால் அவ்வப்போது தொத்தித் தொடர்ந்த மின்னல் கனவுகளும் தண்ட நாயகன் கோட்டையை வலம் வந்து கொண்டிருந்தன.

இந்தச் சரவண ராஜா பணிந்தால் என்ன மூழ்கிவிடப் போகிறது? பெரிய பாளையக்காரரும் போரில் மாண்டு விட்டார். புகழ் பெற்ற கோட்டையும் தரை மட்டமாக வேண்டுமா?

முற்றுகையிட்ட போர் வீரர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் நிம்மதியாக நித்திரை செய்து கொண்டிருந்தனர். பகல் முழுதும் கோட்டையைத் தகர்க்கக் குண்டு மாரி பொழிந்தவர்கள் ஆயிற்றே! ஆனால் ஒரே ஒருவன் மட்டும் உலவிக் கொண்டிருந்தான்! அவன்தான் யாசின்கான். குதிரைப் படை செலுத்துவதில் தனக்கு நிகரில்லாதவன். இரண்டு கண்கள் இருக்கும்போதே தூக்கம் சிந்தனைக்கு விரோதி என்று நினைப்பவன். இப்போது ஒற்றைக் கண்ணன்! அதுவும் ஒரு கண் யாரால் பழுதானதோ, அவர்களைப் பாழாக்க வேண்டிப் படையெடுத்து வந்திருக்கிறான்! தூக்கம் பக்கத்தில் நிற்குமா?

பாளையக் கோட்டைகள் அனைத்தையும் பணிய வைத்துவிட்ட ஹைதர் அலியால், தண்ட நாயகன் கோட்டையைப் பணிய வைக்க முடியாமல் போய்விட்டது. எனவே, யாசின் கான் தலைமையில் பெரும் படையை அனுப்பி வைத்தார். பவானி நதி அப்போது இரத்தப் பிரவாகம் எடுத்து ஓடியது. ஹைதர் அலியின் படைகள் அழிவுற்றுச் சின்னா பின்னமாயின!

மருண்ட யாசின்கான் தப்பியோட வழி தேடினான். அப்படித் தப்பும்போது அவனுடைய கொடூரக் கண்களுள் ஒன்று குத்தப்பட்டுக் குழியாயிற்று. பெரிய பாளையக்காரர் தம்முடைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டார். ஆனால் யாசின்கானுடைய வஞ்சம் மட்டும் தீர்ந்தபாடில்லை. அது தீராத வஞ்சமாகவே கடைசி வரையில் நிலைத்தது.

தீபாவளிக் காட்சி!

படரும் வண்ணங்கள் ;
புனித எண்ணங்கள்
இனிப்புப் பண்டங்கள் ;
இன்சொல் கண்டங்கள்.

நேயர்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்கள்!

மேலட்டை வண்ணப்படம் :
சரஸ்வதி சத்தியமூர்த்தி



கண்ணிழந்து தப்பி வந்த யாசின் கானைக் கண்டதும் ஹைதர் கடுங் கோபம் கொண்டார். "தண்டநாயகன் பாளையத்துக்கு இத்தனை செருக்கா? தக்க தண்டனையை அளித்தே தீர வேண்டும்" என்ற மனப் பாங்கில் மீண்டும் படைகளைத் தயாராக்கினார். வஞ்சம் தீர்க்கும் வாய்ப்பை எதிர் நோக்கிக் கொண்டிருந்த யாசின் கானும் படைக்குத் தலைமை தாங்கிப் பவானி ஆற்றங் கரை நோக்கி மீண்டும் வந்தான்.

யாசின் கான் மாவீரன்தான். ஆனால், கொடிய வீரன். அப்போதை ஹைதர் அலியின் 'சாட்டை' ஆட்சிக்குத் தலைவனும் அவனே! அந்தப் போரில்தான் பாளையக்காரர் வீர சொர்க்கம் அடைந்தார்.

பாளைப் படைகள் கலகலத்தன. கோட்டைக் கதவங்கள் மூடப்பட்டன. பணிவை எதிர்பார்த்த யாசின்கான், அது கிடைக்காமல் போய் விடவே பயங்கர உருவெடுத்து முற்றுகையை நீடிக்கவிட்டான். இப்படி ஒரு மாத காலம் கழிந்தது.

முற்றுகை நீடிப்பைக் கேள்விப்பட்ட ஹைதர்அலி, பெரும் படையுடன் சண்டமாருதம் போல் சீறி வந்தார்! அவருடைய வருகைதான், கோட்டையுள் வேதனையே உருவாகியிருந்த அதிகாரி — கில்லேதாரர் சரவண ராஜாவைக் கலங்கச் செய்தது! அதன்பிறகுதான் அவருடைய இதயத்தே சமாதான உடன்படிக்கை அரும்பி, இளவரசர்களான பாலராஜனிடமும் தேவராஜனிடமும் வாதாடி அமைதி காண முனைந்தது.

சூரியன் கீழ்வானில் உதயமானான். உதயத்துக்குப் பிறகு ஒன்பது நாழிகைகள் ஓடி மறைந்தன. தூது அறிக்கையை ஏந்திய கண்ணப்பராஜாவும் அவனைத் தொடர்ந்து இரு போர்வீரர்களும் பகைவரின் படை முகாமுள் நுழைந்தனர்.

சமாதானக் கொடி ஏந்தி வரும் வீரர்களைக் கண்ட முகம்மதிய வீரர்கள் பெருத்த ஆரவாரம் செய்தனர். அந்த ஆரவாரத்தினூடே கேலிக் குரல்களும் எழத்தான் செய்தன.

இதற்குள் செய்தி ஹைதர் அலிக்கு எட்டி விட்டது. யாசின்கான் பற்களை நறநற என்று கடித்துக் கொண்டான். சில நாழிகைகளுக்குப் பிறகு பாளையக்காரர்களிடமிருந்து தூது வந்திருக்கும் செய்தியைத் தெரிவித்துவிட்டுச் சென்றான் வாயிற் காவலன் ஒருவன்.

கண்ணப்பராஜா உள்ளே வரவழைக்கப்பட்டான். வீரார்ந்த கோலத்துடன் வீற்றிருந்த ஹைதர் அலியைக் கண்டதும் கண்ணப்பராஜா ஒரு கணம் மரத்துவிட்டான். அவன் ஸ்ரீரங்கப்பட்டினத்துச் சிங்கத்தைப் பற்றிய செய்திகளைப் பல கோணங்களில் கேள்விப்பட்டிருந்தான். அமைதியே உருவானவராய் அமர்ந்திருந்த ஹைதர்அலி வியப்பான உருவம் போன்றே தோன்றினார்!

சமாதானச் செய்திச் சுருள் மன்னர் ஹைதர் அலியின் முன் படைக்கப்பட்டது. செய்தியை அறிந்த ஹைதர் அலி, அதை யாசின்கானிடம் நீட்டினார். அவருடைய முகத்திலிருந்த அமைதி, படித்து முடித்த யாசின்கானுடைய முகத்தில் படர மறுத்தது. அதனைக் கண்ணப்பன் குறிப்பால் உணர்ந்து கொண்டான்.

அடுத்த கணம் யாரும் எதிர்பாராதவண்ணம் யாசின்கான் கெக்கலி கொட்டிச் சிரித்தான். மாமன்னர் ஹைதர் அலிக்குக்கூட அது என்னவோ போல் இருந்தது. யாசின் கானுக்கு அவர் கொடுத்திருந்த செல்வாக்கு— இடம் அவ்வாறானவை.

"யாசின்கான்! உன் சிரிப்பை நோக்கும் போது முடிவில் சீற்றம் இருப்பதாக நினைக்கிறேன்!"

"சந்தேகமில்லை, சர்க்கார்! இந்த உடன்படிக்கையை நம்மால் ஏற்க முடிகிறதா?"

"ஏன்?"

"கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்பவர்கள் பாளையக்காரர்கள்! என் கண் கெட்டது அதற்காகவல்ல! பாளையக்காரர்கள் வம்சத்தையே பழி வாங்க!"

"யாசின்! சமாதானம் என்று வரும் போது நாம் ஏற்கத்தான் வேண்டும்! அது தான் அரசியல் முறை — மனிதாபிமானம்!"

"உண்மை! ஆனால் இந்த நச்சரவங்கள் போன்ற பாளையக்காரர்கள் விஷயத்தில் மனிதாபிமானம் பார்க்கக் கூடாது, சர்க்கார்! இன்று சமாதானம் என்பார்கள்; நாளைக்கு நாம் எதிர்பாராதபோது நம்மையே தாக்குவார்கள்! மனிதாபிமானம் அற்ற

பாலுஸேரி பெனிபிட் சிட் பண்டு
பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம் & பதிவு செய்யப்பட்ட அலுவலகம்
"பாலுஸேரி பில்டிங்ஸ்". 3, சிங்காராச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005
தந்தி: 'EVERMANS'. போன்: 841194 & 843938. தபால் பெட்டி: 414

நீண்டகாலச் சிட்டுகள்

50 மாதங்கள் — 50 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTN	ரூ. 100/-	ரூ. 5,000/-
LTO	ரூ. 50/-	ரூ. 2,500/-
LTP	ரூ. 20/-	ரூ. 1,000/-

40 மாதங்கள் — 40 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
LTA	ரூ. 500/-	ரூ. 20,000/-
LTB	ரூ. 250/-	ரூ. 10,000/-
LTC	ரூ. 125/-	ரூ. 5,000/-

குறுகியகாலச் சிட்டுகள்

20 மாதங்கள் — 20 அங்கத்தினர்கள்

மாதம் ரூ. 30/- முதல் ரூ. 500/- வரை சந்தா

25 மாதங்கள் — 25 அங்கத்தினர்கள்

வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை	வகுப்பு	மாதச் சந்தா	சீட்டுத் தொகை
A	ரூ. 200/-	ரூ. 5,000/-	D	ரூ. 25/-	ரூ. 625/-
B	ரூ. 100/-	ரூ. 2,500/-	E	ரூ. 20/-	ரூ. 500/-
C	ரூ. 50/-	ரூ. 1,250/-	F	ரூ. 15/-	ரூ. 375/-

சேரும் குரூப்பை விவரித்து எழுதவும்

கிளைகள் : புது டில்லி - பம்பாய் - பெங்களூர் - கல்கத்தா - கோயமுத்தூர்

ஸ்தாபிதம் : 1947

30 YEARS

எங்கள் சேவை உங்களுக்குத்தேவை



ப்ளீச் செய்யாமலே கருநிற மேனியை சிகப்பாக்கும் க்ரீம்



உலகு காணும் புதுமை: நிறத்தைக் கரைக்காமலே (ப்ளீச் செய்யாமலே) கரு மேனியைச் சிகப்பாக்கும் சாதனம் எக்காலத்திலும் இருந்ததில்லை. சருமத்தைச் சிவப்பாக்க இதுநாள்வரை செய்த முயற்சிகள் எல்லாமே குருட்டு முயற்சிகள், முரட்டு முறைகள். ப்ளீச்சுகளின் சங்கதி உங்களுக்குத் தெரியும்: இருக்கும் நிறத்தையும் கரைத்து வெளிற வைத்து விடும். அடிக்கடி உபயோகிப்பதோ ஆபத்து: காரணம், சருமத்தையே பாதிக்கும் அவற்றின் கடுங்குணம்.

விடிவெள்ளி காட்டும் விஞ்ஞான சாதனையாம் ஃபேர் அண்ட் லவ்லி இரு வழிகளில் வேலை செய்கிறது:

1. உள்ளூர வேலை செய்யும் வைட்டமின் ஒன்று அதிலுள்ளது. இந்தக் க்ரீமை இடும்போதே, இதிலுள்ள வைட்டமின் சருமத்தினுள் இறங்குகிறது. இழைத்துத் தடவும் போதே உணருவீர்கள் இதன் செயல்வேகத்தை; பரவும் சருமக் கருமையினை மெல்லத் திசைதிருப்புகிறது இது. வேளாவேளை ஆறு வாரங்கள் உபயோகித்துவந்தால் மேனி வண்ணம் மாறக் காண்பீர். பிறரும் காண்பார்.

2. வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பதற்கு, சூரிய ஒளி படாதபடி தடுக்கும் சாதனம் அடங்கியுள்ளது. நிறம் கருப்பதற்குக் காரணமான கதிரொளியை சருமத்தின் மீது படவிடாமல் தடுத்து விலக்கி, மேனியைக் காத்திடுகிறது ஃபேர் அண்ட் லவ்லி.

சிகப்பழகு தந்து, மேலும் பல வகையில் சிறப்பூட்டும் க்ரீம் ஃபேர் அண்ட் லவ்லி.

ஒப்பனைக்கு அடிப்படையாக தினமும் ஒரு முறை இடத்தக்கது ஃபேர் அண்ட் லவ்லி: இரு முறை உபயோகித்தாலோ நிறைவான பலனுண்டு. வேளாவேளை உபயோகித்துவாருங்கள், மங்காத சிகப்பு நிறத் தங்க மேனி மனம்போல் உங்களுக்கே.

சிகப்பான மேனியழகுக்கு மென்மையான வழி- ஃபேர் அண்ட் லவ்லி


தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் கிடைக்கும்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.

லின்டாஸ்-FALOV-6-140 TM [R]

1980 ல் மாஸ்கோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் பந்தயங்களுக்கான சின்னம் இது. 8000 ஓவியர்கள் வரைந்த 20,000 சின்னங்களில் இருந்து இச்சின்னம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதை வரைந்த ஓவியர் 25 வயதான *Vladimir Arsentyev*.

ஆதாரம்: Sports in the U.S.S.R
தகவல்: நா. நாகரத்தினம்



வர்கள்! இல்லையென்றால் என் கண்ணைப் பிடுங்கி இருப்பார்களா?''

யாசின்கான் பேச்சை முடிக்கும் வரை காத்திருந்த கண்ணப்பராஜன் வாய் திறந்தான். அவனால் பொறுக்க முடியவில்லை.

'' சர்க்கார்! கண்ணை யாரும் வேண்டும் என்றே பிடுங்கி இருக்கமாட்டார்கள்! தென்னாட்டவர்கள் எப்போதுமே பண்பானவர்கள்! போரில் அசந்தர்ப்பவசமாகத் தளபதி அவர்கள் கண்ணை இழந்திருக்கலாம்! அதற்காகப் பாளையக்காரர்களை மனிதாபிமானம் அற்றவர்கள் என்று சொல்லிவிட முடியாது! சர்க்கார் பெரிய மனம் கொண்டு சமாதான உடன்படிக்கைக்கு ஒப்புதல் வேண்டும்!''

கண்ணப்ப ராஜாவின் தலை வணங்கியது. அப்படி வணங்கியபோது அதற்குத்தான் எத்தனை நாணம்!

ஹைதர்அலி, யாசின்கானை மீண்டும் நோக்கினார். பிறகு கண்ணப்பராஜாவுக்குப் பதில் சொன்னார்:

'' தூதனே! வாயை அடக்கிப் பேசு! சமாதானத்தை ஏற்க முடியாது! போர் முகத்தில் கோட்டையைச் சரணடைய வைக்க வேண்டும் என்பதே எமது அவா!''

''அதைவிடப் பாளையக்காரர்கள் வமிசத்தின் கண்களைப் பிடுங்கி வேண்டுமானால் காணிக்கைப் பொருளாக அனுப்புங்கள்; அப்போது சமாதானத்தை ஏற்க முடியும் என்று கூறுங்கள்! உங்கள் ஆத்திரத்துக்குப் பொருளுண்டு!'' என்றான் கண்ணப்பராஜா.

''அதை ஏன் செய்ய மறந்து இப்படி உடன்படிக்கை அனுப்ப வேண்டும்? யாசின்கான் சென்ற முறை ஓடியது போல் ஓடமாட்டான் என்பது உங்களுக்குத் தெரியும்தானே? அவன் கண்ணாடியில் தன்னுடைய முகத்தைப் பார்க்கும்போதெல்லாம் பாளையக்காரர்களுடைய முகங்கள் எதிரே வந்து நிற்கின்றன.'' — ஹைதர் அலி முகத்தைச் சுழித்தார்.

'' சர்க்காரும் அதை விரும்புகிறீரா?''

— மாவீரன் ஹைதர் அலிக்கே தர்மசங்கடமாகப் போய்விட்டது, கண்ணப்பராஜாவின் இந்தக் கேள்வி. உடன் யாசின்கானை நோக்கிய ஹைதர், ''யாசின், இதை நீ விரும்புகிறாயா?'' என்றார்.

யாசின்கான், ''என் கண்ணுக்குக் கண்! இதை எடுத்துக் கூறித்தான் இரண்டாம் முறை படை திரட்டினேன்! தாங்களும் இதற்கான ஒப்புதலோடுதான் படை அனுப்பினீர்கள், சர்க்கார்!'' என்றான் கடுகடுப்புடன்.

'' யாசின்கான்!'' — ஹைதர் அலறினார். ''அப்படியென்றால்....''

'' கண்ணுக்குக் கண்! பாளைய வம்சத்தின் கண்களைப் பிடுங்கியே தீர வேண்டும்.''

யாசின்கான் குரலில் உறுதி இருந்தது.

'' அப்போதுகூடத் தாங்கள் இழந்த கண்ணைப் பெற முடியாதல்லவா?'' — கண்ணப்ப ராஜன் விம்மிய குரலில் இரக்கம் தெரிந்தது.

''இல்லை; அப்போதுதான் இழந்த கண்ணைப் பெற முடியும்! அந்தப் பாளைய வம்சத்துக் கண்ணை என் குழி விழுந்த கண்ணில் பொருத்தியாவது உலகை நோக்குவேன்!''

—இம்முறை யாசின்கான் அதிகமாகவே கெக்கலி கொட்டிச் சிரிக்கத் தொடங்கினான். அவனுடைய பேய்ச் சிரிப்பு அடங்குமுன்னம் எதிர்பாராத ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டது. யாரும் எதிர்பாராத நிகழ்ச்சி அது! கெக்கலி கொட்டிச் சிரித்த யாசின்கான், ''உய்'' என்று கூவிவிட்டான்! அவனுடைய கை நடுங்கியது; கண் மருண்டது!

கண்ணப்ப ராஜாவின் ஒரு கண்ணில் ரத்தம் பீறிட்டுக் கொண்டிருந்தது. ஆம்; அவன் ஒரு கணம் யோசித்து, மறுகணம், இடுப்பிலிருந்த குத்துவாளை உருவி, ஒரு கண்ணைப் பிடுங்கி, யாசின்கானுடைய கையில் வைத்து, '' உலகம் தெரிகிறதா என்று பாருங்கள், யாசின்! தெரிந்தால் போரைத் தொடங்கலாம்!'' என்று கூறினான். அடுத்து மயக்கம் அவனை ஆட்கொண்டது. ஹைதர் அலி செய்வதென்னவென்று தோன்றாதவராய் விழித்து, வெலவெலத்து எழுந்தோடி வந்தார்.

'' தூதுவனே! என்ன காரியம் செய்து விட்டாய்!''

ஹைதர்அலி மேலும் பேசவில்லை. உடன் அரச வைத்தியர் வரவழைக்கப்பட்டார். கவனிப்பில் கனிக் கரம் தென்பட்டது.

யாசின்கான் நாடி தளர்ந்து மரத்து நின்று விட்டான்.

''யாசின்! செயலாற்றுபவன்தான் வீரன்! முரடனல்ல!''

மன்னர் ஹைதர்அலியின் வாயிலிருந்து வெளிவந்த ரத்தினச்சுருக்கமான சொற்கள் இவைதாம்! அடுத்துக் கண்ணப்பராஜாவை நோக்கினார்:

'' தூதுவனே! உன் நெஞ்சுறுதி நிறைந்த தியாகத்தை மெச்சுகிறேன்! சரவணப்பாவுக்கு ஆள் அனுப்பியாகிவிட்டது! சமாதானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது! இதன் மூலம் யாசின்கானுடைய கொடூரத் தன்மையும் அமைதி அடைந்திருக்கும் என்று நினைக்கிறேன்!''

துன்பப்படும் அந்த நேரத்தில் — ஹைதர் அலியின் முடிவு கேட்டு, கண்ணப்பராஜாவின் முகம் துருவ நட்சத்திரம்போல் பிரகாசித்தது.

டாக்டர் ஜோன்ஸ் இதயமாற்று ஆபரேஷனுக்காகவே அமெரிக்காவில் ஆறு வருடப் பயிற்சி பெற்று வந்தவர். அவரோடு இணைந்து பணியாற்றியவர் ஜாகப்.

''டாக்டர்! ஒரு சின்னச் சந்தேகம். அது அபத்தமாகக்கூட இருக்கலாம்...'' ஹவுஸ் சர்ஜன் ஹரி பீடிகையுடன் ஆரம்பித்தார்.

''சரி. சொல்லுங்கள்.'' பச்சைக் கொடி காட்டினார் ஜோன்ஸ்.

''இந்த ஆபரேஷனுக்குப் பிறகு நோயாளியின் உணர்ச்சிகள்... குறிப்பாகக் குண நலன்கள் மாறுவதற்கு வாய்ப்புண்டா?''

''இல்லை. நிச்சயம் இல்லை. நீங்க சொல்கிற மாதிரி கதையிலே கவிதையிலே நடக்கலாம். இதயம் உணர்ச்சி இதெல்லாம் இருதயம் சம்பந்தப்பட்டதே அல்ல. மூளையே அத்தகைய எண்ணங்களையும் செயல்களையும் தரும் பிறப்பிடம்!''

''நான் ஒத்துக்கறேன், டாக்டர். ஆனால் நோயாளிக்கு நாம் பொருத்தற இதயம் யாருடையதுன்னு தெரியறதாலே ஸைகாலாஜிகலா அவனைப் போல் நாம ஆயிடுவோமோங்கற எண்ணத்தாலே மாற வாய்ப்புண்டல்லவா?'' டாக்டர் ஜாகப் மூளை வைத்தியத்தில் நிபுணர். 'நியூரோ சர்ஜரி'யில் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலருள் ஒருவர்.

''இந்த மாதிரி இதய மாற்று ஆபரேஷனே இல்லாமல் கூட நல்லவர் கெட்டவர் ஆவதில்லையா? கெட்டவர் நல்லவராகத் திருந்துவதில்லையா?'' ஜோன்ஸ், ஜாக்கப்பைக் கேட்டார்.

''இருக்கலாம்... இப்போது நாம் ஆபரேஷன் செய்யும் கேஸ் ரொம்ப விசித்திரமானது!''

''ஆமா, ஆமா! கர்த்தரின் தொண்டருக்குக் கசாப்புக் கடைக்காரன் இதயத்தைப் பொருத்தினால் ஃபாதர் அருள்சாமி காதர்



பாட்சாவாக மாறிவிடுவாரோன்னுசந்தேகம், அதுதானே...!'' ஜோன்ஸ் முகத்தில் புன்னகை அரும்பியது.

ஹரி குறுக்கிட்டார்: ''ஃபாதர் அருள்சாமி ஒழுக்கத்துக்கு உறைவிடமாய், சேவையே லட்சியமாய் வாழ்றவர்...''

ஜாகப் தொடர்ந்தார்: ''காதர் பாட்சா தொழில்தான் கசாப்புக் கடைன்னு இல்லே... அவன் வாழ்க்கையே கசாப்புக் கடைதான்... அவன் செய்யாத பாவம் இல்லே....''

''இப்பக்கூட ஆயுள் கைதியா ஜெயில்லே இருந்தவன். அங்கே ஏதோ கைகலந்து மண்டையைப் பிளந்து, இவனும் மண்டையைப் போட இங்கே வந்திருக்கிறான்.''

ஜோன்ஸ் கேட்டார்: ''கடைசி நேரத்திலே யாவது இவனுக்கு நல்ல எண்ணம் வந்து தானே இவன் இதயத்தை வழங்க முன் வந்திருக்கணும்....?''



ஆர். மு. சாரதி

''ஆஸ்பத்திரியிலே சாகணும் அல்லது தூக்கிலே தொங்கணும். ஆபத்து சந்நியாசம் மாதிரி அவன் இதயம் நன்கொடை! போயும் போயும் ஃபாதருக்கு இவன் இதயமா கிடைக்கணும்?'' ஹரியின் சந்தேகம் விட்டதாகத் தெரியவில்லே.

''ஏன், இதிலே தப்பு என்ன இருக்கு? அவன் இதயம் நல்ல பலமா யிருக்கு.''

''சரி. ஒரு பரிசோதனையாகத்தான் செய்து பார்ப்போமே... ஃபாதர் அருள்சாமி காதர் பாட்சா ஆயிடமாட்டாருன்னு.'' ஜாகப் மத்தியஸ்தம் செய்து வைத்தார்.

''ஆகமாட்டார். அப்படியே ஆனாலும் அது ஆபரேஷனாலே இல்லேன்னு அடிச்சுச் சொல்லுவேன். ஒரு கேஸை வைச்சு உலக உண்மையாகவும் பேசக் கூடாது.'' ஜோன்ஸ் விவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத் தம் தனி அறையை நோக்கி நடந்தார். மௌனமாக ஜாக்கப்பும் ஹரியும் அவரைத் தொடர்ந்தார்கள்.

அவர்களுடைய இத்தனை விவாதங்களிலும் பங்கு பெறாதவராக அங்கேயே அந்தத் தனி ஏ.ஸி. அறைக் கட்டிலில் கண்ணயர்ந்தவராகப் படுத்திருந்தார் ஃபாதர் அருள்சாமி. தமக்கு எந்த விதமான தனிச் சலுகையும் கூடாது என்று வற்புறுத்திய போதிலும் அவருக்கு அந்தப் பொது மருத்துவமனையில் அளிக்கப்பட்ட சலுகைக்குக் காரணம் அவர் தன்னலமற்ற தொண்டுதான்.

'தொண்டு' என்ற வார்த்தையில் அடங்குபவையா அவர் சாதனைகளும், அதை அடைய அவருக்கு ஏற்பட்ட சோதனைகளும்? வெறும் பாதிரி மேடு என்று அழைக்கப்பட்ட அந்தக் குப்பை மேட்டைப் பாதிரிமங்கலமாக மாற்றியவரே அவர்தான்! அவருடைய தொண்டையும் அந்த ஊரின் பெயரையும் மக்கள் இணைத்துவிடக் கூடாதே என்பதற்காகவே தனியாக நின்ற பாதிரி மரத்தை அடுத்து ஒரு பாதிரித்தோப்பையே வளர்த்துவிட்டார். வல்லத்திலும், போந்தூரிலும் பட்டு நூல் சத்திரத்திலும் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஏழை ஹரிஜன மக்களை ஒன்றுதிரட்டினார். அவர்களோடு தாமும் ஒன்றாக நின்று மண் சுமந்து, குழைத்து, சுவர் எழுப்பி, ஓலை வேய்ந்து குடியிருப்புக்களை உருவாக்கினார். அதே குடிசை ஒன்றில் சிலுவையை நட்டு மாதா கோயில் ஒன்றையும் அமைத்துக் கொண்டார். அவரது தனிச் சிறப்பு அவர் யாரையும் மதம் மாறும்படி வற்புறுத்தாததுதான். உண்மையில் மனம் மாறி, மதம் மாறியவரை விரும்பி ஏற்றுக் கொண்டது போலவே மற்ற ஹரிஜன மக்களுக்குப் பாதிரி மரத்தடியில் பிள்ளையாரை வைத்து வழிபடவும் வழி செய்திருந்தார். அவருக்குப் பிள்ளையாரின் துதிக்கையில் சிலுவையையும், சிலுவையில் துதிக்கையையும் காணும் பக்குவம் இருந்தது. அருள்சாமியும் அருணகிரியாக அரசமரத்தடிப் பிள்ளையாருக்கு மாணவனாக இருந்த போது தோப்புக்கரணம் போட்டவர்தானே! அருள்சாமியின் தந்தையைத் தொடர்ந்து, மதம் மாறியவர்தானே அவர்! இதை அவரே கூட அடிக்கடி சொல்வதுண்டு!

பாதிரிமங்கலத்தில் பிள்ளையாரையும், மாதா கோவிலையும் கொண்டு வந்ததோடு அவர் திருப்தியடைந்துவிட வில்லை. இரண்டு ஆசிரியர்களோடு ஒரு துவக்கப் பள்ளியையும்

தொடங்கி வைத்தார். அதைச் சமயப் பள்ளி ஆக்காமல், 'தேசியப் பள்ளி'யாக்கினார்.

அந்த ஊரில் ஒரு டாக்டரோ மருத்துவ மனையோ இல்லாத குறையையும் அவருக்குத் தெரிந்த ஹோமியோபதியால் ஈடு செய்து கொண்டிருந்தார்.

ஓண்டக் குடிசையும், உழைக்கப் புறம் போக்கு நிலத்தில் அரசு உதவியுடன் பண்ணையும் அமைத்துக் கொடுத்த அவர், கர்த்தராகவே காட்சியளித்தார்.

ஆரோக்கியம் அவருடைய முதல் சீடன் மட்டுமல்ல. அவர்பள்ளிக்கூடத்துக்குப் பியூன், டாக்டருக்குக் கம்பவுண்டர்... சுருக்கமாகச் சொன்னால் அவருக்கு மூன்றாவது கை— கூடப் பிறக்காத தம்பி!

ஆரோக்கியம் மட்டுமல்ல; அவன் மனைவி மரியம்மா, மகள் ரோஸி, மகன் செல்லக் கண்ணு அனைவருமே அவரிடம் ''சாமி, சாமி'' என்று உயிரையே வைத்திருந்தார்கள்.

அவர்கள் தெய்வத்துக்கு இதயநோய் என்று பட்டணத்து டாக்டர் சொன்னபோது பாதிரிமங்கலத்து மக்கள் பதறித்தான் போய் விட்டார்கள். அதுவும் படமெல்லாம் எடுத்து 'வேறே இதயம்தான் வைக்கணும்'னு சொல்லிவிட்டபோது துடித்துப் போய்விட்டார்கள். 'எப்படியாவது அவர்கள் தெய்வம் உயிர் பெற்று வந்தால் போதும்' என்று பிரார்த்தனை செய்யாத இதயமே இல்லை.

ஃபாதர் அருள்சாமிக்கு மட்டும் முழு விருப்பம் இல்லை. 'தம் வாழ்க்கையைக் கர்த்தர் கையில் ஒப்படைத்து விட்ட பிறகு இதய மாற்று ஆபரேஷன் எல்லாம் தேவைதானா?' என்றுதான் எண்ணினார். ஆனால் பாதிரி மங்கல மக்கள் அன்பை, ஆசையை, வேண்டுகோளை அவரால் உதாசீனம் செய்துவிட முடியவில்லை. எல்லாம் வாய்ப்பாக ஒன்று சேருவதைப் போல், இதற்கென்றே அமெரிக்கா சென்று திரும்பிய டாக்டர் ஜோன்ஸ் பற்றி ஜாகப் கூறியபோது அரைமனசாகத்தான் சம்மதித்தார். அவரைக் கவனித்துக் கொள்வதற்காகவே ஆரோக்கியத்தின் குடும்பமும் மருத்துவ மனைக்கே வந்துவிட்டது!

''டப் டப் டபடப் டப் டப்....'' இது என்ன இப்படி ஒரு சத்தம் ஒருவர் இதயத்திலிருந்து கேட்க முடியுமா? ரத்த அணுக்கள் நாளத்துக்குள்ளேயே ஸ்கூட்டர் விட முடியுமா ?

ஃபாதர் அருள்சாமிக்கு இந்த மாறுதலுக்குக் காரணம் புரியவில்லை.

சாந்தமே உருவமாயிருந்த பழைய ஃபாதர் அருள்சாமி இப்போது எங்கே? அவருக்கு என்ன வந்துவிட்டது? ஏன் அடியோடு மாறி விட்டார்?

'பசிக்கிறது' என்று ஒரு மாம்பழத்தைப் பறித்துத் தின்ற செல்லக்கண்ணுவை ஏன் பேய் போல் அறைந்தார்?

'ஒரு குத்துவிளக்கைத் திருடிப் போன திருடனுக்கு இன்னொரு குத்துவிளக்கைக் கொடுத்து அனுப்பிய பாதிரியாராகத்தான் அவரும் இருப்பார்' என்றுதானே செல்லக் கண்ணு நினைத்திருப்பான்? அந்தக் கதையை அவனுக்குச் சொன்னதே அவர்தானே?

தமக்குள் இனம் தெரியாத விரும்பத்தகாத உணர்வுகள் மேல் எழுவதை அவர் அறிந்துதான் இருந்தார். அவரால் ஏனோ அதைத் தடுக்க முடியவில்லை!

இன்றுகூட அப்படித்தான். காலை பத்து பத்தரை மணி இருக்கலாம். ஒப்புக்குத் தம் அறையில் உட்கார்ந்து கொண்டு 'உடம்பு சரியில்லை' என்று வந்தவருக்கு ஏதோ மருந்தைக் கொடுத்து அனுப்ப ; கொண்டிருந்தார். இப்போதெல்லாம் அதில் கொஞ்சம்கூட நாட்டம் இல்லை. 'வழக்கத்தை விட்டு விடக் கூடாதே' என்றுதான் தினந்தோறும் அதை ஏதோ சடங்காக ஒப்பேற்றிக் கொண்டிருந்தார்.

எழுந்து வெளியே புறப்படும் சமயம்.... மரியம்மாள் வேகமாக உள்ளே வந்துகொண்டிருந்தாள்.

''ஸாமி, வெளியே கிளம்பிட்டீங்களா?''


''பரவாயில்லை. என்ன வேண்டும்...என்ன உடம்பு?'' என்றுதான் எப்போதும் கேட்டிருப்பார். ஆனால் அவர்தான் எப்போதும் போல் இல்லையே... ஸாமி சீறினார். ''ஏன்... யாருக்கு என்ன? வாந்தியா, பேதியா? கண்டதைத் தின்னுட்டு....'' மரியம்மா திடுக்கிட்டாள். தலைவலிக்குத் தைலம் ஏதாவது வாங்கிப் போகலாம் என்றுதான் வந்தாள். அவள் இதை எதிர்பார்க்கவேயில்லை. மாம் பழம் பறித்த செல்லக்கண்ணுவை அறைந்த போதே அவரிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டதோ என்று அஞ்சினாள் மரியம்மா. ஆனால் ஆரோக்கியத்துக்கு மட்டும் இந்தச் சில்லறைக் கோபங்கள் தவறாகவே தோன்றவில்லை. ஏதோ படபடப்பில் இப்படியெல்லாம் அவர் நடந்து கொள்வதாக எண்ணினான். ஃபாதர் அருள்சாமிக்கு மட்டும் 'தாம் நடந்துகொண்டது தவறு' என்று தெரியாமல் இல்லை.

இவையெல்லாம் சாதாரணத் தவறுகள். ஆனால் அன்று செய்ய முயன்றது... சீ... நினைத்துப் பார்த்தாலும் நெஞ்சம் கசக்கும் அந்தத் தவறு. தவறா? தெரியாமல் செய்ததா அது? தெரிந்தே திட்டமிட்டுச் செய்த கேவலமான குற்றம் அது. கருணையே வடிவமான கர்த்தர் குடிகொண்ட அவர் நெஞ்சில் கொலைகாரச் சாத்தான் எப்படிக் குடியேறினான்?

அன்று இலேசாக மார் வலித்தது என்னவோ உண்மைதான். அதைப் பெரிதுபடுத்தி ஆரோக்கியத்தைச் சென்னைக்குத் துரத்திவிட்டு... ஜாகப் டாக்டரை அழைத்து வரச் சொல்லிவிட்டு அவன் கிளம்பும்போது... ''கோதுமைத் தவிட்டை வறுத்து ஒத்தடம் கொடுத்தால்...'' என்று இழுத்து...

ஆரோக்கியம் கேட்டான்: ''சாமீ, நானே ஒத்தடம் கொடுத்திட்டுப் போகட்டுமா?''

''வேண்டாம்... வேண்டாம்... உன் மகள் ரோஸியை அனுப்பிவிட்டுப் போ. போதும்.''




சாஸ்திரினி

பூனாவில் இப்போது பூஜை, மந்திரம் - இவை செய்து வைக்கும் வைதிகப் பணியைப் பெண்கள் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஏழெட்டு பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

ஃபெமினா - கே. ஆர்.


Nirlon
அதி அற்புதங்கள் நிறைந்தது!
Nirlon
நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ்
& கெமிகல்ஸ் லிட்
Interpub/Nir/5/75/TM



''ஆக மொத்தத்திலே நம்ம சேகர் ரொம்ப நல்ல பையன் சார்!''
''அப்படியா ...! சில்லறை விஷயத்திலே எப்படி?''

- சரஸ்வதி பஞ்சு

அவன் போய்விட்டான்.

இதே ரோஸ்... இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ஜபம் முடிந்து வெளியே வரும்போது மயங்கி விழுந்து விட்டாள். அவருக்குக் காலும் ஓடவில்லை, கையும் ஓடவில்லை. ''ஆரோக்கியம் ஆரோக்கியம்.... மரியம்மா... மரியம்மா!'' என்று குரல் கொடுத்தார். மரியம்மாதான் ஓடிவந்தாள். கால்களைத் தூக்கிப் பிடித்து. ''தலைப்பக்கம் பிடிங்க சாமீ!'' என்று பதறினாள். அப்போதுகூட அவர் தயங்கினாரே! ''என்ன சாமீ..ஒங்க கொழந்தை மாதிரி...'' மரியம்மா வற்புறுத்தியபோதுகூட அவருக்கு அரை மனசுதான்! அவர் சொன்னார், ''மரியம்மா உனக்குத் தெரியாதா? நம்ப நாட்டிலே வயசு வந்த பெண்ணைத் தகப்பன்கூடத் தொட மாட்டானேம்மா.''

''அது சரிங்க... நீங்க தகப்பனுக்கும் மேலே—சாமி ஆச்சங்களே!''

அந்த மனம்...அழுத்தமான அந்த இதயம்தான் இப்போது எப்படி விரிசல் கண்டு விட்டது?

கறி அடுப்பும், வாணலியில் கோதுமைத் தவிடுமாக வந்தாள் ரோஸ்.

''சாமீ.... ஏதாவது துணி... கர்சீப் தர்றீங்களா, தவிட்டைக் கொட்டி ஒத்தடம் கொடுக்க?''

''நீ எடுத்து வரலையா ரோஸ்... இங்கே எதுவும் இல்லையே'' அவர் கவுன் பையில் இருந்த கைக்குட்டை முன்னாகக் குத்தியது.

''போய் எடுத்து வரவா?'' என்று எழுந்தாள் ரோஸ்.

''வேண்டாம்... சூடு ஆறிப் போயிடுமே?'' என்று இழுத்தார் அவர்.

ரோஸ் தயங்கவில்லை. வாணலியில் வறுத்த தவிட்டை முந்தானையில் கொட்டிக்கொண்டு ''சாமி, படுத்துக்கொள்ளுங்க...'' என்று ஒத்தடம் கொடுக்க ஆரம்பித்து விட்டாள். இதை எதிர்பார்த்திருந்த அவர் மனம் விழிகளை ஓடவிட்டுப் பேயாய் அலைந்தது. கள்ளம், கபடமில்லாத ரோஸ் கடமையே கண்ணாக இருந்தாள். அவள் மனதில் கல்மிஷம் இல்லை. அவளைப் பொறுத்தவரையில் சாமிக்குச் செய்யும் எந்தக் காரியமும் கர்த்தர் காரியம்தான். அப்படித்தான் ஆரோக்கியமும் சொல்லியிருந்தான்!

அருள்சாமியின் புதிய சைத்தான் மனத்தில் விஷம் ஏறிக் கொண்டிருந்தது. மனத்தின் வெம்மை வியர்வையாக வெளி வந்து கொண்டிருந்தது.

''ரோஸ்... குளிருதே... கதவு... ஜன்னலை மூடேன்.''

''சாமீ... உடம்பு வேர்க்குது... குளிருதுன்னு சொல்றீங்களே!'' அப்படிச் சொன்ன போதிலும் எழுந்து போய்க் கதவு, ஜன்னலை மூடத் தவறவில்லை.

மெல்ல அவள் கையைப் பிடித்துப் பிடித்து மார்பில் ஒத்தடம் கொடுத்துக் கொண்டே இருந்த அவர் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

கோதுமைத் தவிடு சிதறியது....

''வேண்டாம் சாமீ... வேண்டாம்...'' அலறினாள் ரோஸ்.

''சாமீ... சாமீ... அம்மா... அம்மா...''

வெளியே செல்லக்கண்ணுவின் குரல் கேட்டது.

''சாமிக்குச் சாப்பாடு.''

நெற்றிப் பொட்டில் 'பட்'டென்று ஒரு தெறிப்பு... அவர் கை தளர்ந்தது.

அன்னமிட்ட வீட்டில் கன்னக்கோலா?

''வேண்டாம்... வேண்டாம்...'' அலறினார் ஃபாதர் அருள்சாமி.

''என்ன ஃபாதர்... என்ன வேண்டாம்?'' டாக்டர் ஜாகப் அவர் அருகே வந்தார்.

முகத்தில் துளிர்த்த வியர்வையைத் துடைக்க வந்த சிஸ்டரைக்கூடத் தடுத்து விட்டார் அருள்சாமி.

''ஏதாவது கனவா, ஃபாதர்?'' சிரித்துக் கொண்டே கேட்டார் ஜாகப்.

''கனவுதானா அது? ஓ... கடவுளே! என்ன பயங்கரம்!''

''கவலைப்படாதீங்க ஃபாதர்... கட்டிப் போட்ட மாதிரி கட்டில்லே கெடக்கறதனாலேதான் இப்படி... ஆப்பரேஷன் முடிஞ்சு மறுபடியும் உங்க சேவையிலே மூழ்கிட்டா...''

''இல்லை, டாக்டர்! மன்னிச்சுடுங்க... எனக்கு ஆபரேஷன் வேண்டாம்... கர்த்தர் கொடுத்த பலவீனமான இதயமே போதும். காதர்பாட்சா இதயம் வேண்டாம்.''

''நீங்க 'டிஸ்கஸ்' பண்ணின விஷயம் இவர் காதிலே பட்டிருக்கு போலே இருக்கு.'' சிஸ்டர் சொன்னாள்.

''அதனால் என்ன? ஃபாதரெல்லாம் கூட சாதாரண மனிதர் போலவா? அப்படி நெனைச்சிருந்தால் அதை இங்கே டிஸ்கஸ் செய்திருப்போமா? டாக்டர் ஜோன்ஸ்தான் உறுதியாகச் சொல்லிட்டாரே... நீங்க பயப்பட வேண்டாம். நீங்க கசாப்புக் கடை காதராகிவிட மாட்டீங்க...''

''என்னைக் கட்டாயப்படுத்தாதீங்க...''

''உங்களைக் கட்டாயப்படுத்தலை. ஆனால் காதர் பாட்சாவுடைய கடைசி வேண்டுகோள் ஒன்று இருக்கு உங்களுக்கு.''

''எனக்கா, என்ன அது?''

'''கொடுமைக்கார கசாப்புக்காரன் இதயம்'னு வேண்டாம்னு சொல்லிடப்போறாரு சாமீ... அவர் கிட்டே சொல்லுங்க... அவர் கொடுக்கிற பாவ மன்னிப்பா இருக்கட்டும் இது... கொடுமைக்காரனு... கொலைகாரனு ஆயுசு முழுதும் வாழ்ந்தாச்சு. அவர் இதயமா என் இதயம் மாறி நாலு நல்ல காரியம் செஞ்சாத்தான் எனக்கு மன்னிப்பு'ன்னு கதறிட்டான்.''

ஃபாதர் அருள்சாமி பேசவில்லை. கண்களை மூடிக்கொண்டு தூக்கத்தில் இறங்கிவிட்டார். அவர் இனி மறுப்புச் சொல்ல மாட்டார் என்பது டாக்டர் ஜாகபுக்குத் தெரியும்!

சேரமான் காதலி

கண்ணதாசன்

அத்தியாயம் 9

யூஜியானுவின் பூர்வஜென்மம்

அந்த மாளிகையில் தனியொரு மகாராணியாக, அழகிய பளிங்கு மேடைகளில் உலா வரும் மான்குட்டியாக, யூஜியானு உலாவினள்.

அந்த மாளிகைக்கு வந்த நாளிலேயே நள்ளிரவில் நாயகனைப் பிரிய நேர்ந்தது. அவளுக்குத் துர்ச் சகுனமாகவே பட்டது.

யூதர்களுக்குச் சகுனத்தில் நம்பிக்கை உண்டு.

மழைக்கொரு தேவதை, வெயிலுக்கொரு தேவதை என்று சைவர்களும் வைணவர்களும் வணங்குவது போலவே யூதர்களும் வணங்குவது வழக்கம்.

''நன்மை — தீமைகள் பற்றிய அறிகுறி முன்வேயே தோன்றும்'' என்பதிலும் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு.

சேரமானிடம் பெற்ற உறவின் சுகத்தை அவள் எண்ணி எண்ணி மகிழ்ந்தாள்.

காயம் பட்ட கன்னத்தைக் கண்ணாடியில் பார்ப்பதில் அவளுக்கொரு மகிழ்ச்சி.

நாயகனின் நகக் குறியைக் கண்டு கண்டு மகிழ்வதில் அவளுக்கோர் உற்சாகம்.

அவளது மாளிகையில் குளிக்கும் அறை அற்புதமான வேலைப்பாடுகளுடன் அமைந்திருந்தது.

நான்கு பக்கமும் சலவைக் கற்களால் மூடப்பட்ட அறை அது.

உச்சியில் காற்று வருவதற்காக வட்ட வடிவமான சாளரங்கள் உண்டு.

சுவரின் இரண்டு பக்கங்களில் மூன்றடி உயரத்தில் சாய்வாகப் போடப்பட்ட துவாரங்கள் உண்டு.

ஒரு பக்கத்துத் துவாரம் வழியாகக் குளிர்ச்சி நிறைந்த தண்ணீர் வந்து கொண்டேயிருக்கும்; அது இன்னொரு பக்கத் துவாரத்து வழியாகப் போய்க் கொண்டேயிருக்கும்.

மூன்றடி ஆழம் உள்ள குளம் போல் அது காட்சி அளித்தது.

இடையிலே ஒரு சிறு பளிங்கு மேடை உண்டு.

சிறிது நேரம் நீரிலே மிதந்தபிறகு அந்தப் பளிங்கு மேடையில் ஏறி அமர்ந்து வண்ணக் கலவைகளை உடம்பில் தேய்த்துக் கொள்வதற்காக அந்த ஏற்பாடு.

சாளரக் கதவு வழியாக வரும் காற்று கீழே வந்து தண்ணீரைத் தொட்டு விட்டுப் பிறகு மேலே செல்லும் நிலையில் சாளரமும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆகவே, பொழுது போவதே தெரியாமல் குழந்தையைப் போல் அவள் அதில் மிதப்பாள்.

ஏதாவது ஒரு பாடலை முணுமுணுப்பாள்.

இனிமையான ராகங்கள் மிதந்து செல்வது கண்ணுக்குத் தெரிவது போல், அலைகள் மிதந்து செல்லும்படி, மெல்லிய கைகளால் மெதுவாகத் தள்ளிக்கொண்டிருப்பாள்.

அந்த அற்புதத் தேவதையை, அந்த நீராழியிலேயே கண்டுகளிக்கச் சேரமான் இல்லை.

அவளது மெல்லிய இடை சற்றுக் கனமடையத் தொடங்கியிருந்த பருவம். அது தாய்மையின் மூன்றும் பிறை.

காலையில் ஒரு முறை மாலையில் ஒரு முறை நீராடிக் கொண்டு பாடுவதிலேயே அவள் பொழுதைக் கழித்திருந்தாள்.

செவ்விளநீரைச் சுமந்தபடி இளங்காற்றில் ஆடும் சேர நாட்டுத் தென்னையைப் போல் அவள் அந்த நீராழியில் காட்சி அளித்தாள்.

ஒருவன் கண்ணுக்கு மட்டுமே விருந்தாகக்கூடிய அவளது அங்க ரகசியங்களை, பரரது கண்களுக்கு வைப்பது பொருத்தமன்று.

இஸ்ரவேலின் இனிய சங்கீதம் இரவு நேரங்களில் விரக தாபத்தால் முகாரியாக மாறிக் கொண்டிருந்தது.



அன்று....

நீராழிக்குள் நுழைந்த யூதியாளு உட்புறம் இருந்த கண்ணாடிக்கு முன்னால் நின்று தன் ஆடைகளைக் களைந்தாள். அப்போதுதான் தன் அடி வயிற்றில் ஓர் அதிசயத்தைக் கண்டாள்.

அங்கே கறுப்பாக இரண்டு விரல் அகலத்தில் ஒரு நட்சத்திர மச்சம் இருந்தது.

அது எப்போதுமே இருந்து அவள் கவனிக்காமல் இருந்தாளா ? இப்போது அது புதியதாகத் தோன்றியிருக்கிறதா?

ஏற்கனவே இருந்தது போலும் ஒரு கனவு; இல்லாதது போலும் ஒரு நினைவு.

வண்ணக் கலவையில் ஏதாவது கரித்தூள் கலந்திருந்து அங்கே ஒட்டியிருக்கக் கூடுமா ?

அல்லது உள்ளாடையில் இருந்த சாயமா ?

அவள் அதைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தாள்.

மச்சம்தான் என்பதை உறுதி செய்து கொள்ள முயன்றாள்.

நீரிலே இறங்கி நீராலும் கழுவிப் பார்த்தாள். சந்தேகமே இல்லை; நிச்சயமாக மச்சம்தான்.

அவளுக்கு அச்சம் பிறந்தது.

'கருவுற்றிருக்கும் பெண்ணின் அடி வயிற்றில் நட்சத்திர மச்சம் தோன்றுவது. அறிவுக்கு அடையாளம்' என்பது அந்நாளைய யூதர்கள் நம்பிக்கை.

யாரிடம் காட்டி இதற்கு விளக்கம் கேட்பது? நிச்சயமாக ஒரு பெண்ணிடம் தான் காட்ட முடியும்.

எந்தப் பெண் இதற்கு விளக்கம் கூறக் கூடிய திறமை உள்ளவள்?

அவளால் இப்போது ரசனையோடு நீராட முடியவில்லை.

வெளியில் இருந்து வந்த தண்ணீரில் செத்துப் போன சிறிய மீன் ஒன்று மிதந்து வந்தது.

இது என்ன இரண்டாவது சகுனம்? அவளால் குளிக்கவே முடியவில்லை.

எழுந்து புத்தாடை உடுத்திக் கொண்டு நீராழி மண்டபத்தை விட்டு வெளியே வந்தாள்.

தூரத்தில் யாரோ ஒரு பெண் சுருதியே இல்லாமல் பாடுவது அவளுக்குக் கேட்டது.

கூர்ந்து கேட்டாள்.

''ஐயாமார்களே, அம்மாமார்களே! வரும் பொருள் உரைக்கும் மலைக் குறத்தி நான் !

அம்மனின் ஆவேசம் வரப்பெற்றவள் நான்.

நாளை வரப் போவதை இன்றே சொல்லும் நல்ல சக்தி எனக்கு உண்டு.

வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என்பதையும் சொல்வேன்.

போன ஜன்மத்தில் நீங்கள் யாராக இருந்தீர்கள் என்பதைப் புட்டுப் புட்டு வைப்பேன்.

'கொங்கு நாட்டுக்கு நீ செல்லப் போகிறாய்' என்று மாதவிக்கு நான் தான் சொன்னேன்.

பாண்டிய நாடு விடுதலை பெறப் போகிறதென்று வரகுண பாண்டியனுக்கு நான்தான் தெரிவித்தேன்.

வட தேசத்தில் உள்ள உச்சிந்தை மாகாணம் என்ற உஜ்ஜைனியின் எதிர் காலத்தையே நான்தான் கணித்துக் கொடுத்தேன்.

உங்களது கைகளைக் காட்டுங்கள் : காலத்தை நான் சொல்கிறேன்.

ஐயாமார்களே, அம்மாமார்களே ! வரும் பொருள் உரைக்கும் மலைக்குறத்தி நான்.''

—என்று அவள் பாடினாள்.

நெருப்பிலே நெய்யை விட்டது போல், பூஜியானாவின் நினைவிலே ஆசையைத் தூண்டிற்று அந்தப் பாடல்.

உடனே அவள் கைதட்டிக் காவலனை அழைத்தாள்.


அவளுக்காக நியமிக்கப்பட்டிருந்த அந்தரங்கச் சேவகன் ஓர் அலி.

''அந்தப் பெண்ணை அழைத்து வா'' என்று அவனுக்கு ஆணையிட்டாள் பூஜியானா.

அவன் சென்று அழைத்து வந்தான்.

அசல் தென்னாட்டு மலைக் குறத்தி அவள்.

மூக்கிலே 'நத்து'ப் போட்டிருந்தாள். காதுகளில் 'கொப்பு'; கழுத்திலே கருகமணி மாலை; கைகளில் காசிக் கயிறு; இடுப்பிலே அரைப் பாவாடை; மார்பிலே தாவணி; அள்ளி முடித்த கோடாலிக் கொண்டை; காலிலே மிகப் பெரிய வெள்ளித் தண்டைகள்.



அவள் நடந்து வந்த ஓசையே, இரவிலே பேய் பிசாசுகள் நடந்து வரும் ஓசை போல் அவனுக்குக் கேட்டது.

தன் தனி அறைக்கு அவனை அழைத்துச் சென்றாள் யூஜியானா.

உள்ளே செல்லத் தயங்குவதுபோல் அவன் காட்டிக் கொண்டான்.

''பரவாயில்லை'' என்று அவனை அழைத்துச் சென்றாள் யூஜியானா.

யூஜியானாவின் வலது கை நீண்டது.

அந்தக் கையிலே மலைக் குறத்தியின் மந்திரக் கோல் விழுந்தது.

ஏதேதோ தெய்வங்களின் பெயர்களைச் சொல்லிக் கண்களை மூடிக் கொண்டே குறத்தி பாடினாள்.

கடைசியாக, 'கபாடபுரத்துக் காவல் தேவதையம்மா' என்று சொல்லி நிறுத்தினாள்.

மூடிய கண்களைத் திறந்தாள்.

யூஜியானாவின் முகத்தையே உற்றுப் பார்த்தாள்.

பிறகு பாட்டு மூலமே ஒரு கதை சொல்ல ஆரம்பித்தாள் :

''தெற்கே கபாடபுரம் என்றொரு நகரம் இருந்தது. பாண்டியர்கள் ஆண்ட முதல் தலைநகரம் அதுதான்.

அதை ஆண்டு கொண்டிருந்த பாண்டியர்களில் ஒருவன் கடல் வழிப் பயணத்தில் கை தேர்ந்தவன். ஏராளமான கட்டுப்படைகளையே வைத்திருந்தான்.

அவனும் அவனது வீரர்களும் ஒரு சமயம் தெற்கே பயணம் செய்து அறுபது நாள் பயணத்துக்குப் பிறகு மெக்காஸி (மெக்ஸிகோ) என்ற நாட்டை அடைந்தார்கள்.

அந்த நாட்டுப் பழங்குடி மக்களை அப்போது ஆண்டு கொண்டிருந்தவன் அல்பான்சோ. அவனது ஒரே மகள் ஜீனா.

அவர்களும் சூரியனையும் சந்திரனையும் வணங்குகிறவர்கள். அதனால், அவர்கள் பாண்டிய மன்னனை வரவேற்றுத் தங்கள் விருந்தினனாக ஏற்றுக் கொண்டார்கள்.

மெக்காஸி நாட்டில் ஒரு நதி ஓடிக் கொண்டிருந்தது. மீன்களே இல்லாத நதி அது.

அந்த நதியில் பாண்டிய மன்னன் குளித்தான். மறு நாளே ஏராளமான மீன்கள் அதிலே தோன்றின.

அதில் ஆச்சரியம் அடைந்த அல்பான்சோ, பாண்டிய மன்னனைத் தெய்வமாகவே வழிபட்டான்.

மெக்காஸி நாட்டில் பாண்டிய மன்னன் தங்கிச் சைவக் கோயில்கள் கட்ட ஆரம்பித்தான்.

முதலில் சூரியனுக்கு ஒரு கோயில் கட்டினான்.

அந்தக் கோயிலைக் கட்டுவதற்காக ஆறு திங்கள் அவன் அங்கே தங்கினான். அந்த இடைக் காலத்தில் அவனது அழகில் தன்னைப் பறிகொடுத்தாள் ஜீனா. ஜீனாவை அவனும் மனதார நேசித்தான்.

ஒருவரில்லாமல் ஒருவர் இல்லை என்கிற அளவுக்கு அவர்கள் உறவு வளர்ந்தது.

அல்பான்சோ அவனைத் தடுக்கவில்லை.

மெக்காஸி நாட்டுப் பழங்குடியினர் வழக்கப்படி பாண்டிய மன்னனுக்கு நெற்றியில் மூன்றாவது கண் வைத்து ஜீனாவை அவனுக்கே மணம் முடித்துக் கொடுத்தான் அல்பான்சோ.

அந்தத் திருமணத்தில் எல்லாருமே மூன்று கண் வைத்துக் கொண்டு நடனமாடினார்கள்.

அதற்கும் முன்பே அங்கே சைவம் பரவி இருந்த காரணத்தால், அந்த நடனத்தைச் சிவ நடனம் என்றே அழைத்தார்கள்.

மெக்காஸி நதிக் கரையில் ஒரு பர்ணசாலை அமைக்கப்பட்டுப் பாண்டிய மன்னனுக்கும், ஜீனாவுக்கும் சோபன முகூர்த்தம் நடந்தது.

அவர்கள் உடலுறவு கொண்ட போது, வானத்தில் ஒரு புதிய நட்சத்திரம் தோன்றிற்று. அந்த நட்சத்திரத்தை அவர்கள் கவனிக்கவில்லை.

இருவரும் சந்தோஷமாக இருந்து விட்டுக் காற்றுக்காக நதிக் கரை ஓரமாக வந்தார்கள்.

இப்போது வானத்தில் இருந்து அந்த நட்சத்திரம் எரிந்து விழுந்தது. அதை அவர்கள் பார்த்தார்கள். ஆனால் அதற்கோர் அர்த்தத்தை அவர்கள் கற்பித்துக் கொள்ளவில்லை.



விழுங்கு வெடிகுண்டு !

பம்பாய் ஓட்டல் ஒன்றில் வெஜிடேரியன் வெடிகுண்டு *(Veg-bomb)* என்ற பெயரில் போண்டா மாதிரி ஒரு பொருளை வியாபாரம் செய்கிறார்கள். - பாபு

டைம்ஸ் ஆப் இந்தியா

நான்கு திங்கள் அவளோடு சந்தோஷமாக இருந்துவிட்டு, சூரியன் கோயிலுக்கு நீராட்டு விழா நடத்திவிட்டு, அவளையும் அழைத்துக்கொண்டு பாண்டிய மன்னன் புறப்பட்டான்.

அல்பான்சோவும், மெக்காஸி நாட்டு மக்களும் அவர்களை வழி அனுப்பினார்கள்.

தன்னோடு வந்த வீரர்களில் ஐம்பது பேரை மட்டும் கப்பலில் அழைத்துக்கொண்டு, மற்றவர்களை மெக்காஸி நாட்டிலேயே கோயில்கள் கட்டுவதற்காக விட்டு விட்டான் பாண்டியன்.

அவர்கள் ஏறிச் சென்ற கப்பல்கள் முப்பது நாள் பயணம் செய்து நடுக்கடலிலே வந்து கொண்டிருந்த போது, எதிரே புதுக் கப்பல்கள் அவர்கள் கண்களுக்குத் தெரிந்தன.

அந்தக் கப்பலில் வந்தவன் 'காலசூரியன்' என்பவன்.

அவன் கபாடபுரத்து தேவதத்தன் என்ற வணிகனுடைய மகன்.

அவனோடு வந்தவர் இருநூறு பேர்.

இரண்டு கப்பல்களும் சந்தித்துக் கொண்ட போது, மரியாதைக்காக மன்னனின் கப்பலில் தாவி, வணக்கம் செலுத்தினான் காலசூரியன்.

அவன் கண்களில் ஜீனா தென்பட்டாள். அவள் நான்கு மாத கர்ப்பிணி.

அவளைப் பார்த்த உடனேயே காலசூரியனின் உடம்பில் காம வெறி தீயாக எரிந்தது.

காம வெறியில் தந்தையையே கொன்றவனல்லவா, அவன்!

மன்னனையே பகைத்துக் கொள்ள அவன் தயாரானான்.

நடுக் கடலில் பெரும் போர் மூண்டது.

பாண்டிய மன்னனும், அவனது வீரர்களும் கொல்லப்பட்டார்கள்.

காலசூரியன் ஜீனாவைக் கட்டி அணைக்க முயன்றான்.

அவள் ஆவேசத்தோடு, ''நில். என்னைத் தொடாதே! என் கணவனைக் கொன்ற உன்னைக் கொல்ல எனக்குச் சக்தி இல்லை. ஆனால் அடுத்த ஜன்மத்தில், என் வயிற்றிலேயே உனக்கொரு குழந்தை பிறந்து அதுவே உன்னை அழிக்கும். சூரிய பகவான் மீது சத்தியம்!'' என்று கூறிவிட்டுக் கடலிலே குதித்து விட்டாள்.

கடல் கொந்தளித்தது.

காலசூரியனும், அவனது வீரர்களும் கடலில் மூழ்கினார்கள்.

அதே கடல் அப்படியே பெருக்கெடுத்துக் கபாடபுரம் வரை வந்து, கபாடபுரத்தையும் அழித்துவிட்டது.

அந்த ஜீனாதான் பூத ஜாதியில் பிறந்த நீ.

அந்தக் காலசூரியன்தான் மூன்றும் சேரமான்.

உன் வயிற்றில் வளரும் குழந்தைதான் அவரைக் கொல்லப் போகிறது; சேர நாட்டையும் அழிக்கப் போகிறது.

அதற்கு அறிகுறியாகத்தான் மெக்காஸி வானத்தில் எரிந்து விழுந்த நட்சத்திரம், உன் அடி வயிற்றில் மச்சமாகத் தோன்றியிருக்கிறது.''

— என்றாள் குறத்தி.

யூஜியானாவுக்குத் தன் உடல் முழுவதும் ஜில்லிட்டுவிட்டது போல் தோன்றிற்று.

(தொடரும்)

மேக் அப் உங்கள் முகத்தின்
குறைகளை மறைக்கலாம்.



உங்கள் மேனியை தூய்மையாக்கி இயற்கை எழிலுடன் துலங்கச் செய்வது லாக்டோ-காலமைன் ஒன்றுதான்.

உங்கள் மேனியைப் பராமரிக்க லாக்டோ-காலமைன். உங்கள் மேனியைத் தூய்மையாகவும் புதுமையாகவும் வைத்திருக்கக் கூடிய சேர்க்கைப் பொருட்கள் விசேஷ முறையில் இதில் கலக்கப் பட்டுள்ளன. எல்லாம் ஒன்றில் இணைந்த அழகுப் பராமரிப்பு–லாக்டோ காலமைன் அஸ்ட்ரின்ஜெண்ட், மாயிஸ்சரைஸர், ஃபவுண்டேஷன் க்ரீம். மூன்றும் இணைந்த தன்னிகரற்ற அழகு சாதனம்.

அதனை முறையாக உபயோகித்து வரவும். உங்கள் மேனி இயற்கையாக மெருகேறுவதைக் கண்கூடாகக் காண்பீர்கள்.



3 வசதியான சைஸ்களில் கிடைக்கிறது:
110 மி.லி.
60 மி.லி. 28 மி.லி.

க்ருக்ஸ் லாக்டோ-காலமைன், ஒரு ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க். இதனைத் தவறாகப் பயன்படுத்துபவர்கள் சட்டப்படி தண்டிக்கப் படுவார்கள்.

உண்மையான லாக்டோ-காலமைன் தானா என்று உறுதி செய்து கொள்வதற்கு, எப்போதும் இந்த க்ருக்ஸ் சின்னத்தைப் பார்த்து வாங்குவீர். அதோடு, க்ருக்ஸ் முத்திரையும் உடையாமல் இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

டுஃபார்-இன்டர்ஃப்ரான் லிமிடெட்
த.பெ. எண் 6582, பம்பாய்-400 018

க்ருக்ஸ்

லாக்டோ-காலமைன் அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

Sista's-DIL-219-Pi/76/Tam


பாடுவோம் பாப் மியூசிக்!
கதை: தமயந்தி/சாருகேசி
சித்திரம்: ராஜு
16
கூர்க்காவிடம் சாவிக் கொத்தைப் பெற்றுக் கொண்டு லிங்கத்தின் தொழிற்சாலைக்குள் நுழைகிறான் அருண்.
நல்ல வேளை, கூர்க்கா அதிகம் குடையவில்லை!
ஹா! அத்தனையும் செம்புக் கம்பி! எவர் சில்வர் ஷீட்...
இது என்ன அக்கவுண்ட் புக் எல்லாம் இப்படி ஒளித்து வைத்திருக்கிறது...
மை குட்னஸ்! ஒன்றுக்காவது எக்ஸைஸ் வரி கட்டினதாகவே தெரியவில்லையே!
கூர்க்காஜி... ரொம்ப தாங்க்ஸ்.. கிடார் கிடைக்கவில்லை. வேறே எங்கேயோ விட்டுட்டேன் போலிருக்கு... நமஸ்தே...
அச்சா ஸாப், நமஸ்தே.
மறுநாள் மார்க்க சகாயத்தின் வீட்டு ஹாலில் —
வித்யா, மிஸ்டர் பாலாஜியை நீ மணந்து கொள்ள முடியாது என்று துணிந்து சொல்லு. மிஸ்டர் லிங்கம் நிறைய பண்டங்களுக்கு எக்ஸைஸ் வரி கட்டாமலே தமது பாக்டரியில் பண்டங்களைத் தயாரிக்கிறார். விற்பனையில் கொள்ளை லாபம். இந்த விவரமான கணக்குகள்... போதாதா மாட்டிக் கொள்ள?


மிஸ்டர் அருண், நீங்கள் போன ஜன்மத்தில் போலீஸ் ஸி.ஐ.டி.யாகப் பிறந்திருக்க வேண்டும்.
நல்ல வேளை, போலீஸ் நாயாகப் பிறந்திருக்க வேண்டும் என்று சொல்லாதிருந்தாயே!
ஹலோ, மிஸ்டர் லிங்கம் நன்றாக மாட்டிக் கொள்ளப் போகிறார்! நம் காதல் நிறைவேற தடை ஏதும் இல்லை. என் அப்பாவைப் பார்த்து, என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதாய்த் தைரியமாகச் சொல்லுவீர்களா?
உன் அப்பாவிடம் தானே? இந்த கிடார் பின்னணியோடு, டிரம், ஸிம்பல்ஸ் எல்லாம் ஒலிக்கப்பாட்டிலேயே கேட்டு விடட்டுமா?
வித்யாவின் தாய் கமலம் வருகிறாள்.
வித்யா, யார் இது, அப்பாவோட சபாவில் டான்ஸ் ஆட சான்ஸ் கேட்க வந்திருக்காரா? ஏன் நெளியறார்?
இல்லேம்மா, இவர் வந்து.. வந்து..
மாமி, நான்தான் அருண். பாப் மியூசிக் பாடுபவன். ஸ்பானிஷ் பாட்டு, இங்கிலீஷ் பாட்டு, ஹிந்திப் பாட்டு...
ஏண்டாப்பா, திருப்புகழ் பாட மாட்டியோ?
யாரோட திருப்புகழைப் பாடணும் மாமி? இத்தனை நேரம் உங்க சம்பந்தியா வரவிருந்த மிஸ்டர் லிங்கத்தின் திருப்புகழைத்தான் பாடிக் கொண்டிருந்தேன்.
வித்யா, என்ன சொல்கிறார் இவர்?
பாலாஜியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாதே என்கிறார். அம்மா இவரைத்தான் நான்...நான்...
கல்யாணம் பண்ணிக் கொள்ளணும் என்கிறேன்! சரிதானே வித்யா?


உங்கள் கேசத்தின் பாதுகாப்பு
கேம்லின்
பராமரிப்பு
கேம்லின் ஷாம்புகள்
உலர்ந்த கேசத்திற்கு:
கேம்லின் லஸ்டர் ஷாம்பு
எண்ணெய்ப் பிசுக்குடைய கேசத்திற்கு:
கேம்லின் எவர்ஃப்ரெஷ்
சாதாரண கேசத்திற்கு:
கேம்லின் ஸில்கி ஷாம்பு
அதிகப்படி புஷ்டிக்கு:
கேம்லின் எக் ஷாம்பு
camlin
SHAMPOO
மென்மையான, அடக்கமான, அழகிய கேசத்திற்கு
கேம்லின்
ஷாம்புகள். கடுமையான சேர்மானங்கள் கிடையாது.
உங்கள் கேசத்திற்கு ஏற்றதை தேர்ந்தெடுங்கள்.
கேம்லின் பி. லிட். காஸ்மெடிக்ஸ் டிவிஷன், பம்பாய் 400 059
PRATIBHA - 1012 TAM


அதிர்ஷ்டங்கள்
ஒன்று சேரட்டும்!
உங்கள் அதிர்ஷ்டம்
நீங்கள் அழகாக பிறந்தது.
எங்கள் அதிர்ஷ்டம்
உங்கள் அழகிற்கு ஏற்ற
சிறந்த பட்டுப் புடவைகளை அளிப்பது.
அதிர்ஷ்டம் மிக்க பட்டுப்புடவைகளுக்கு
சம்பூர்ண சாஸ்திரியார் & சன்ஸ்
வடக்கு மாடவீதி, சென்னை 600 004
போன்: 71719
கல்கத்தா: 14A, பார்க்ஸைட் ரோடு,
கல்கத்தா-26; போன்: 46-3976
தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமைகளில் விற்பனை உண்டு

லேடி டாக்டர் கபிலா, டாக்டர் சங்கர் இருவரும் மருத்துவக்குடி கிராமத்து ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கின்றனர். கல்யாணம் செய்து கொண்டு விட்ட பிறகு டாக்டர் சங்கருக்குத் தம் மனைவியிடமே 'தொழில் பொறாமை' ஏற்பட்டு விடுகிறது. இதிலிருந்து பல கோளாறுகள் விளைந்தாலும் நாடகக் கதை கோளாறு ஏதுமின்றி நிறைவு பெறுகிறது. பல தர்மசங்கடமான சூழ்நிலைகளைப் புனைந்து நாடகத்துக்குச் சுவையூட்டியிருக்கிறார், வெங்கட்.





குமாரி சச்சு டாக்டர் கபிலா. ஒன்பது ஜிலுக ஜிலுசான புடவைகளைக் காட்சிக்குக் காட்சி மாற்றி, சூழ்நிலைக்கு ஏற்ப முகபாவங்களையும் மாற்றி மிக நன்றாக நடித்திருக்கிறார். கவர்ச்சியோடு, உருக்கமும், அனுபவமும் போட்டி போட்டுக் கொண்டு அவர் நடிப்பில் பளிச்சிடுகின்றன.

தில்லை ராஜன், டாக்டர் சங்கர். மேடைக்கேற்ற நல்ல தோற்றம். பாத்திரத்தை உணர்ந்து நன்றாய் நடிக்கிறார்.

போஸ்ட் மாஸ்டர் தாமோதரம், காட்சிக்குக் காட்சி வளையவரும் டமாரச் செவிடு ராமய்யா, சம்பந்தி மாமா இவர்களெல்லாம் போதாக் குறைக்கு ஸ்டேஷன் மாஸ்டர் வேறு—எல்லாருமாகச் சேர்ந்து கொண்டு காலஞ்சென்ற பழைய விகடத் துணுக்குகளுக்குப் புத்துயிர் கொடுத்து அறு அறு என்று அறுக்கின்றனர்.

கனமான நாடகத்துக்கு நகைச் சுவை வேண்டியதுதான். அதற்காக இப்படியா? ஒரு செவிட்டு மனிதரை வைத்துக் கொண்டு ஓயாமல் 'செவிட்டுப் பிணம்' என்று திட்டிக் கொண்டே நகைச் சுவையைப் புனையப் பார்ப்பது கீழ்த்தரம். நாடகம் பார்ப்பவர்கள் மீது அநுதாபம் கொண்டு நாடகத்துக்குத் தொடர்புள்ள நகைச் சுவைக் காட்சிகளை அமைக்கக் கூடாதா?

நாடகம் பார்ப்பவர்கள் சிரிக்க வேண்டும் என்பதற்காக என்னத்தை யெல்லாமோ சேர்த்துக் குட்டை குழப்பலாமா? இந்நாடகத்தில் பல பாத்திரங்கள் அவசியமே இல்லை!

அல்லி தர்பார்

ஸ்ரீமதி தர்மா இரண்டு பிள்ளைகளுக்குத் தாயார். மூத்தவன் அமெரிக்காவில் தங்கி விட்டான். (நல்லதாய்ப் போயிற்று! நாடகத்தில் ஒரு நடிகரைப் பற்றிக் கவலையில்லை. நாடகக் குழுவினருக்கல்லவா அந்தக் கஷ்டம் தெரியும்!) இரண்டாவது பிள்ளை ராஜாவின் மனைவி லக்ஷ்மி பரம ஏழையாதலால் அவளை ஏசிப் பேசி மாமியார் தர்மா கொடுமைப் படுத்துகிறாள். 'டியர் இட்லி' மாதிரி 'டியர் அமெரிக்க மாமா, (லக்ஷ்மிக்கு) தோன்றி அல்லி தர்பாரை அடக்கி ஒடுக்குகிறார். கடைசியில் 'டியர் அமெரிக்க மாமா'வின் உண்மை சொரூபம் வெளியாகி, ஒரே நனைப்பில் சாயம் வெளுத்துப் போன மட்டரகப் புடவை மாதிரி பல்லிளித்துவிடுகிறது.

தர்மாவாக (அல்லியாக) வரும் வசந்தா மட்டும் இல்லையென்றால் இந்த நாடகமும் இல்லை. என்ன தொடிப்பு! என்ன நடிப்பு! அவருக்கு அடுத்தபடியாக மேடையை ஆட்கொண்டவர் தர்மாவின் சாதுக் கணவராக வந்து சக்கைப் போடு போட்ட ஆர். வி. ரமணிதான்! ஒவ்வொரு அசைவிலும் அவர் நடிக்கிறார்.

'டியர் அமெரிக்க மாமா'வாக வந்து நாடகத்துக்கு ஒரு டியர் மாற்றத்தைத் தரும் கே. மோகன் பாராட்டுக்குரியவர். அமெரிக்காவிலேயே வாழ்ந்து பழகிய பெரும்போக்கான பேச்சு, எதிலும் ஓர் அலட்சிய சுபாவம் எல்லாம் மோகனின் நடை, உடை பாவனைகளில் நன்கு வெளிப்பட்டது.

இந்நாடக ஆசிரியர், டைரக்டர் கே. கே. வைத்தியநாதனிடம் கேட்டேன், "நினைத்து உருகுகிற மாதிரி நாடகத்தில் ஒரு காட்சி கூட இல்லை; அழுத்தமான கதையும் இல்லையே!" என்று. "சிரித்து மகிழத்தான் இந்த நாடகம். பழைய ஹாஸ்யங்கள்தான் என்றாலும், ரசிகர்களின் ஆரவாரக் கையொலியைப் பார்த்தீர்களா? நகர சபா மெம்பர்கள் இந்த மாதிரி 'லைட் தீமை'த்தான் விரும்புகிறார்கள்" என்று கேட்டுக் கேட்டுப் புளித்துப் போன சமாதானத்தைச் சொன்னார்.

நாடகத்தில் 'தீம்' இல்லாவிட்டால் பரவாயில்லை. தீமை இல்லாவிட்டால் சரிதான் என்று நினைத்துக் கொண்டேன். —காந்தன்

தனி ஆவர்த்தனம்



உங்கள் வட்டிக்கும் வட்டி கிடைக்கிறதா?



ஸ்டேட் பாங்க் ரீஇன்வெஸ்ட்மெண்ட் ப்ளான்

இதில் உங்கள் மூலத் தொகைக்கு மட்டுமன்றி வட்டிக்கும் வட்டி கிடைக்கும்

பாடுபட்டுத் தேடுகிறீர்கள் பணத்தை. இப்போது ஸ்டேட் பாங்க், அந்தப் பணம், உங்களுக்காக உழைத்துப் பாடுபட வழி செய்கிறது. ரூ. 1,000/- அல்லது அதன் மடங்குத்தொகையை ஸ்டேட் பாங்க் மறுமுதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்க— உங்கள் வட்டிக்கும் வட்டி கிடைக்கும் விந்தை காண்பீர்கள்.

உங்கள் ஆரம்ப முதலீட்டிற்கு மாதாந்திர வட்டி கிடைக்கும். இந்த மாதாந்திர வட்டிக்கும் வட்டி கிடைக்கிறது.

மகள் திருமணம், மகன் மேல் படிப்பு, அல்லது உங்கள் ஓய்வு காலம் போன்ற தேவைகளுக்கேற்ப, தக்க சமயத்தில் சரியான தொகை கைக்குக் கிடைக்கும் வகையில் ஏற்ற கால வரையறையைத் தேர்ந்தெடுக்கலாம்.

PIN CODE FOR FAST MAIL

ரத்ததானம் செய்திடுவீர். பிறர் உயிரைக் காத்திடுவீர்.

பணம் அவசரமாகத் தேவைப்பட்டால், அதுவும் குறுகிய கால அறிவிப்பில்—உங்கள் டெபாஸிட் மீது கடன் பெற்றுக்கொள்ளலாம்.

வரிச்சலுகை

வருடாவருடம் கிடைக்கும் வட்டிக்கு மட்டுமே வரி கட்ட வேண்டுமேயல்லாது, டெபாஸிட் கால முடிவில் கிடைக்கும் மொத்த வட்டிக்கு அல்ல.

பாங்க் டெபாஸிட் மீதும் வேறு சில முதலீடுகள் மீதும் கிடைக்கும் மொத்த வட்டிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 3000/- வரை வருமான வரி கிடையாது.

பிடித்து வைத்துள்ள உங்கள் சம்பளம்/பஞ்சப்படி திருப்பித் தரப்படுகையில், அவற்றிலிருந்து கூடுதல் பலன் பெறும் வாய்ப்பு.

உங்கள் தொகையை ஸ்டேட் பாங்க் ரீ-இன்வெஸ்ட்மெண்ட் திட்டத்தில் முதலீடு செய்க.

ரூ. 100/- மற்றும் அதற்கு மேற்பட்ட தொகையை முதலீடு செய்யலாம். (ரூ.10-ன் மடங்கில்) ஏற்றுக் கொள்ளப்படும்

மாதங்கள்	ஸ்டேட் பாங்க் மறுமுதலீட்டுத் திட்டத்தில் ரூ.1000/- இட்டால் கிடைக்கும் தொகை
13	ரூ. 1090.22
25	ரூ. 1180.71
37	ரூ. 1318.46
49	ரூ. 1442.14
61	ரூ. 1659.02
62	ரூ. 1672.84
72	ரூ. 1817.59
84	ரூ. 2007.92
96	ரூ. 2218.17
108	ரூ. 2450.45
120	ரூ. 2707.04

மேலும் விவரங்களுக்கு, நாடெங்கிலுமுள்ள 4000 ஸ்டேட் பாங்க் அலுவலகங்களில் ஏதாவதொன்றுடன் தொடர்பு கொள்க.

ஸ்டேட் பாங்க்

SBI-22-203 R Tam

அணை உடைத்து எழும் எண்ணம்!



□ 'அணை உடைத்துக் கொண்டபோது' கதை படித்ததும் பாராட்டியே ஆகவேண்டும் என்ற உணர்ச்சியை என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள இயலவில்லை. எனவே எழுதுகிறேன்.

சென்னை—31
11—10—76 துர்வாஸ ஜே. வி. நாதன்

□ வட்டமேஜையில் பிரசுரமாகியுள்ள திரு கே. இராமமூர்த்தியின் கடிதம் பார்த்தேன்.

பாரதியார் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த வீட்டை அரசுடைமையாக்க ஆக்கபூர்வமாகச் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. முயற்சி எடுத்ததை இத்தருணத்தில் போற்றக் கடமைப் பட்டுள்ளோம். அவர் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுத் தலைவராக இருந்த போது, அந்த நூலக ஆணைக் குழு சார்பிலேயே பிரஸ்தாப வீட்டை விலைக்கு வாங்க முயற்சி எடுக்கப்பட்டது. அதற்காக நூலக ஆணைக் குழுவின் நிதியிலிருந்து அடையாளமாக ஒரு லட்சம் ரூபாயும் ஒதுக்கி வைக்கப் பட்டது. வீட்டின் சொந்தக்காரரோடு தமிழரசுக் கழகத் தலைவர் பேச்சு வார்த்தையும் நடத்தினார். பேச்சு வார்த்தை வெற்றி பெறவில்லை. அப்போதைய கல்வி அமைச்சரை அணுகி, பாரதியார் வாழ்ந்த வீட்டைக் கைப் பற்றித் தரவேண்டும் என்று தமிழரசுக் கழகத் தலைவர் கேட்டுக் கொண்டார். அரசு தயங்கியது. வீட்டுக்காரர் அரசின் நடவடிக்கையை ஆட்சேபித்து நீதி மன்றம் சென்றால் என்ன செய்வது என்பதே அரசின் தயக்கம். இன்று ஆளுநர் அரசுடைமையாக்கத் துணிந்து விட்டார்! எப்படியோ அன்று தமிழரசுக் கழகத் தலைவர் எடுத்த முயற்சி வெற்றி பெறவில்லை என்றாலும், அவருடைய விருப்பம் இன்று நிறைவேறுகிறது.

வாழ்க, பாரதியார் புகழ்!

சென்னை-33
8—10—76 பெ. சு. மணி

□ பாரதியார் இல்லம் தேசிய உடைமையாக வேண்டும் என்றும், பைகிராப்ட்ஸ் ரோட்டை மகா கவி பாரதியார் சாலை என்று மாற்ற வேண்டும் என்றும் முதல் தீர்மானம் போட்டவர் திருவல்லிக்கேணி சர்க்கிள் காங்கிரஸ் தலைவராகப் பணியாற்றும் இளம் தொண்டர் திரு பி. நாகராஜன்.

9—10—76
சென்னை—5 ஆ. செல்லப்பா

□ எழுத்தில் தெளிவும் தேசிய நோக்கும் பிரவகிக்கும்படி செய்யும் வல்லமை பெற்ற திரு நா. பார்த்தசாரதி, 'கல்கி'யில் கடந்த பதினைந்து வாரங்களாக எழுதி வந்த 'புது உலகம் கண்டேன்' பிரயாணக் கட்டுரைகள் சுவையும் பயனும் மிக்கதாய் இருந்தன. தமிழுக்குப் பிரயாணக் கட்டுரை புதிதல்லவென்றாலும், பிரயாணக் கட்டுரை இலக்கியத்துக்குப் 'புது உலகம் கண்டேன்' ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்தது. படிக்கப் படிக்கப் புதிய செய்திகள், கட்டப்பட்ட விதத்தால் சுவை மிகுந்து பயன் நல்கின.

இராஜபாளையம்,
9—10—76 குன்றக்குடி பெரியபெருமாள்

□ நாளைய திங்கள் முதல் ஹோட்டல் பண்டங்களை ஐந்து பைசா கூடுதலாக்கி விற்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஹோட்டல் பண்டங்கள் தயாரிக்க உபயோகப்படுத்தப் படும் எண்ணெய், ஏனைய பண்டங்கள் விலை ஏறியதை மூன்று மாதங்கள் கணித்த பின் அரசு மேற்கொண்ட முடிவு இது. நிற்க.

மத்திய அரசு ஊழியர்களின் ஊதியத்தில் ஐந்தாவது தவணையை (Additional D.A.) பிடித்து விட மத்திய அரசு இன்று உத்தர விட்டு விட்டது. ஜூலை மாதமே விலைவாசி இறங்கி விட்டதால் இம்முடிவாம்!

கம்பரசம்பேட்டை.
10—10—76 என். பானு

□ எத்தனையோ பெருமக்கள் எம். எஸ். அவர்களைப் பற்றி எழுதியுள்ளார்கள். ஒரு சாமானியன் என்ற முறையில் சில வரிகள் எழுத விரும்புகிறேன்.

சக்கர நாற்காலியிலேயே வாழும் நண்பர் ஒருவர் எனக்கு உண்டு. அவர் சிரமம் பாராமல் கச்சேரிக்கு வருவார். இப்படி உங்களை வருத்திக் கொள்ள வேண்டுமா என்றால் அவர் கூறும் பதில்: ''எம். எஸ். பாடும்போது கடவுளர் சொர்க்கத்தில் இல்லை; அவர்கள் கீழே இறங்கி வந்து எம். எஸ். அவர்களைச் சூழ்ந்திருந்து ஆர்வத்துடன் கேட்கிறார்கள்.''

பக்தி சிரத்தையால் இறைவனைப் பூவுலகத்துக்குக் கொண்டு வர முடியுமானால் தூய இசை இன்னும் சீக்கிரமாகவே அவரை அழைத்து வந்து விடுகிறது. எனவேதான் தியானம் செய்வது மட்டுமின்றி ஞானிகள் இசையாலும் ஆதியந்தமற்றவனைத் துதித்தார்கள். எம். எஸ். பொன் குரலெடுத்துப் பாடும்போது நாம் அகிலாண்டங்களின் இசையையே கேட்கிறோம். இன்னிசையின் அரசி அவர். அவரது கச்சேரிகளின் முடிவில் ஒரே ஒரு ஏமாற்றம் நமக்கு ஏற்படத்தான் செய்கிறது. சொர்க்கலோகத்தில் எங்கெங்கெல்லாமோ ஆனந்தமாய்ச் சஞ்சரித்துக் கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் இப்போது வீடு திரும்பவேண்டியிருக்கிறதே என்ற எண்ணம் தான் அது!

சென்னை — 8
15—10—76 எஸ். விட்டல்ராவ்

மறக்கமுடியாத பேராசிரியர்கள்!

விஜயா பாலகிருஷ்ணன்

சைரஸியா கல்லூரியில் என் மனத்தை மிகவும் கவர்ந்தவர் பேராசிரியர் சிவசங்கர மேனன் தான். 'கே. பி. எஸ்.' என்று மாணவர்களால் அழைக்கப்பட்ட இவருடைய ஆங்கிலப் புலமை அபாரம்! (அசல் வெள்ளைக்கார உச்சரிப்பில் ஆங்கிலம் பேசும் இவர் எங்கேயாவது பெரிய சர்வகலாசாலையில் பேராசிரியராக இருந்திருக்க வேண்டியவர். நம் சர்வகலாசாலைகளின் துரதிர்ஷ்டம், இவர் சொந்த ஊரையும், வீட்டையும் விட்டு வெளியே எங்கும் வேலைக்குப் போக விரும்பவில்லை.)

மேனன் ஒரு மேதை. அழகாகச் சித்திரங்கள் தீட்டுவார். மிருகங்களை வேட்டையாடுவது அவருக்குத் தண்ணீர்பட்ட பாடு. மலையாளத்தில் சிறந்த நகைச்சுவை எழுத்தாளரான அவர் வருடக் கடைசியில் கல்லூரியில் அரங்கேற்றும் நாடகத்தைப் பார்க்க ஊரே காத்திருக்கும்.

பரீட்சையில் நோட்ஸை அப்படியே காப்பி அடித்து ஒப்பித்திர்களோ, மேனன் பூஜ்யம் கிஜ்யம் போட்டு உங்கள் மானத்தை வாங்கமாட்டார். விடைத் தாளின் 'மார்ஜினில்' அழகாக ஒரு கூண்டும், கிளியும் வரைந்து வைத்திருப்பார்! வயதானபின் நோய்வாய்ப்பட்டு அவர் ஆஸ்பத்திரியில் கிடந்த போதுகூட, நர்ஸ்களையும் இதர சிப்பந்திகளையும் சுவரில் தீட்டத் தவறவில்லை. 'துணிப் பஞ்சம்' என்ற தலைப்பின் கீழ் அவர் வரைந்த வேடிக்கைச் சித்திரத்தை நான் எங்ஙனம் மறப்பேன்? உடம்பிலே மருந்துக்குக்கூடத் துணி இல்லாத ஒருவன் தலையிலே 'யானை முண்டாசுடன்' காட்சி அளித்தால் யாருக்குத்தான் சிரிப்பு வராது?

மாணவர்களைத் தன் எதிர்பாராத செயல்களினால் திழக்கிட வைப்பதில் மன்னன். அவருடைய அழகிய மகள் கார்த்தியாயினி மீது அத்தனை மாணவர்களுக்கும் 'ஒரு கண் உண்டு' (ஏன், இளைஞர்களான என்னைப் போன்ற ஆசிரியர்களுக்குக் கூடத்தான்!) மேனன் வேட்டையாட நிலம்பூர் காடுகளுக்குப் போயிருக்கிறார் என்று எண்ணி அவர் வீட்டுக்கு மெல்ல விஜயம் செய்தான் ஒரு 'ரோமியோ'. கார்த்தியாயினியிடம் ஓரிரு வார்த்தைகளாவது பேசலாமே! ஆனால் எதிர்பாராத விதமாகத் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருந்த மேனன்தான் வீட்டில் எதிர்ப்பட்டார். ஏமாந்த இளம் சிங்கம் பாடத்தில் சந்தேகம் கேட்க வந்திருப்பதாக ஒரு சமயோசித அஸ்திரம் தொடுத்தான். ஆனால் மேனனுக்கா தெரியாது, பிள்ளையாண்டானின் அந்தரங்க ஆசை? உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே சென்றார். மகள் கார்த்தியாயினியுடன் வெளியே வந்தார்.

"என்டே பொன்னு மகளே! இந்தப் பிள்ளையாண்டானுக்கு முன் ஐந்து நிமிஷம் அசையாமல் நில். அவன் நன்றாகப் பார்த்துத் திருப்தி அடையட்டும்! பாவம், ஐந்து மைலுக்கப்பால் இருந்து உன் தரிசனத்துக்காகவே இந்தச் சுடும் வெய்யிலில் வந்திருக்கிறான்" என்றாரே பார்க்கலாம்!

மேனனுக்கு அடுத்தபடியாகக் குறிப்பிட வேண்டியது பேராசிரியர் முகுந்தையரைத் தான். சதா தலைப்பாகையும், கோட்டுமாகக் காட்சி அளித்த இவருக்கு 'எக்ஸ்டிரா ஸென்ஸரி



கல்லூரிக் கதை-2



ஒரு பையன்: என் அப்பா எந்த சப்ஜெக்ட் கொடுத்தாலும் ஆறுமணி நேரங்கூடப் பேசுவாங்க தெரியுமா உனக்கு!

மற்றவன்: போடா போ. என் அம்மா சப்ஜெக்ட் இல்லாமலேயே ஆறுமணி நேரம் பேசுவாங்க!

-சரஸ்வதி பஞ்சு

பெர்ஃபெக்ஷன்' இருப்பதாகப் பேசிக் கொள்வார்கள். ஒரு தடவை இவருக்குப் பதின்மூன்றும் நம்பர் கட்டடமொன்று தீப் பிடித்து எரியப் போவதாக 'மனத் தந்தி' வந்தது! தொடர்ந்து கட்டடம் இருக்கும் தெரு அவர் மனக் கண் முன் தோன்றியது. தெருவிலிருந்த ஆலமரம், கோயில், குளம் முதலியவற்றிலிருந்து தீப் பிடிக்கப் போகும் கட்டடம் கல்லூரியேதான் என்று சாதித்தார். கல்லூரியின் கதவு நெம்பர் பதின்மூன்றாக இருக்கப் போய் எல்லாரையும் அச்சம் பிடித்துக் கொண்டது. ஏற்கவே ஐயர் சொன்ன ஜோசியம் ஓரிரு தடவை பலித்திருந்தது. எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது என்று தீர்மானித்தார் பிரின்ஸிபால் ராமையர். கல்லூரி காம்பவுண்டுக்குள் யாரும் ஒரு வார காலத்துக்கு சிகரெட் பிடிக்கக் கூடாது என்று உத்தரவு போட்டார். இடீரென்று தீப்பற்றிக் கொண்டுவிட்டால் எந்த ஜன்னல் வழியாகக் குதித்து வெளியேறுவது என்று கணக்குப் போடத் தொடங்கினேம் பயந்தாங் கொளிகளான நானும், முகம்மது கோயாவும்.

ஐயரின் ஜோசியம் பலிக்காமல் போகவில்லை. கட்டடம் தீப்பிடித்து எரிந்தது! ஆனால் நாங்கள் பணியாற்றின கைரலியா கல்லூரியல்ல. ராவுண்ணி நாயரின் டீக் கடை. உடனே ஐயர் அந்தக் கடையின் கதவு நம்பரைக் கேட்டார். முப்பத்தொன்று என்று தெரிந்ததும் பின்வருமாறு மொழிந்தார். ''பார்த்தீர்களா, என் ஜோசியம் பலித்து விட்டது. என் மனத்தில் தோன்றிய நம்பர் பதின்மூன்று. அதைத் திருப்பிப் போடுங்கள். முப்பத்தொன்று. நான் நம்ம ஊர் குமாஸ்தாக்கள்தான் கவனக் குறைவினால் தவறுகள் செய்வார்கள் என்று எண்ணியிருந்தேன். ஆவி உலகிலும் இதே கதைதான் போலிருக்கு! எங்குமே அந்த நாலையத் திறமை இல்லை.''

பௌதிகப் பேராசிரியர் ஆராவமுதாச்சாரியை நினைக்கையில் ஒரு நிகழ்ச்சி நினைவு வருகிறது. மாணவர்களால் 'குடை தாங்கிப் பெருமாள்' என்று அழைக்கப்பட்ட இவருக்கு அரை டஜன் பெண்கள் உண்டு. யாரைச் சந்தித்தாலும், ''பெண்கள் எல்லாம் குதிராட்டம் வளர்ந்து விட்டதுகள். சீக்கிரம் கல்யாணத்தை முடித்து விட வேண்டும். உங்களுக்குத் தெரிந்து யாராவது நல்ல பையன்கள் இருக்கிறார்களா?'' என்று விசாரிப்பார்.

வழக்கம்போல் ஆங்கில டியூட்டரான மூர்த்தியிடமும் இதே கேள்வியைக் கேட்டார். அவன் கொஞ்சம் யோசித்த பின் ''பக்கத்து மிஷனரி காலேஜில் ஒரு பையன் இருக்கான்; தங்கமானவன்'' என்றான்.

''பிள்ளையாண்டான் ஆஸ்திகன்தானே? அது ரொம்ப முக்கியம். சிகரெட் கிகரெட் பிடிக்கக் கூடாது. கெட்ட பழக்கங்கள் எதுவுமே இருக்கக் கூடாது.''

''நான் சொல்கிற பையன் படிப்பில் மகா கெட்டிக்காரன். சதா ஈசுவர விசாரம்தான். சிகரெட் குடிக்க மாட்டான். சிறந்த குணங்களென்று நாம் போற்றும் அத்தனையும் அவனுக்குண்டு.''

''அவன் விலாசத்தைத் தா. உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு.''

''அங்கேதான் ஒரு சின்னச் சிக்கல். அவன் பெயர் எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால் ரோல் நம்பர் 300. பி.ஏ. பொருளாதாரம்.''

ஆராவமுதாச்சாரி மறு நாள் அதிகாலையில் பக்கத்துக் கல்லூரிக்குப் போன் செய்தார். நெம்பர் 300ஐத் தான் அவசரமாகப் பார்க்க விரும்புவதாகத் தெரிவித்தார். கைரலியா கல்லூரியிலிருந்து தன்னை ஏன் 'அர்ஜன்டா'க அழைக்கிறார்கள் என்று ஒன்றும் புரியாமல் குழம்பின கத்தோலிக்க பிரதர் பெஞ்சமின் (பாதிரி) அமுதாச்சாரியைத் தேடி வருவதற்குள் கல்லூரி காண்டீனுக்கு ஓடி விட்டான் மூர்த்தி. அங்கே தன் நண்பர்களிடம் அமுதாச்சாரியை 'ஏப்ரல் முட்டாளா'க்கின விஷயத்தை விவரித்துக் கொண்டிருந்தான்.

கதை அத்துடன் முடிந்துவிடவில்லை. வருஷக் கடைசியில் 'ஸ்மார்த்தப் பையனாக' இருந்தும் மூர்த்தி தலையில் தன் பெண் நப்பின்னையை வைத்துக் கட்டினார் பேராசிரியர். இடைக்காலத்தில் மூர்த்திக்கும் அந்தப் பெண்ணுக்குமிடையே தெய்வீகக் காதல் தோன்றி வளர்ந்திருந்தது!

''அவன் என்னை ஏப்ரல் முட்டாளாக்கினதாக ஊர் முழுதும் சொல்லிண்டு திரிகிறான். நான் அல்லவோ அவனை முட்டாளாக்கினேன். சல்லிக் காசு வரதட்சிணை தராமல் அவனை மாப்பிள்ளையாக்கிக் கொண்ட என் சாமர்த்தியமல்லவோ சாமர்த்தியம்?'' என்று நீண்ட காலம் சொல்லி மகிழ்ந்து கொண்டிருந்தார் ஆராவமுதாச்சாரி.



சுத்தமான காப்பியையே விரும்பும் இரசிகர்களைத் திருப்திப்படுத்தும் ஒரே ஒரு இன்ஸ்டன்ட் காப்பி

இதுதான்.



அரைத்த, சுத்தமான
காப்பியிலிருந்து
தயாராகும் ஒரே
இன்ஸ்டன்ட் காப்பி
நெஸ்கஃபே ஒன்று தான்
தன்னிகரில்லாத,
தென்னிந்தியக்
காப்பியின் தெவிட்டாத
மணத்தை—பொடியில்—
அள்ளித் தருகிறது
நெஸ்கஃபே. நூற்றுக்கு
நூறு பத்தரை மாற்றுப்
பொன்னைப் போல—
சுத்தமான இன்ஸ்டன்ட்
காப்பி நெஸ்கஃபே ஒன்றே.

உலகெங்கும்
அதிகமாய்
விற்பனையாகும்
இன்ஸ்டன்ட காப்பி

A **NESTLÉ** product


நெஸ்கஃபே

—100% சுத்தமான காப்பியிலிருந்து தயாராகும்
இன்ஸ்டன்ட் காப்பி இது ஒன்றே.

HMGM-28-75 TAM

சிரிப்பு ராக்கெட்டுகள்

— தரஜா



''ஏய்! மாப்பிள்ளைக்குத் தீபாவளிப் பட்சணம் கிட்சணம் எதுவும் கொடுத்துத் தொலைக்காதே! ஆமாம், சொல்லிட்டேன்!''

''ஏன் இப்படி உளர்றேள் இடந்து?''

''உளறல்லே!... அவர் சுகாதார இன்ஸ்பெக்டர்டி... கலப்படம்னு தெரிஞ்சால் நம்ம பேரிலேயே கேஸ் போட்டுடுவார்!''

● ● ●

''மாப்பிள்ளே! மன்னிக்கக்கனும்! வைர மோதிரம் வாங்கிப் போட முடியல்லே... அதுக்குப் பதிலா...''

''வேறே என்ன பண்ணப் போறீங்க?''

''நம்ம ஊர் டெண்ட் சினிமாவிலே ''மாய மோதிரம்'' படத்துக்கு உங்களுக்கும் மீனுவுக்கும் ரெண்டு சீட் புக் பண்ணியிருக்கேன்!''

● ● ●

''சார்! உங்க ஒயரிங் எய்டை ரிப்பேர் பண்ணியாச்சு. எடுத்துக்கிட்டுப் போறீங்களா?''

''தீபாவளியெல்லாம் முடிஞ்சு, பட்டாசு சத்தம் ஓயட்டும் — அப்புறமா வந்து வாங்கிக்கறேன்!....''

''அம்மா! விடியற்காலையிலே என்னை எழுப்பறியாம்மா?''

''எழுப்பறேன்டா கண்ணு!''

''உன்னை யாரும்மா எழுப்புவா?''

''அப்பா எழுப்புவார்...''

''அப்பாவை யாரும்மா எழுப்புவா?''


''நீ கவலைப்படாதேடா கண்ணு!... தீபாவளிச் செலவை நினைச்சுண்டா இன்னும் ஒரு மாசத்துக்கு அவருக்குத் தூக்கமே வராது!''

● ● ●

'' நானும் இருபத்தைஞ்சு வருஷமா ஜோக்ஸ் போடறேன்... வருஷா வருஷம் மைசூர்பாகைச் சுத்தியலாலே உடைக்கிறது பத்தி ஜோக் போட்டு எனக்கே அலுத்துப் போச்சு... அதனாலே இந்த வருஷம் மாத்திப் போட்டிருக்கேன்....''

''எப்படி மாத்தியிருக்கீங்க?''

''சுத்தியலை மைசூர்ப் பாகாலே உடைக்கிற மாதிரி!''



''மாப்பிளே! அது யார் உங்க கூட வரது? உங்க சிநேகிதாளா?''

''இல்லே...இவர் வைர வியாபாரி. நீங்க எனக்குக் கொடுக்கப்போகிற வைர மோதிரத்திலே இருக்கிறது அசல் வைரம்தானுன்னு இவர் பார்ப்பார்... இதோ இவர் பட்டுப் புடவை நெய்கிறவர். உங்க பொண்ணுக்கு வாங்கியிருக்கிறது அசல் பட்டுதானா, ஜரிகை நிஜமான ஜரிகையான்னு இவர் பரிட்சை பண்ணுவார்... மூணாவது பேர்வழி தில்லி பவன் சரக்கு மாஸ்டர்... உங்காத்து தீபாவளிப் பட்சணம் அசல் நெய்யிலே பண்ணினதுதானுன்னு இவர் பார்த்துச் சொல்வார்....''

● ● ●

''குவெய்த்திலிருந்து தலை தீபாவளிக்கு மாப்பிள்ளையும் பொண்ணும் வந்திருந்தா... மாப்பிள்ளை தகராறு பண்ண ஆரம்பிச்சுட்டார், எண்ணெய் தேய்ச்சுக்க முடியாதுன்னு...''

''ஏனும்?''


''அவருக்கு குருட் ஆயில் தேய்ச்சுண்டு தான் பழக்கமாம்!''


''இதுக்குத்தான் எண்ணெயை வைச்சுப் பரக்கப் பரக்கத் தேய்ச்சுக்க வேண்டாம்னு அப்பவே சொன்னேன். தலையிலே இருந்த இரண்டொரு முடியும் கொட்டிப்போய், தீபாவளியும் அதுவுமா இப்படி நிக்கிறீங்களே!...''

● ● ●

''தீபாவளியும் அதுவுமா யார் வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கா உங்களுக்கு?''

''நம்ம வீட்டு வேலைக்காரி முனியம்மா தான்... மூணு வருஷமா தீபாவளி இனாம் கொடுக்கல்லேன்னு கேஸ் போட்டிருக்கா!''





கடல்புக்கு உயிர்கொன்று
 வாழ்வர் நின் ஐயர்
உடல்புக்கு உயிர்கொன்று
 வாழ்வை மன் நீயும்.
கொடுங்கண் வலையால்
 உயிர்கொள்வான் நுந்தை
நெடுங்கண் வலையால்
 உயிர் கொல்வைமன் நீயும்.
ஓடும் திமில் கொண்டு
 உயிர் கொள்வர் நின் ஐயர்
கோடும் புருவத்து
 உயிர்கொல்வைமன் நீயும்.

(திமில் — மீன் பிடிக்கும் படகு)

பாட்டுடைத் தலைவன் வேறொருவன் என்பதனை மறந்து, அந்தப் பாத்திரத்தோடு தானும் ஒன்றிப் பாடினான் கோவலன். உண்மையில் கண்ணகியையே உளத்தில் நினைத்துப் பாடினான் ஆதலால், ''இவன் வேறொருத்தியை நினைத்து மனமுருகிப் பாடினான்'' என்ற முடிவுக்கு வந்து விட்டாள் மாதவி. அந்த வேறொருத்தி கண்ணகி என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. மூன்றாவதான ஒருத்தி என்ற முடிவுக்கே அவள் வந்தாள். அதனால், கோவலன் பாடியதைக் கேட்டு மகிழ்ந்தவள்போல் பாவனை காட்டி உள்ளத்திலே அவன்பால் ஊடல் கொண்டவளாகி அவன் கையிலிருந்த யாழை வாங்கிக்கொண்டு தானும் பாடத் தொடங்கினாள். ஆம்; கோவலன் பாடியதற்குப் போட்டியாக!

ஆங்கு, கானல் வரிப் பாடல்
 கேட்ட மான் நெடுங் கண் மாதவியும்,
'மன்னும் ஓர் குறிப்பு உண்டு;
 இவன் தன் நிலை மயங்கினான்' என,
கலவியால் மகிழ்ந்தாள் போல,
 புலவியால் யாழ் வாங்கி
தானும் ஓர் குறிப்பினள்போல்,
 கானல் வரிப் பாடல் — பாணி,
நிலத் தெய்வம் வியப்பு எய்த,
 நீள் நிலத்தோர் மனம் மகிழ,
கலத்தொடு புணர்ந்து அமைந்த
 கண்டத்தாள் பாடத் தொடங்கும்மன்.

கலையரசியான மாதவி பரத்தையர் குலத்தில் பிறந்தவள் என்றாலும் கோவலனைத் தவிர, பிறிதொரு ஆடவனை நெஞ்சாலும் நினைத்தறியாதவள். தனது நெஞ்சத்தைக் கோவலனுக்கே கோவிலாக்கியவள். அப்படியிருந்தும், தன்னை மறந்து வேறொருத்தியை நினைந்து கோவலன் கானல்வரி பாடினான் என்ற தவறான முடிவின் காரணமாகத் தானும் கோவலன் அல்லாத வேறொரு ஆடவனை நினைத்தவள் போலப் பாசாங்கு செய்து கானல் வரி பாடத் தொடங்கினாள்.

வெறும் நடிப்புத்தான் என்பதனை உணர்த்துபவர் போல, ''தானும் ஓர் குறிப்பினள் போல்'' என்று இளங்கோவடிகள்கூறுகின்றார். ''நிலத் தெய்வம் வியப்பெய்த; நீள்நிலத்தோர் மனம் மகிழ, கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாள்'' பாடத் தொடங்கினாள் என்கிறார் இளங்கோ.

நிலமகள் உத்தமக் கற்பினளான மாதவியாள் கோவலன் அல்லாத வேறொருவனை நினைத்தது போல் பாவனை செய்து பாடத் தொடங்கியது கண்டு வியப்படைந்தாள். இதனால் கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகி வீட்டுக்குப் போக நேரும் என்பதால் உலகிலுள்ளோர் மனம் மகிழ்ந்தார்கள் என்பது கவிஞர் கற்பனை.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

ஆக்கசக்தி நெருக்கடியினால் ஏற்பட்ட சங்கடமான நிலை டாடா ஸ்டீலிலுள்ள எங்கள் இளம் நிபுணர்களுக்கு அதைத் திறம்பட சமாளிக்கும் ஆற்றலை அளித்தது.

ஆக்கசக்தி உபயோகத்தில் சேமிப்பு பற்றிய தீவிரமான ஆராய்ச்சிகள் பல புது வழிகளைப் புலப்படுத்தியுள்ளன. கம்பஸ்சன் ஏர் கண்ட்ரோல் ஸிஸ்டம்களைப் பல தொழிலிடங்களில் நிறுவி வியர்த்தமாகும் காஸினால் ஏற்படும் உஷ்ண நஷ்டத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டுள்ளது; தவிர எரிபொருள் தரமும் சீராக்கப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் வேஸ்ட்ஹீட் ரெகூப்பரேட்டர் ஸிஸ்டம்கள் மீண்டும் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் செயலாற்றலை உச்சநிலைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஃபர்னஸ்களில் இன்ஸுலேஷன் செய்யப்பட்டதோடு அவற்றில் காலத்திற்கேற்றவாறு புதுமைகள் செய்யப்பட்டுள்ளன. உச்சநிலையில் மறு-உபயோக முறைகளின் பயனாக குளிர்ச்சிக்கான தண்ணீர் பம்ப் செய்வது குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்திச் செலவில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கசக்திக்காகச் செலவிடும் தொழிற்துறையில் இந்த சேமிப்புகள் மிக மதிப்புள்ளவையாகும். காரணம், தாங்கமுடியாத ஆக்கசக்திச் செலவின் பளுவை சமாளிக்க இவை உதவுகின்றன.

இளமை மிடுக்கோடு இருப்பவர்கள் என்றென்றும் புதுப்புது சோதனைகளை வரவேற்பார்கள்.



டாடா ஸ்டீல்

TIS-1247 A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

